பக்கங்கள்: இருபத்து எட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 24 வியாழக்கிழமை (10.11.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 349



14 நல்லிணக்கத்துக்கு தேவைப்படும் புதிய பொறிமுறை



21 மக்களைத் திரட்டி போராட வாரீர்



25 இந்தியா வென்றது

## நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை அமெ., இந்தியாவிடம் கையளிக்க முடிவு

கொழும்பு, நவ.10

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை வெளியிடப்பட்ட கையோடு அதன் பிரதிகளை அமெரிக்காவிடமும், இந்தியாவிடமும் கையளிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற இறுதிச் சண்டையில் இடம்பெற்றன எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என சர்வதேச சமூகம் வலியுறுத்திவரும் நிலையில், அதற்குப் பதிலளிக்கும் வகையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை வெளியிடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில், ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவந்த கையோடு அதனை அமெரிக்காவிடமும் இந்தியாவிடமும் முதலில் கையளித்து, அவர்களின் பார்வைக்கு உட்படுத்த அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. உத்தியோகப் பற்றற்ற ரீதியில் இந்த ஆவணக் கையளிப்பு இடம்பெறும் என அரசுக்கு நெருக்கமான வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

அதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூனிடம் கையளிப்பதா என்பது தொடர்பாக இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-சி)

## லண்டனில் இருந்து வந்தவர் வாகன விபத்தில் பலி

கொழும்பு, நவ.10

இலங்கையில் உறவினர்களுடன் விடுமுறையைக் கொண்டாட லண்டனிலிருந்து வந்த கரவெட்டிவாசி புத்தளம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்துள்ளார்.

யாழ். - நெல்லியடியிலிருந்து சென்ற குறித்த நபரின் உறவினர்கள் அவரை விமான நிலையத்திலிருந்து வான் ஒன்றில் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் வந்து கொண்டிருந்த வேளையில் அவர்கள் பயணித்த வான் வேறொரு வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் லண்டனில் இருந்து வந்த யாழ்ப்பாணம் கரவெட்டியைச் சேர்ந்த தியாகராஜா செல்வரூபன் (வயது - 34) என்பவர் ஸ்தலத்தில் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்தில் படுகாயமடைந்த சிறுமி ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில்

பக் 04

## டெங்கு நுளம்பு பெருகும் வகையில் செயல்பட்டவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், நவ.10

பிளாஸ்ரிக் கழிவுப் பொருள்களை நீர் தேங்கி நிற்கும் வகையில் வைத்திருந்து டெங்கு நுளம்பு பெருகும் வகையில் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த ஒருவரைக் கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்.நீதிமன்றில் நீதிவான் ஏ.ஏ.ஆனந்

பக் 28

## பரந்தன் இரசாயன ஆலையை மீளமைக்கத் திட்டம்

கொழும்பு, நவ.10

போர்க்காலத்தில் சேதமடைந்த பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தை மீண்டும் பரந்தனில் 217 ஏக்கர் காணியில் நிர்மாணிப்பதற்கு 300 கோடி ரூபா தேவையென்பதை சுட்டிக்காட்டி திட்ட அறிக்கையொன்று சமர்ப்

பக் 28

# காணிப் பதிவை நிறுத்த உத்தரவு

### மேன்முறையீட்டு நீதிமன்று இடைக்காலத் தடை

கொழும்பு, நவம்பர் 10

வடக்கு கிழக்கில் உள்ள அனைத்துக் காணிகளையும் பதியும் நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையில் வழங்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை அடுத்து வடக்கு கிழக்கில் காணிகளைப் பதியும் நடவடிக்கைகளை நிறுத்துமாறு காணி அமைச்சு வடக்கு கிழக்கு மாகாண அலுவலகங்களுக்கு உத்தரவிட்டுள்ளது. "கொழும்பிலிருந்து கிடைத்த உத்தரவை அடுத்து ஜனவரி 19ஆம் திகதி வரை காணிப் பதிவை இடைநிறுத்தி வைத்திருக்கிறோம்" என்று வடமாகாணக் காணி ஆணையாளர் உதயனுக்குத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தாக்கல் செய்த மனு மீது நேற்று விசாரணை நடந்தது. மனுவை விசாரித்த நீதிபதி டபிள்யூ.எல்.ஆர்.சில்வா, நவம்பர் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னதாகக் காணிகளைப் பதிவு செய்ய வேண்டும் என்ற அறிவித்தல் மீது இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச காணிகள் மற்றும் தனியார் காணிகள் அனைத்தையும் பதிவு செய்யுமாறு காணி அமைச்சு பிரதேச செயலகங்களுக்கு சுற்றறிக்கை மூலம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

அரசின் இந்த நடவடிக்கை தமிழ் மக்களிடம் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியதுடன் எதிர்ப்பையும் கிளப்பியது. எதிர்க்கட்சி

பக் 04

## சபையில் அமைச்சருக்கு நேர்ந்த சங்கடம்

கொழும்பு, நவ.10

எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரால் 'கணக்கு வழக்கு'த் தொடர்பான கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்க முடியாமல் இன்னொரு அமைச்சரின் உதவியை நாடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை நேற்று நாடாளுமன்றில் அமைச்சர் ஒருவருக்கு ஏற்பட்டது.

ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க நேற்று வாய்மூல விடைக்கான

பக் 26

## மன்னார், முல்லை அரச அதிபர்கள் திடீர் இடமாற்றம்

கொழும்பு, நவ. 10

மன்னார் மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன் மற்றும் முல்லைத்தீவு அரச அதிபர் ஏ.பத்திநாதன் ஆகியோர் நேற்றுப் புதன்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு அரச அதிபர் ஏ.பத்திநாதன் மொனராகலைக்கு இடமாற்றப்பட்டதை அடுத்து என்.வேதநாயகன் அந்த இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்டத்துக்கு புதிய அரச அதிபராக சரத் ரவீந்திர நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த இடமாற்றங்கள் கடும் விமர்சனத்தைக் கிளப்பி உள்ளன. மன்னார் அரச அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டு அவரது இடத்துக்குப் பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பது தமக்கு அதிர்ச்சி அளித்திருப்பதாக அரச அலுவலர்கள் தெரிவித்தனர்.

பக் 26

## சம்பூர் அனல் மின்நிலைய ஒப்பந்தம் பெப்ரவரியில் கைச்சாத்திட முடிவு

### மாலைதீவில் இந்தியப் பிரதமருக்கு அறிவிப்பார் மஹிந்த

கொழும்பு, நவ.10

திருகோணமலை சம்பூரில் அனல் மின் நிலையம் அமைப்பதற்கான இறுதி ஒப்பந்தத்தை எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில் கைச்சாத்திடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

மாலைதீவில், சார்க் நாடுகளின் தலைவர்களுக்கான கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்திக்கும்போது இதுபற்றி அறிவிப்பாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியுடன் சென்றிருக்கும் மின்சக்தி, எரிபொருள் துறை அமைச்சர் சம்பிக்க

பக் 27

## சம்பள உயர்வு கோரி அரச ஊழியர் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, நவ.10

அடுத்த ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி கொழும்பு, லிப்டன் சுற்றுவட்டத்தில் நேற்று நண்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

தேசிய சுதந்திர முன்னணி தொழிற்சங்கம், சுகாதார சேவைகள் சங்கம், அரச மாகாண முகாமைத்துவ உதவியாளர் சங்கம், அரசாங்க அச்சிடுவோர் சங்கம், காப்புறுதி தொழிலாளர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து

பக் 28

## ஐ.தே.க. எம்.பியாக மனோ?

கொழும்பு, நவ.10


ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் விரைவில் நியமிக்கப்படவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மனோ கணேசனுக்கு நாடாளுமன்ற பதவியை வழங்குவதன் பொருட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகவுள்ள எம்.சுவாமி

பக் 27

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021 2229933
தொலைநகல்: 021 2229944
செய்தி/பக்கங்கள்:
021 5679933
021 5679944
விளம்பரம்: 021 5671111
விநியோகம்: 021 5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.

## மகாபொல கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நாளை

யாழ்ப்பணம், நவ.10

யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் முதலாம் கல்வி ஆண்டில் கல்வி பயிலும் 82 மாணவர்களுக்கான மகாபொல புலமைப்பரிசில் சான்றிதழும் காசோலையும் வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பிரதான மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# புலிகளின் ஏழு கப்பல்களும் எங்கே? பழைய இரும்புக்கு விற்றுவிட்டீர்களா?

விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான கப்பல்களைப் பழைய இரும்புக்கு விற்று விட்டீர்களா? எட்டுக் கப்பல்களைக் கண்டுபிடித்துள்ளோம் என்று தம்பட்டம் அடிக்கும் அரசாங்கம் அவை எந்த நாட்டில் நங்கூரமிட்டுள்ளன என்பதையாவது கூறமுடியுமா? என்று கேட்டார் ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினரான தயாசிறி ஜயசேகர.

நேற்று நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது பிரதமரிடமே தயாசிறி ஜயசேகர இந்தக் கேள்வியை எழுப்பினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான கப்பல்களுள் இதுவரை இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டவை எத்தனை? அவை எங்கே நங்கூரமிடப்பட்டுள்ளன? அவை எங்கே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன? அவற்றை எப்போது இலங்கைக்குக் கொண்டுவரப் போகிறீர்கள்? அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்று கேள்விகளைத் தொடுத்தார் தயாசிறி.

இந்தக் கேள்விகளுக்குப் பிரதமரின் சார்பில் ஆளும் கட்சிக் கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன பதில் அளித்தார்.

புலிகளுக்குச் சொந்தமான எட்டுக் கப்பல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றுள் ஒரு பெரிய கப்பல் இலங்கைக் கடற்படையினரால் பயன்படுத்தப்படுகின்றது. மற்றும் சில கப்பல்கள் சர்வதேச மட்டத்தில் சட்டவிரோத செயற்பாடுகளிலும், ஆள்கடத்தல்களிலும் ஈடுபட்டு வருகின்றன. இன்னும் சில கப்பல்கள் தென்கிழக்கு நாடு ஒன்றில் நங்கூரம் இடப்பட்டுள்ளன என்று கூறினார்.

### கப்பல்களைக் கொண்டு வருவதில் சிக்கல்

ஐயா! இந்த அமைச்சர் ஒரே ஒரு கப்பலை மட்டும்தான் கடற்படையினர் பயன்படுத்துவதாகக் கூறுகிறார். அப்படியானால் மிகுதி ஏழு கப்பல்களையும் பழைய இரும்புக்கு விற்றுவிட்டார்களா? தென்கிழக்கு நாடு ஒன்றில் சில கப்பல்கள் நங்கூரமிடப்பட்டுள்ளதாகக் கூறுகிறார்.

அது எந்த நாடு என்றாவது கூற முடியுமா? இவற்றைக் கொண்டு வரவே முடியாதா? என்று மீண்டும் ஓர் இடைக் கேள்வியை எழுப்பினார் தயாசிறி.

சபாநாயகர் அவர்களே! இந்தக் கப்பல்கள் பல்வேறு வகையில் பலநாடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றை உடனடியாகக் கொண்டு வருவதில் சில சட்டச் சிக்கல்கள் காணப்படுகின்றன. இவை தொடர்பாகப் பரிசீலனை செய்து வருகின்றோம். அதேவேளை எந்த நாட்டில் நங்கூரம் இடப்பட்டுள்ளது என்பதைப் பாதுகாப்புக் கருதி வெளியிட முடியாது என்று சமாளித்து விட்டார் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. வழமையான வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஒருசில கேள்விகளுக்கு மட்டுமே பதிலளிக்கப்பட்டபோதும் அவை சபையில் சூடுகிளப்புவனவாகவே இருந்தன.

### மிஹின் எயாரில் முதலீடு பத்தாயிரம் கோடி! ஏழரைக் கோடி நஷ்டம்!!

ஜே.வி.பி. உறுப்பினரான அனுரகுமார திஸாநாயக்க மிஹின் லங்கா விமான நிறுவனத்துக்கு 2007ஆம் ஆண்டு முதல் அரசாங்கம் வழங்கி உள்ள நிதி எவ்வளவு? அதனால் திரட்டிய ஆதாயம் எவ்வளவு? நஷ்டம் ஏற்பட்டால் அதற்கான காரணம் என்ன? என்று சிவில் விமான சேவைகள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விக்குப் பதில் அளித்தார் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்க தயாரத்ன.

2007ஆம் ஆண்டுமுதல் 2011 வரை அரசு வழங்கிய முதலீடுகளையும் ஏற்பட்ட நஷ்டங்களையும் பட்டியல் போட்டுக் காட்டினார் அமைச்சர்.

### மடக்கிப் பிடித்தார் அனுரகுமார எம்.பி.

இந்த சமயத்தில் அமைச்சரை மடக்கிப் பிடித்தார் ஜே.வி.பி. உறுப்பினரான அனுரகுமார.

ஐயா! இந்த அமைச்சரின் கூற்றின்படி அரசாங்கம் இந்த விமான நிறுவனத்துக்குப் பத்தாயிரம் கோடி ரூபாவை முதலீடு செய்துள்ளது. அதேவேளை ஏழாயிரத்து 464 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இப்படியான ஒரு நிறுவனத்தை தொடர்ந்து நடத்த வேண்டுமா? மக்களின் பணம் வீணடிக்கப்பட வேண்டுமா? என்றார் அனுர.

ஆரம்பத்தில் பெரும் நஷ்டம் ஏற்பட்டாலும் இப்போது படிப்படியாக நஷ்டம் குறைந்துள்ளது. கூடிய விரைவில் இலாபம் ஈட்ட முடியும் என்று கூறிச் சமாளித்து விட்டார் அமைச்சர்.

### விவாதம் மீதான விவாதம்

கேள்விநேர சலசலப்பு ஓரளவு ஓய்ந்தபோது பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்ட நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களையும் சொத்துக்களையும் அரசுடமையாக்குவது தொடர்பான விவாதம் முன்மொழியப்பட்டது.

இந்த விடயம் முன்மொழியப்பட்டபோது சபாநாயகரின் அனுமதியுடன் எதிர்க்கட்சி தரப்பில் பூர்வாங்க ஒழுங்குப் பிரச்சினை ஒன்று எழுப்பட்டது.

### நீதிமன்றம் போலான நாடாளுமன்றம்

மேற்குறிப்பிட்ட சட்டமூலம் அரசமைப்புக்கும் நாடாளுமன்ற ஒழுங்கு விதிக்கும் நிலையியல் கட்டளைகளுக்கும் முரணானது. எனவே அதனை இந்தச் சபையில் விவாதிக்க முடியாது என்று எதிர்க்கட்சியினர் ஆட்சேபித்தனர்.

* சட்டமூலம் தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்தின் முன் இருக்கின்றன; தீர்ப்புகள் வழங்கப்படவில்லை.
* அரசமைப்பில் நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ள இறைமை மீறப்பட்டுள்ளது.
* நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளும் ஒழுங்கு விதிகளும் மீறப்பட்டுள்ளன.
* அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளன.

என்று பல்வேறு காரணங்களை மேற்கோள் காட்டிய எதிர்க்கட்சியினர் இந்த சட்டமூலத்தை சபையில் விவாதிக்க இடமளிக்கக் கூடாது என்று வாதிட்டனர்.

அதேபோன்று ஆளும்கட்சியினர் விவாதிக்க இடமளிக்க வேண்டும் என்று விடாப்பிடியாக நின்றனர்.




அரசமைப்பு மீறப்படவில்லை. அடிப்படை உரிமை மீறப்படவில்லை. உயர்நீதிமன்றம் சாதகமாகத் தீர்ப்பளித்துள்ளது. நாட்டின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சட்டமூலம் இது என்பதால் பிற்போடப்படாமல் விவாதத்துக்கு இடமளிக்க வேண்டும் என்றனர் ஆளும் தரப்பினர்.

சபையில் இடம்பெற்ற வாதப் பிரதிவாதங்களை அவதானித்தபோது நாடாளுமன்றம் ஒரு நீதிமன்றத்தைப் போன்ற தோற்றத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

இந்த விவாதத்தின்போது ஆளும்கட்சி உறுப்பினர்கள் அடிக்கடி சபாநாயகரின் கண்டிப்புக்கும் எச்சரிக்கைக்கும் உள்ளானார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(25 ஆம் பக்கம் பார்க்க)

# நிகழ்வுகள் இன்று

**பொதுக்கூட்டங்கள்**

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-250)

* * *

புன்னாலைக் கட்டுவன் தெற்கு கணேசா சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் மாலை 4.30 மணிக்கு கணேசா சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளன. சனசமூகக நிலையத் தலைவர் சு. செல்லப்பா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தெற்கு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவயோகம் செல்வவிநாயகர் கலந்து கொள்வார். (ம-313)

* * *

தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் 14 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் பிற்பகல் 3 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் ச.திருச்செல்வம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பாடசாலையின் அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதால் பொதுச் சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(ம-313)

* * *

யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவு சங்கத்தின் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் முற்பகல் 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் க. இலங்கநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன. (ம-313)

**இறுவெட்டு வெளியீடு**

யாழ். தேசிய கல்வியியற்கல்லூரி மாணவர்களின் கிட்ஸ் ஆங்கிலப் பாடல்கள் இறுவெட்டு வெளியீட்டு விழா காலை 8 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதமவிருந்தினராக கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் அதிபர் எஸ்.கே. யோகநாதன் கலந்து கொள்வார். (ம-313)

**அறிமுக விழாவும் கௌரவிப்பும்**

குப்பிளான் ஐ. சண்முகம் எழுதிய உதிரிகளும் சிறுகதைத் தொகுப்பு அறிமுகவிழாவும் நற்பணியாளர் கௌரவிப்பும் காலை 9 மணிக்கு குப்பிளான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளன. (ம-313-236)

**பரிசளிப்பு விழா**

பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க பாடசாலையின் பரிசளிப்பு விழா காலை 9 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் அருட்சகோதரி எ.எம்.ஜீ நீற்றா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிமனையின் கணக்காளர் திருமதி. த. ஆனந்தகிருஷ்ணன் கலந்து கொள்வார். (ம-130)

* * *

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா காலை 9 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் இரா. ஸ்ரீநடராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வ்டமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்து கொள்வார். (ம-253)

* * *

அல்வாய் வடக்கு றோ.க. தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும், ஒளிவிழாவும் முற்பகல் 11 மணிக்கு பாடசாலை முன்றலில் இடம் பெறவுள்ளன. பாடசாலையின் அதிபர் இ. மகேந்திரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம சிருந்தினராக சக்கோட்டை பங்குத் தந்தை அருட்திரு. அகஸ்ரின் கலந்து கொள்வார். (ம-236)

**வெளியீட்டு விழா**

ஜீன்ஸ் பிக்ஸ்சேர்ஸ் இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் எஸ்.அமல ஜீவனின் சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா காலை 9 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

**கலந்துரையாடல்**

''நேஷன் பெப்பியுளர் ரவல்ஸ் அண்ட் ரூறிஸ்'' நிறுவனத்தின் ஏற்பாட்டில் சுற்றுலாத்துறையின் வருகையின் பின் யாழ்ப்பாணமும் கலாசாரமும் என்னும் தலைப்பிலான சிறப்பு கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு இல.82 பிறவுண் வீதியில் உள்ள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

**திறப்பு விழா**

கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் திருமண மண்டபத் திறப்பு விழா காலை 9.30 மணிக்கு ஆலய பரிபாலன சபைத் தலைவர் த.தர்மராசா தலைமையில் நடை பெறவுள்ளது. (ம-313)

**நூல் வெளியீடு**

விரிவுரையாளர் விஸ்வ மகா தேவன் எழுதிய கல்வி முகாமைத்துவம் சுதந்திர இலங்கையில் கல்வி நிர்வாக மாற்றம் தொடர்பான நூல் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. (ம-313)

**இலக்கிய நிகழ்வு**

கொழும்புத் தமிழ்ச் சங்கம் வழங்கும் ''அற்றைத்திங்கள்'' என்னும் தனித்துவம் மிக்க இலக்கிய நிகழ்ச்சி மாலை 6 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் மு.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடக்குக் கிழக்கு மாகாண முன்னாள் கலாச்சார பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எஸ். எதிர்மன்னசிங்கத்தின் கருத்துப் பகிர்வு இடம்பெறும். (ம-313)

**ஆன்மிகச் சொற்பொழிவு**


யாழ். சின்மயா மிஷன் நடத்தும் ஆன்மிகச் சொற்பொழிவு முற்பகல் 10 மணிக்கு நெல்லியடி முருகமூர்த்தி ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சொற்பொழிவை பிரமச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய நிகழ்த்தவுள்ளார். (ம-253)


**நகர சங்கீர்த்தனம்**

யாழ். சத்தியசேவா நிலையத்தின் ஏற்பாட்டில் நகர சங்கீர்த்தனம் நிகழ்வு காலை 4.45 மணிக்கு இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகி வேதபாராயணம், காயத்திரி மந்திரம், பஜனை, விசேட சொற்பொழிவு, நாராயண சேவை என்பன இடம்பெறும், (ம-313)

**பாராட்டு நிகழ்வு**

தென்மராட்சி கல்வி வலய சமூக விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் இரத்தினம் சர்வேஸ்வரனின் சேவை நலன் பாராட்டு விழா இன்று காலை 9 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி நாகேந்திரராஜா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-10)





யாழ்.ஸ்ரீநாகவிகாரையின் வருடாந்த மஹோற்சவம் நேற்று ஆரம்பமாகியது. பௌத்த சமயாசாரப்படி பூஜை வழிபாடுகள் இடம்பெற்று மாலை 6 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட யானையுடன் பெரஹரா பவனியும் இடம்பெற்றது.

# யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும்

## இல்லையேல் போராட்டம் நடத்தவுள்ளதாகத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.10

யாழ். மாவட்டத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள் அனைவருக்கும் விரைவில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட வேண்டும். இல்லையேல் வன்னி மாவட்ட தொண்டர் ஆசிரியர்களைப் போன்று கவன ஈர்ப்புப் போராட்டத்தை நடத்த வேண்டி வரும். யாழ். மாவட்ட பாதிக்கப்பட்ட தொண்டராசிரியர் சங்கத் தலைவர் பி.சுபதீஸன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ். புதிய உயர் கல்லூரியின் மண்டபத்தில் இடம் பெற்றது. இந்தக் கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

52 தொண்டர் ஆசிரியர்கள் தகுந்த கல்வி இருந்த போதிலும் சேவைக் காலம் இல்லாத காரணத்தால் புறக்கணிக்கப்பட்டார்கள்.

அரச பாடசாலைகளில் பணியாற்றி வரும் தொண்டர் ஆசிரியர்களை யாழ். மாவட்டக் கல்வி அதிகாரிகள் பாராட்டுகின்றனர். ஆனால் நிரந்தர நியமனம் பற்றிய விடயத்தில் மௌனம் சாதிக்கின்றனர்.

அரச பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்கள் பணியாற்றக் கூடாது என்றும் கூறுகின்றனர். இவ்வாறு பாரபட்சம் காட்டுவது வேதனையளிக்கின்றது.

அரச பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக எந்தவித கொடுப்பனவுகளும் இன்றி கடமையாற்றி வருகின்றனர். கடந்த 2009 ஆம் ஆண்டு நியமனம் வழங்கும் போது புறக்கணிக்கப்பட்டோம். கடந்த 2009 ஆம் ஆண்டு 52 தொண்டர் ஆசிரியர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள். இருந்த போதும் சேவைக்காலம் போதாமை காரணமாக புறக்கணிக்கப்பட்டார்கள்.

எமது நிரந்தர நியமனம் தொடர்பாக உயர் கல்வி அதிகாரிகளோ, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களோ நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை.

காலங்காலமாக வழங்கப்பட்டு வரும் தொண்டராசிரியர் நியமனங்கள் தற்போது வழங்கப்பட மாட்டாது என்று கூறுவது அச்சத்தைத் தோற்றுவிக்கிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனத்தை உடன் வழங்கி தொண்டர் ஆசிரியர் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வர வேண்டும்- என்று தெரிவித்தார். (ம-311)

# மீளாய்வு செய்த வாக்காளர் இடாப்பு பார்வைக்கு

## புதியவர்களும் பதிவுகளை மேற்கொள்ளமுடியும்

யாழ்ப்பாணம், நவ.10

2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு மீளாய்வு செய்யப்பட்டு தற்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் கடந்த ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்கள் மற்றும் இதுவரை வாக்காளர்களாகப் பதிவு செய்யாதவர்கள் இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக உரிமை கோரிக்கை படிவத்தினூடாக விண்ணப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது: கடந்த 2010 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யத் தவறியவர்கள் மற்றும் தற்போது வெளியிடப்பட்டுள்ள 2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு மீளாய்வில் நீக்கப்பட்டுள்ளவர்கள் இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் உரிமைக் கோரிக்கை படிவத்தை கிராம சேவையாளர்களிடமோ அல்லது பிரதேச செயலகங்களிலோ பெற்று விண்ணப்பிக்க முடியும். இவை இரண்டும் பெற்றுக் கொள்ள முடியாவிட்டால் நேரடியாக மாவட்டச் செயலகத்திலுள்ள திணைக்களத்திலும் பெற்று விண்ணப்பிக்க முடியும்.

இவற்றைவிட தேர்தல் ஆணையாளரால் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கென விசேடமாக விநியோகிக்கப்பட்ட விண்ணப்பப் படிவமும் இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட விண்ணப்பப் படிவத்தினூடாக வெளிநாடுகளிலுள்ள தமிழ் மக்களும் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-15)

# மோசடியில் ஈடுபட்டுத் தண்டிக்கப்பட்டவர் மீண்டும் பலரை ஏமாற்றிப் பணம் கறந்தார்

## அவருக்கு உதவிய மூவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், நவ.10

யாழ். நகரில் ஆரம்பிக்கப்படவுள்ள தனியார் பாடசாலை ஒன்றில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி இளைஞர், யுவதிகளை ஏமாற்றி பணமோசடி செய்த குற்றச்சாட்டில் மூன்று பேர் யாழ். நீதிமன்ற உத்தரவுக்கமைய எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் ஏற்கனவே பல மோசடிகளில் தொடர்புடையவர் எனவும் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த நிறுவனத்தை இயக்கும் பிரதான நபர் கொழும்பில் வசித்து வருகிறார். யாழ். தாதியர் கல்லூரியில் கற்கையை மேற்கொண்டு தாதியர் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி கடந்த வருடம் இந்த நபர் பலரிடம் பண மோசடி செய்திருந்தார். இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின் யாழ். நீதிமன்ற உத்தரவுக்கமைய மோசடி செய்த பணத்தை உரியவர்களிடம் திருப்பி ஒப்படைத்தார். பின்னர் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

இந்த நிலையில் இவர் மீண்டும் இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளார். யாழ். டேவிட் வீதியில் இந்த நிறுவனத்தை இயக்கி அதற்கு முகாமையாளர் ஒருவரையும் ஏனைய உத்தியோகத்தர்களாக இரண்டு பேரையும் நியமித்து இவர் மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளார். இந்த மூவரும் ஒவ்வொருவரிடமும் இரண்டாயிரத்து 500 ரூபா வீதம் பணம் வசூலித்து வந்துள்ளார்.

இவர்கள் மோசடியில் ஈடுபட்டு வருவது தொடர்பாகப் பாதிக்கப்பட்டவர்களில் இரண்டு பேர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இதனடிப்படையில் அங்கு சென்ற பொலிஸார் மூவரையும் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

மூவரும் யாழ். நீதிமன்றில் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர். மூவரையும் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-4-14)

## மரண அறிவித்தல்கள்

### பாவிலு சொலமன்



பருத்தித்துறை புனித அந்தோனியார் பதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாவிலு சொலமன் நேற்று (09.11.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மேரி திரேசாவின் அன்புக் கணவரும் அல்பிறட் யோசப், அன்சன் ராஜேஸ்வரி (சுவீடன்), அன்ரன் திசா நாயக்கா (இந்தியா), காலஞ்சென்ற அரசரத்தினம் மற்றும் இராசநாயகம் (கனடா), வின்சன்துரை (சுவீடன்), சாள்ஸ்,தேவநாதன், தங்கராணி (சுவீடன்) ஆகியோரின் தந்தையும், அந்தோனிக்கம்மா, அந்தோனிப்பிள்ளை(சுவீடன்), எலிசபெத்ராணி (இந்தியா), ஞானசீலி (கனடா), செல்வராணி (சுவீடன்), மேரி லில்லி, தேன்மொழி,றொபேட் வேதநாயகம்(சுவீடன்), ஆகியோரின் மாமனும், லக்ஷனா(கனடா), மாறன் (கனடா), றொபிலா, மன்னன் ரவீந்திரன் (சுவீடன்), நிலா, லதா, ராஜன், வினோ, கலிஸ்ரா(சுவீடன்), நிலா, டிலா, நிஷாந்தன், நிஷாந்தினி, காலஞ்சென்ற வெனா(இந்தியா), கெபின், பிரேவின், ஜெரின், ஜெனோ (கனடா), சிந்துஜன், சிந்துஜா (சுவீடன்), ஜெயன் பிறஸ்லி, செரோமி, துஷியந்தன், தர்சினி, திவியன் (சுவீடன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுக்காக இன்று (10.11.2011) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புனித அந்தோனியார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

தகவல்: சொ. அல்பிறெட்
(சந்திரன் மகன்)

### தாதாபிள்ளை அரியரட்ணம்

(நிர்வாக உத்தியோகத்தர், தொழில் திணைக்களம்)



நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தாதாபிள்ளை அரியட்ணம் நேற்று (09.11.2011) புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாதாபிள்ளை - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - அரசபிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் கமலநாயகியின் பாசமிகு கணவரும் தாரகா, கனிஸ்ரோ, இந்துஷா, தாரங்கன், கோபிநாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தன், சத்தியகீர்த்தியின் பாசமிகு மாமனும் செல்வரட்ணம், தர்மரட்ணம், உதயரட்ணம், அசோகரட்ணம், சிவபாக்கியவதி, சந்திரகலா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2011) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

151, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### றோமான் இராசநாயகம்



பலாலியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட றோமான் இராசநாயகம் நேற்று (09.11.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றோமான் எலிசபேத் தம்பதியரின் மகனும் மாகிறேற்றின் கணவரும், காலஞ்சென்ற யோன் மற்றும் அனற், ம்னோ,பேணாட் ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்றவர்களான தேவநாயகம், சாள்ஸ் மற்றும் இராஜேந்திரம் , பிலிப்பையா, ஜேம்ஸ், கென்றி, பிலோமினா,லிற்னா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (10.11.2011) வியாழக்கிழமை பி.ப 2.30 மணியளவில் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து கந்தசாமி



அளவெட்டி அலுக்கையைப் பிறப்பிடமாகவும் ஆறுகால்மடம் மயிலு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து கந்தசாமி நேற்று (09.11.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2011) வியாழக்கிழமை பி.ப 02 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மயிலு வீதி,
ஆறுகால்மடம்.

தகவல்:
பிள்ளைகள்.

## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr. P. ஆறுமுகம்**
T.P-0719315664,0777569205

**யாழில் ,இன்று 10.11.2011 முதல்...**

பதிவுக் கட்டணம் ரூபா 300/ , முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

ஆரம்பநிலை மனநோயை விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றி பெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்த வித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ரூறிஸ்ற் இன் (சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)
[illegible] 392, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

## காணிப் பதிவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும் அரசின் இந்த நடவடிக்கையைப் பலமாகக் கண்டித்தன.

இதனை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் காணிப் பதிவை எதிர்த்து நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தார். காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையை உடன் ரத்துச் செய்க என்றும் குறித்த மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் காணிப் பதிவு நடவடிக்கைகளை நிறுத்த இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குக என்றும் அந்த மனுவில் அவர் கேட்டிருந்தார்.

எந்தக் காரணமும் இன்றி, இரண்டு மாதங்களுக்குள் காணிகளைப் பதிவு செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ள அதேவேளை, அவ்வாறு பதிவு செய்யப்படாவிட்டால் அதன் விளைவு என் என்பது காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றிக்கையில் தெரிவிக்கப்படவில்லை என்பதையும் சுமந்திரன் தனதுமனுவில்சுட்டிக் காட்டி இருந்தார்.

மனு விசாரணைக்கு வந்த போது, அரச தரப்பில் ஆஜராகி இருந்த பிரதி சட்ட மா அதிபர் முர்டு பெர்னான்டோ, காணி ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையை அரசு மீளாய்வு செய்து வருகின்றது என்றும் இந்த விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுக்கக்குழுஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் நீதிபதியிடம் தெரிவித்தார். இதனை அடுத்து, எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் காணிகளைப் பதியுமாறு விடுக்கப்பட்ட அறிவித்தல் மீது இடைக்காலத் தடை உத்தரவை நீதிபதி பிறப்பித்தார்.

இந்த வழக்கு அடுத்த ஜனவரி மாதம் 19ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படும். அதுவரை இடைக்காலத் தடை உத்தரவு நடைமுறையில் இருக்கும்.

(உ-15)

## லண்டன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் ஐவர் புத்தளம் வைத்திய சாலையிலும் சிகிச்சைப் பெற்று வருவதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

## மட்டுவில் மத்தி ஸ்ரீ ஞானவைரவப் பெருமானின் நூறாவது (100) பரணிப் பெருவிழா

**காலம்: இன்று (10.11.2011) வியாழக்கிழமை காலை 9.30 மணி**



ஸ்ரீ ஞானவைரவப் பெருமானின் ஆலயத்தில் தொடர்ந்து 100 ஆவது மாத புராணப்படிப்பும், அபிஷேகமும், அன்னதானமும் பல இன்னல்களுக்கு மத்தியிலும் எதுவித தடங்கலுமின்றி நடைபெற எம்பெருமானின் அருட்கடாச்சம் கிடைத்த வண்ணம் உள்ளது.

இந்த உற்சவங்களைத் தொடர்ந்து நடத்திவர காரணகர்த்தாவாக இருந்த இராசையா ரவீந்திரநாதன் அவர்களுக்கும் அவருக்கு உதவியாக இருந்த அடியவர்களுக்கும் வைரவப் பெருமானின் அருட்கடாச்சம் கிடைக்க வேண்டுகின்றோம்.

**தவம் போட்டோ**
இல.167, நாவலர் வீதி, 362, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(4-5-25) (10243)

## ஷஷ்டியப்த பூர்த்தி விழா வாழ்த்துக்கள்

இன்று (10.11.2011) வியாழக்கிழமை ஷஷ்டியப்த பூர்த்தியைக் காணும் தம்பதியரான



பிரம்மஸ்ரீ
சு. குகதாஸ் சர்மா

திருமதி
கு. கமலா அம்மா
இருவரையும் இறைவன் அருளுடன் என்றும் இனிதே பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

திரு . திருமதி பிரம்மஸ்ரீ
இ.கஜராஜ சர்மா - சுபாஷினி,
பத்மாஷினி கஜவர்ஷன்,
நுணாவில் குளம்
கண்ணகை அம்மன்
தேவஸ்தானம், நுணாவில்.

திரு. திருமதி பிரம்மஸ்ரீ
மாதுளசர்மா – கஸ்தூரி,
சண்ஜினி சாய்கரி,
வெட்டுக்குளம் –
புவனேஸ்வரி அம்பாள்
தேவஸ்தானம்,அரியாலை.

(10245)(3,6,25)

## இலவசம்.....இலவசம்.....இலவசம்....

இலங்கையில் முதன் முறையாக நவீன இயந்திரங்களின் உதவியுடன் கரிஷ்மா அல்பத்தினை **(With out cover)** இலவசமாக கட்டி பெற்றுக்கொள்ளலாம்.
பிரதியாக்கங்களிற்கு மட்டுமே பணம் செலுத்தினால் போதும்.



UV
8x12.10x15 -10/=
10x30.12x30-15/=



24" Multi Texture(6 Roller) UV coating Machine

**Befor : Rs. ~~50000~~ After : Rs.10000**

**மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்**
62/17,ஸ்ரான்லி வீதி.யாழ்ப்பாணம்.
தொ.இ. 021 222 1358

## தேவை

நிறுவனம் ஒன்றில் பணிபுரிவதற்கு Computer Typing தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. யாழ்.நகருக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
இல.89, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 4527 (10255) (2-6-25)

## 10 th DEATH ANNIVERSARY



Born:
29.03.1950

Called to rest:
10.11.2001

**B.M.EDWARD**
B.Sc.(Hons) S.L.P.S. I

*Ten long years have flown and we greatly & sadly miss you in some way or other .*
*Nobody and nothing can fill the gap created by your early demise. Rest assured you are now in a better place.*

**Fondly remembered and sadly missed by**
**Wife, children- Reynold & Daniya and relatives.**
*50/1, Old Park Road, Jaffna.*
(10254)(1,6,25)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை சண்முகசுந்தரம்



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சண்முகசுந்தரம் நேற்று (09.11.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை-ஆச்சிமுத்து தம்பதியரின் புதல்வரும், விக்கினேஸ்வரியின் அன்புக் கணவரும், சித்திராதேவி (ஜேர்மனி), சண்முகதாசன், சந்திரா தேவி, சிவதாசன், விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2011) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

### சிசிலியா றொட்றிகஸ்



இல.52A, வேம்படி வீதியில் வசித்த சிசிலியா றொட்றிகஸ் 09.11.2011 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரீபன் றொட்றிகஸின் (முன்னாள் தேசிய உப்புக்கூட்டுத்தாபன உத்தியோகத்தர் (O.A.)) அன்பு மனைவியும் பிலோமினா (ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), வைற்றஸ் (முன்னாள் நிறைவேற்று உதவியாளர், மாந்தை -Salt Ltd), எலிசபெத் (அதிபர், Kingston College International), கார்மல் (ஆசிரியை, சுழிபுரம் விக்டோரியா கல்லூரி), அனபெல் (Atlasltall, Colombo), கில்டா (ஆசிரியர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), கிறிஸ்ரின் (ஆசிரியை, புனித பத்திரிசியார் கல்லூரி), மல்லிகா (தொழில் நுட்ப உத்தியோகத்தர், யா/கட்டடங்கள் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தாயும் சந்திரன் (ஓய்வு பெற்ற சிறாப்பர்), காலஞ்சென்ற வரதலஷ்மி (நிர்வாக உத்தியோகத்தர், தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்) மற்றும் அ.சவுந்தரம் (சில்லாலை), நா.சண்முகநாதன் (முல்லைத்தீவு, கச்சேரி - ஓய்வு பெற்ற ADR), J.C.ஜான்ஸ் (கொழும்பு), றொபின் செல்வராஜா (குவைத்), R. இராமகிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மாமியும் சுகன்யா (ஜேர்மனி), பிரியாந்தன் (டுபாய்), ஆர்தர்கிளைவ் (முகாமைத்துவப்பீடம் - யாழ்.பல்கலைக்கழகம்), சதானந்த் (மருத்துவ பீடம்- பெலாரஸ்), நித்திலன் (NISD), காருண்யா (HNB- மானிப்பாய்), டோனியா வருஷினி (கொழும்பு - மருத்துவபீடம்), நிதானியா (பங்களா தேஷ்), தனானந்த் (சுழிபுரம் விக்டோரியா கல்லூரி), சாம் அபிஷேக் (பரியோவான் கல்லூரி), ஜெயராம் (ஜேர்மனி), ப.டானியல் ஜெயருபன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் கெவின், ஹென்றி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (10.11.2011) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல.121, கொழும்புத்துறை (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகில்) எனும் முகவரியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக பரியோவான் கல்லறைத் தோட்டத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

12, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (10238) (4-25-6)

தகவல்:
கில்டா செல்வராஜா
(மகள்)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஐ.நா. சபையின் சேலையில் இலங்கையின் மற்றொரு முள்

இலங்கையில், இப்போதும் ஏழு சித்திரவதை முகாம்கள் இயங்கி வருவதாக, சித்திரவதைகளுக்கு எதிரான விடயங்களை ஆராயும் ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடரில் தகவல் வெளிவந்துள்ளது. சர்வதேச மன்னிப்புச் சபையே இதனைப் பகிரங்கப்படுத்தி உள்ளது.

அந்த ஏழு சித்திரவதை முகாம்களும் இயங்கும் இடங்களின் விவரங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஆறு, படையினரால் நடத்தப்படுபவை என்றும், ஏழாவது முன்னாள் தமிழ் ஆயுதக்குழுவால் நடத்தப்படுவது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பிட்ட சித்திரவதை முகாம்களில் சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் நடத்தப்பட்டதாகத் தமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாக சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. குழுவின் தலைவர் பெலிஸ் கியர் கூறியுள்ளார்.

பலவந்தமாக காணாமற் போகச் செய்யப்படுவது, பொலிஸாரால் சித்திரவதைக்கு ஆளாக்கப்படுதல், பாலியல் வன்முறை, மனித உரிமை குறித்த வழக்குகளில் ஆஜராகும் வழக்கறிஞர்கள் மிரட்டப்படுவது, சிறையில் நடைபெறும் மரணங்கள் என்பன குறித்தும் தமக்குப் புகார்கள் கிடைத்துள்ளன என்றும் பெலிஸ் கியர் கூட்டத் தொடரில் வைத்துத் தகவல் வெளியிட்டார்.

தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் விவரங்கள் அரசாங்கத்திடம் இருப்பதாகவும் அவர்களின் விவரங்களைப் பெறமுடியும் என்றும் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டது. அது குறித்து ஊடகங்களிலும் அரசினால் விளம்பரங்கள் பிரசுரித்து மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

ஆனால் அரசு தெரிவித்தது போன்று, விவரங்கள் எதனையும் பெறமுடியவில்லை என்று தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் தெரிவித்ததாக சி.எ. ஐ.நா.குழுவின் தலைவர் பெலிஸ் கியர் கூட்டத் தொடரில் வைத்துக் கூறினார்.

இதேவேளை –

★ இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்பாக இலங்கை அரசு நேர்மையான விசாரணைகளை மேற்கொள்வதில்லை என்று சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. சபையின் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை தடுத்து வைக்கப்பட்டிருப்போர் மீது நடத்தப்படும் தொடர் சித்திரவதைகள் மற்றும் குற்றவாளிகள் தண்டிக்கப்படாத நிலைமைகள் குறித்த ஆவணங்களை சர்வதேச மன்னிப்புச் சபை சான்றுகளாகக் கையளித்துள்ளது.

★ திட்டமிட்டு காணாமல் போகச் செய்யப்படும் சம்பவங்கள் குறித்துத் தொடர்ச்சியாக முறைப்பாடு செய்யப்படுகின்றன.

★ சட்டத்துக்குப் புறம்பான விதத்தில் கொல்லப்பட்டோரின் சடலங்கள் சித்திரவதை இடம்பெற்றமைக்கான சாட்சியங்களாக உள்ளன.

★ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டிருந்தோர் என்ற சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சாதாரண பொதுமக்கள், குறிப்பாக தமிழ் இளைஞர், யுவதிகள் சித்தரவதைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

★ தடுத்து வைக்கப்பட்டிருப்போர் பல ஆண்டுகளாக நீதிமன்றத்தில் நிறுத்தப்படாத நிலையில் சிறைகளில் வாடித் துஞ்ச நேர்ந்துள்ளது.

★ தடுத்து வைக்கப்பட்டிருப்போர் விசாரணை என்ற பெயரில் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் படைத் தரப்பினரால் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர் – என்ற விவரங்களும் சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சித்திரவதை தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான சுயாதீனமான பிரிவு எதுவும் இலங்கையில் இல்லாமை, கேள்விக்குரியது என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் இலங்கை தொடர்பான நிபுணர் ஜோலந்த போஸ்ட்டர் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி, போர்க் குற்றம் மற்றும் இன அழிப்புத் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு மேலதிகமாக, தமிழ் இளைஞர்கள் மீது மனித குலத்துக்கு எதிரான பெரிய சித்திரவதைகளை இலங்கை அரசு மேற்கொண்டு வருவதாக "சனல் – 4" தொலைக்காட்சி விவரணங்களை ஒளிபரப்புச் செய்கிறது. பிரிட்டனில் வாழும் தமிழ் இளைஞர்கள் 25 பேரிடமிருந்து பெற்றுக்கொண்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் இந்த விவரங்களைப் பகிரங்கப்படுத்துவதாக அது தெரிவிக்கிறது.

பாதுகாப்புப் படையினரோ, பொலிஸாரோ கைது செய்யும் எவரையும், இலங்கை நீதிமுறைச் சட்டங்களின் பிரகாரம், நீதிமன்றத்தின் முன் நிறுத்தி, குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் மட்டுமே எவரையும் தடுத்து வைக்க முடியும்.

ஆனால் நீதிமன்றத்தில் நிறுத்தாமலே, சந்தேக நபர் என்று படையினர் அல்லது பொலிஸார் கைவிரலைச் சுட்டினால் தடுப்புக்காவலில் வைக்கப் பயங்கரவாதத் தடைச்சட்டம் வகை செய்கிறது.

தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் தொடங்கிய காலத்தில், அதனை முறியடிப்பதற்குப் படையினருக்குப் பலம் சேர்க்கவே அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆயுதக் குழுக்களுடன் சம்பந்தமில்லாத தமிழ் இளைஞர், யுவதிகளையும் அவர்களிடம் இருந்து தமக்குத் தகவல் பெறுவதற்காகக் கைது செய்ததும், தடுத்து வைத்ததும் சித்திரவதை செய்ததும், கொடூரமான உத்திகளைக் கொண்ட வரலாறு.

மனுநீதி என்றால் அது என்ன என்ற மமதையை மூச்சாக்கி, படையினருக்கு அதீத அதிகாரங்களை வழங்குவதற்கான ஆயுதமாகக் கொண்டு வரப்பட்டதே பயங்கரவாதத் தடைச் சட்டம். அந்தச் சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளது. சர்வதேச நாடுகள் பலவும் கொடுத்த அழுத்தம் காரணமாக, அவசரகாலச் சட்டத்தை நீக்கியுள்ள அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அகற்ற ஒரு துளிதானும் விரும்பவில்லை.

அத்தகைய நிலையில், மேலே குறிப்பிடப்பட்ட இலங்கையின் அரச இயந்திரங்களால் உற்பவிக்கப்படும் சித்திரவதைகளைத் தடுத்து நிறுத்த முடியுமா, அதற்கு அரசாங்கம் ஆதரவாக இருக்குமா என்ற கேள்விகளுக்கான பதில்கள், இருள்மூட்டத்திற்குள் துலங்காப் பொருள்களின் நிலையை ஒத்ததாகவே இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை! ஐக்கிய நாடுகள் சபைக்கு இலங்கை சம்பந்தமான சேலையில் பட்ட மற்றொரு முள்ளாக இதுவும் சேர்ந்து கொள்ளும் என்று சொல்லலாம். அவ்வளவே.

# பிள்ளைகளிடமிருந்து பிரிந்து சென்று முதியோர் இல்லங்களில் 6,579பேர்

கொழும்பு, நவ.10

பிள்ளைகளிடமிருந்து பிரிந்து அன்பும் புகலிடமும் இன்றி 6 ஆயிரத்து 579 பெற்றோர் 154 முதியோர் இல்லங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

பிள்ளைகளால் கைவிடப்படுவதன் காரணமாக ஒரு நாளைக்கு மூவர் என்றவாறு பெற்றோர் நடுத்தெருவுக்கு வரும் நிலை உருவாகியுள்ளது.

எந்தவொருவரிடம் இருந்துமே உதவி, ஒத்தாசைகள் கிட்டாதுபோயுள்ள இரண்டு லட்சம் பேர் வரையிலான முதியோர்கள் இந்த நாட்டில் அல்லல்பட்டு வருகின்றனர்.

தமது பிள்ளைகளிடமிருந்து பராமரிப்புக் கோரி முதியவர்களிடமிருந்து 300 வரையிலான முறைப்பாடுகள் ஆண்டு ஒன்றில் கிடைத்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அந்த முறைப்பாடுகளும் முதியோர்களுக்கான செயலகத்தின் பராமரிப்புச் சபையிடம் கையளிக்கட்டுள்ளதுடன் அவர்களுக்கான நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

80 வயது வரையிலான அனைத்து முதியோருக்கும் நிவாரணத் தொகை ஒன்றை வழங்கும் செயற்திட்டம் ஒன்று இம்முறை வரவு-செலவுத்திட்ட யோசனைகளுக்கு முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சனத்தொகையில் 20 வீதம் வரையிலான முதியோர் சமூகம் மூன்று வகையாகத் தரம்பிரிக்கப்பட்டு அவர்கள் தொடர்பாக நலனோம்புச் சேவையொன்றை நடைமுறைக்குக் கொண்டுவர சமூக சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம–22)

# யாழ்ப்பாணச் சமூகத்தைப் பல்கலைக்கழகம் கொண்டு சென்றவர் பேராசிரியர் துரைராஜா

## அவரின் 78 ஆவது பிறந்ததினம் இன்று

யாழ்ப்பாண சமூகத்தின் சாதாரண குடும்பத்தில் பிறந்து யாழ்ப்பாணத்துச் சராசரி மனிதர்களுடன் ஒன்றிணைந்து வாழ்ந்தவர் பேராசிரியர் துரைராஜா. இளமையில் உடுப் பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையில் கல்விகற்று பின் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கணிதம் கற்று பல்கலைக் கழகத்துக்கு முதல் மாணவனாகத் தெரிவாகி பொறியியல் விஞ்ஞான பட்டம் பெற்றுபின் பிரிட்டனில் கலாநிதிப் பட்டம் பெற்றுப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராய், பேராசிரியராய், பீடாதிபதியாய் சேவையாற்றி யாழப்பாணப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராய் பணியாற்றிய எமது பேராசிரியரை நினைவு கூர்வது சாலப் பொருந்தும்.

தமிழர் கலாசாரத்தில் ஒன்றிப் போதல் கலாசார வாழ்வை தனது பெருமையாகக் கொள்ளல், அடுத்துவரும் சந்ததிக்கு தமிழர் வாழ்வியலின் பெருமைகளை கையளித்தல் போன்றவை அவர் வாழ்வின் இயல்புகளாகும்.

பேராசிரியர் துரைராஜா யாழ்ப்பாண சமூகத்தை வலுவூட்டுவதற்காக அயராது உழைத்தவர். தனது பொறியியல் கல்வியை தனது மாணவர்களுக்கு விருப்புடன் கற்பித்தவர். தமிழ் சிங்கள முஸ்லிம் மாணவர்கள் அவரை நல்ல குருவாக நல்லாசானாக மதித்து வந்தனர்.

பேராசிரியரின் மாணவன் என்று சொல்வதால் தங்களைத் தாங்களே தரமுயர்த்திக் கொண்டவர்கள் பலர். அவர் மாணவர்களின் பெருமைக்குரியவர் என்பதுடன் நில்லாது மாணவர்களுக்கு பெருமை சேர்ந்தவர். எல்லோரையும் அறிவுடையவர்களாகவும் வினைத்திறனுடையவர்களாகவும் உருவாக்கவேண்டும் என்ற அவாவுடன் செயற்பட்டவர்.அவரின் கல்வி சார் வரலாற்றை அவரது மாணவர்களே உலகெங்கும் பரப்பி நிக்கின்றனர் என்றால் அவரின் பெருமையைப் பறைசாற்ற வேறு யார் வேண்டும்.

தழிழர் தம் வாழ்விடங்களில் அபிவிருத் திக்காகத் திட்டமிட்டு செயற்பட்டவர். உதாரணமாக பொருளாதார தடையில் அமிழ்ந்து போன யாழ்ப்பாணத்தை மீட்டெடுக்க எல்லாத்தரத்திலான எல்லா வகையிலான கல்வியாளர்களையும் தொழில்நுட்பவியலாளர்களையும் தொழிலாளர்களையும் நிர்வாகிகளையும் சிவில் சமூகவியலாளர்களையும் ஒன்றிணைத்து பொருளாதார அபிவிருத்திக்கான எதிர்கால திட்டமிடலை மேற்கொண்டவர். யாழ்ப்பாண மக்கள் பொருளாதாரம் காரணமாக இழந்த வசதிகளை மீண்டும் பெற அயராது உழைத்த போது இடர்கால யாழ்ப்பாணத்தவரின் பொருளாதார வாழ் வியலை தனது வாழ்வியலாக மாற்றிக் கொண்டவர். அதனை அக்கால வாழ்வில் வடமராட்சியில் இருந்து சாதாரண மனிதர்கள் சைக்கிளில் வந்தபோது தானும் சைக்கிளில் யாழ்ப்பாணம் வந்து துணை வேந்தராகப் பணியாற்றியவர்.

தமிழர் நல்ல கல்வியைப் பெறவேண்டும் என்பதற்காக பல்கலைக்கழக கல்வி முறையில் தொழிலாளர் கல்வி வெளியார் கற்கைபோன்றவற்றை அறிமுகப்படுத்தி யாழ்ப்பாண சமூகத்தை பல்கலைக் கழகம் வரைகொண்டு வந்தவர். வடக்குக் கிழக்கு தமிழர்களில் பெரும்பான்மையானோர் விவசாயிகளாகவும் மீன்பிடியாளர்களாகவும் இருப்பதால் விவசாய பீடத்தை கிளிநொச்சியில் நிறுவினார். மீன்பிடிக் கற்கைக்கான திட்டங்களைத் தீட்டினார். விவசாய விளைநிலங்களுக்கிடையில் விவசாயபீடம் இருப்பதுபோல எதிர்கால அபிவிருத்திக்கு வன்னிப் பெருநிலப்பரப் பேமையமானது. பாதுகாப்பானது என்று கருதி பொறியியல் பீடம் ஒன்றை வன்னியில் நிறுவத்திட்டமிட்டு செயற்பட்டார். இவ ரின் இம் முயற்சிகள் இடம், காலம், தேவை யறிந்து செயற்பட்டவர் என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு. ஒடுக்கப்பட்டவர்களிடத்தும் ஏழைகளிடத்தும் மாணவர்கள், ஆசிரியர், ஊழியர்கள் ஆகியோரிடத்தும் அன்பும் ஆதரவும் பரிவும் கருணையும் இருந்ததால் அவர் என்றும் எம் மனதை விட்டகலா மேதையாகவே உள்ளார்

பேராசிரியர் ப.சிவநாதன்
தலைவர், பொருளியல் துறை.

# வீடு பேற்றிற்கு வழி வகுப்பது யாது?

தெய்வீக எண்ணத்துடன் ஆற்றும் செயல்கள் அனைத்தும் உன்னை பந் தத்திலிருந்து விடுவித்துக் கொள்ளும். நீ ஒரு மனிதன் ஆகவே குற்றங்களை ஆற்றி விடலாம் என எண்ணுவது ஒரு பலவீனமாகும். மனிதன் உள்நோக்கிப் பார்த்து உண்மையை அறிந்துகொள்ள வேண்டும். மனிதன் ஒரு குற்றமும் செய்யக்கூடாது.

அனைத்தும் செயற்பாட்டினால்தான் உருவாகும். நம்பிக்கையை விருத்தி செய்து உற்சாகத்துடனும் தைரியத்துடனும் செயற்பாட்டில் (மீண்டும் மீண்டும் சாதனை செய்தல்) ஈடுபடவேண்டும்.

உன்னால் எதையும் அடைய முடியும் என்று நம்பிக்கையுடன் இரு. நீ எதையும் எல்லாவற்றையுமே அடைவாய். நீ உன்னை மறுத்து நிற்காதே.



*(நன்றி: சத்தியசாயி பாபாவின் அருளுரைகள்)*

## சாயி சிந்தனை

# 'என்றிப்' திட்டத்தின்கீழ் வீதி புனரமைப்பு முன்னுரிமை அடிப்படையில் இடம்பெறும்

## கணிப்பீட்டுப் பணிகள் ஆரம்பம்

சண்டிலிப்பாய், நவ.10

வலி. தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகள் ''என்றிப்'' திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன இதனையடுத்து வீதிகளின் தற்போதைய நிலை குறித்து ஆராயும் பொருட்டு சபைத் தலைவர் தலைமையில் உறுப்பினர்கள் கிராமம் கிராமமாகச் சென்று வீதிகளைப் பார்வையிட்டு கணிப்பீடு செய்து வருகின்றனர்.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பு வலி.தென்மேற்குப் பிரதேச சபை, செயலாளர் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்தது. அந்தக் காலப் பகுதியில் செயலாளரின் ஆலோசனைக்கு ஏற்றவாறு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வந்தன.

நிதிப் பற்றாக்குறையால் 10 வருடங்களிலிருந்து 20 வருடங்களுக்கு மேல் திருத்தப்படாத வீதிகள் மக்கள் நடமாட முடியாத அளவுக்கு இன்றும் அதே நிலமையில் இருக்கின்றன.

வீதிகளின் குறைபாடுகள் குறித்து வரியிருப்பாளர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து என்றிப் திட்டத்தின் கீழ் வீதிகள் திருத்துவதற்கு பல லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து முன்னுரிமை அடிப்படையில் திருத்த வேண்டிய வீதிகள் பற்றி ஆராயும் நோக்குடன் பிரதேசசபை உறுப்பினர்கள் கிராமம் கிராமமாகச் சென்று வீதிகளின் நிலை குறித்து ஆராய்ந்து வருகின்றனர்.

மீள்குடியமர்வு இடம் பெற்ற கிராமங்களிலுள்ள வீதிகள் போக்குவரத்து அதிகமாகவுள்ள வீதிகள் போன்றவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. விரைவில் பணிகள் ஆரம்பமாகும் என்று கூறப்பட்டது.

(ம-115)

## டெங்கு ஒழிப்பு சிரமதானம்

யாழ்ப்பாணம், நவ. 10

512 ஆவது பாதுப்புப்படைப் பிரிவு, 7 ஆவது கஜபாகு றெஜிமண்ட் பிரிவு ஆகியன இணைந்து சுகாதார மற்றும் சமூக மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். பரியோவான் கல்லூரியில் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

இந்தச் சிரமதானப் பணியில் இந்தப் படையணியினரும், பரியோவான் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

பாடசாலை, சுற்றுச் சூழல், பாடசாலை வீதி ஆகிய பகுதிகள் துப்புரவு செய்யப்பட்டன.

சிரமதானப் பணியின் போது சேகரிக்கப்பட்ட குப்பை கூளங்கள் யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான டிராக்டர் மூலம் அகற்றப்பட்டன.

(ம-326)

## சாக்குப் பொதியில் அம்மன் விக்கிரகம்

யாழ்ப்பாணம், நவ.10

கொக்குவில் ஞானபண்டிதா வித்தியாலயத்துக்குச் சமீபமாக எழுந்தருளி அம்மன் விக்கிரகம் ஒன்று சாக்கினால் சுற்றப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலைக்கு அருகிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் உரிமையாளர் இந்த விக்கிரகத்தைக் கண்டுள்ளார். இது தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. எனினும் பொலிஸார் அந்த விக்கிரகத்தை உடனடியாக மீட்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. அதனால் அந்த விக்கிரகம் அந்தப்பகுதி கிராம அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை தொடக்கம் அங்கு சாக்குப் பொதி காணப்பட்டதாகவும் மதியம் வரை அந்த இடத்திலேயே பொதி கிடக்கவே சந்தேகம் கொண்ட கடை உரிமையாளர் அந்த இடத்துக்குச் சென்று பார்த்த போதே சாக்கு ஒன்றால் சுற்றிய நிலையில் விக்கிரகம் காணப்பட்டது.

அதனை மீட்ட அவர் தனது கடையில் வைத்துவிட்டு உடனடியாகப் பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

எனினும் பொலிஸார் உடனடியாக அங்கு வரவில்லை அந்தச் சிலையைப் பொதுமக்கள் பலர் பார்வையிட்டபோதும் இதுவரை எவரும் உரிமை கோரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-4)

## ஏன் இந்தநிலை?...



கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்ட பஸ் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்ட கன்ரர் வாகனத்துடன் மோதியதில் பத்துக்கும் மேற்பட்ட பயணிகள் காயங்களுக்கு ஆளாகினர். திங்கட்கிழமை அதிகாலை ஏ-9 வீதியான கண்டி வீதியில் கொக்காவிலுக்கு அண்மையாக இந்த விபத்து இடம்பெற்றது. இந்த விபத்தில் சேதமடைந்த பஸ்.

(ம-86)

## உர விநியோகச் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 10

முதலாம் கட்ட உர விநியோகத்தில் இதுவரை உரமானியம் பெறாதவர்கள் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் உடன் பெற்றுக்கொள்ள வேண்டும். இதன் பின்னரே இரண்டாம் கட்டத்துக்கு அனுமதிக்கப்படுவர்.

இவ்வாறு சண்டிலிப்பாய் கமநல சேவைகள் திணைக்களப் பெரும்பாக அதிகாரி திருமதி பாமா மகேந்திரன் தெரிவித்தார்.

உரிய காலத்தில் விவசாயிகள் தமது உரமானியத்தைப் பெற்றால் பிரச்சினைகள் உடனுக்குடன் தீர்க்கப்படும்.

இரண்டாம் கட்ட விநியோகம் தாமதமடையாது இருக்க முதலாம் கட்ட மானிய உரத்தை உடன் பெற்றுக் கொள்ளுமாறும், விவசாயிகளின் நெல் கடனுக்கான விண்ணப்பங்கள் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

விவசாயிகள் தமது பிரச்சினைகள் தொடர்பாக வாரத்தில் இரு நாள்கள் தெரியப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ம-302)

## இந்தியாவில் இருந்து வந்தோருக்கு விரைவில் உதவிகள் கிடைக்கும்

வடமராட்சி, நவ. 10

இந்தியாவில் இருந்து பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியமர்ந்துள்ள 217 குடும்பங்களுக்கு விரைவில் உதவிகள் வழங்கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி அளித்தார்.

பருத்தித்துறை, வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது

யுத்த சூழ்நிலை காரணமாக இந்தியாவுக்கு இடம் பெயர்ந்த மக்களில் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 217 குடும்பங்கள் திரும்பி வந்து சேர்ந்துள்ளன.

இந்தக் குடும்பங்களுக்கான மீள்குடியமர்வுக்கும் தேவையான உதவிகளை வழங்க வேண்டும் என்று பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த போதே இவர்களுக்கான உதவிகள் வழங்குவது தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

(ம-236)

## மீளக் குடியமர்ந்த விவசாயிகளுக்கு இலவச விதை நெல் விநியோகம்

மீளக்குடியமர்ந்து நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு விதை நெல் இலவசமாக வழங்கப்படுகின்றது.

மீளக்குடியமர்ந்து இந்த வருடம் புதிதாக நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் போக்கறுப்பு, நெல்லியான், செம்பியன்பற்று, நெடுங்குளம் முள்ளியான், கச்சாய் உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் விவசாயக் குடும்பங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 3புசல் வீதம் நல்லின விதை நெல் இலவசமாக வழங்கப்படுகிறது.

யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் உள்ள விவசாய சம்மேளனங்களின் உதவியுடன் பெரும்பாக கமநல சேவை நிலையங்களில் வைத்து இந்த நெல்லை வழங்கி வருகின்றனர்.

1500 ஏக்கர் நிலத்தில் நெற்பயிர் செய்கை மேற்கொள்ளக் கூடிய அளவுக்கு விதை நெல் ஏக்கருக்கு மூன்று புசல் என்ற விகிதாசாரத்தில் வழங்கப்படுகிறது என்று யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(த-11)

## கடல் கொந்தளிப்பு

பருத்தித்துறை, நவ.10

வடமராட்சி கிழக்கின் கரையோரப் பகுதியில் கடந்த சில நாள்களாக கடும் காற்று வீசி வருவதுடன் கடலும் கொந்தளிப்பாகக் காணப்படுகிறது.

இதனால் அந்தப் பகுதி கடற்றொழிலாளர்கள் கடலுக்குத் தொழிலுக்குச் செல்லவில்லை எனத் தெரியவருகின்றது. (ஒ-190)

## குற்றச் செய்திகள்

யாழ்ப்பாணம், நவ.10

யாழ். நகரப் பகுதியில் சூழலை அசுத்தப்படுத்தும் வகையில் பொலித்தீன் பைகள், பிளாஸ்ரிக் பொருள்கள் உள்ளிட்ட கழிவுப் பொருள்களை வெளியே வீசிய வர்த்தகர்கள் 7 பேர் கையும் மெய்யுமாகப் பொலிஸாரிடம் சிக்கிக்கொண்டனர். இவர்கள் 11 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தினர்.

சுற்றுச்சூழலை அசுத்தப்படுத்தும் வகையில் செயற்பட்ட இவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்த பொலிஸார் அவர்களை யாழ்.நீதிமன்றில் நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராசா முன்னிலையில் நேற்றுமுன்தினம் முன்னிலைப்படுத்தினர்.

விசாரணையின்போது சந்தேக நபர்கள் ஏழுபேரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து ஒவ்வொருவரும் ஆயிரத்து 500ரூபா வீதம் 11 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்தும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

(ம-4)

* * *

யாழ்ப்பாணம், நவ.10

யாழ்.நகரில் வெவ்வெறு இடங்களில் அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்ற குற்றத்துக்காக நால்வர் யாழ். நீதிமன்றில் 31 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்தினர்.

கொக்குவில் மற்றும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர்களைக் கைது செய்த பொலிஸார் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்தினர்.

இதன்போது சந்தேக நபர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து கொக்குவிலைச் சேர்ந்த இருவருக்கும் 25 ஆயிரம் ரூபாவும் ஏனையவர்களில் ஒருவருக்கு ஐயாயிரம் ரூபாவும் மற்றயவருக்கு ஆயிரத்து 500 ரூபாவும் அபராதமாகச் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(ம-4)

* * *

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற குற்றத்துக்காக அரியாலையைச் சேர்ந்த நபர் ஒருவர் யாழ்.நீதிமன்றில் 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்தினார்.

* * *

யாழ்.பண்ணையில் பொது இடமொன்றில் மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றத்துக்காக ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஒருவர் யாழ்.நீதிமன்றில் இரண்டாயிரம் ரூபா அபராதம் செலுத்தினார். (ம-4)

## நெடுந்தீவு ஆலயத்தில் மறைந்திருந்த நபர்

நெடுந்தீவு, நவ. 10

நெடுந்தீவு மத்தி புனித யுவானியார் கோயிலில் உடல் முழுவதும் எண்ணெய் பூசியவாறு மறைந்திருந்த சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் நாவாந்துறையைச் சேர்ந்த சந்தேக நபரான எட்வின் சாந்தகுமார் என்பவரே சந்தேகத்தின் பேரில் நெடுந்தீவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொது மக்கள் கொடுத்த தகவலை அடுத்து பொலிஸார் இவரைக் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

(எ-14-7)

# காணி உறுதியின் பிரதிகளுக்கு விண்ணப்பிப்போர் தொகை உயர்வு

## யாழ். மாவட்ட காணிப்பதிவாளர் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.10

யாழ்.மாவட்டத்தில் காணி உரித்துப் பதிவு செயல்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் காணி உறுதியின் பிரதிகள் பெற்றுக் கொள்வதற்கு தினமும் விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை 5 மடங்காக அதிகரித்திருப்பதாக யாழ். மாவட்ட காணிப்பதிவாளர் ப.பிரபாகர் தெரிவித்தார்.

அவர் இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தில் காணி உறுதியின் பிரதிகள் பெறுவதற்கு தினந்தோறும் 30 வரையிலான விண்ணப்பங்களே ஜூலை மாதம் வரையில் எமக்குக் கிடைத்தன.

தற்போது காணி உரித்துப் பதிவு செயற்திட்டம் ஓகஸ்ட் மாதமளவில் வடமாகாணத்தில் சகல மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் பின்னர் யாழ்.மாவட்ட செயலக காணிப்பதிவு அலுவலகத்துக்கு காணி உறுதியின் பிரதிகளுக்கு தினசரி 150 பேர் வரையில் விண்ணப்பிக்கின்றனர். இவர்களுக்கான உறுதிகள் உரிய கால ஒழுங்கில் வேகமாக வழங்கப்பட்டு வருகின்றன என்றார்.

இதேவேளை காணி உரித்துப் பதிவுக்கு விண்ணப்பிக்கும் போது காணி உறுதி சமர்ப்பிக்கத் தேவையில்லை என்று வடமாகாண காணி இணைப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பல கிராம சேவகர்கள் காணி உறுதியின் பிரதிகள் கேட்பதாலேயே மக்கள் அதிகளவில் விண்ணப்பிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-15)

# காணி உறுதிகளை வழங்க தயக்கம் காட்டும் அதிகாரிகள்

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,நவ.10

கொக்குவில் தென்மேற்கு ஜே/127 கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஆரவாரப்புலம் பகுதியில் குடியிருப்பவர்களுக்கான காணிகளின் உறுதிகளை வழங்க மேல்மட்டத்தில் உள்ள அதிகாரிகள் தயங்குவதாக நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிதம்பரம் நடராஜர் கோவிலுக்குரிய 123.58 பரப்புக் காணி சைவபரிபாலன சபையின் பொறுப்பில் இருந்தது.

இக்காணியை 1973 இல் அரசு சுவீகரித்துக் கொண்டது. இந்தக் காணிகளில் 95 குடும்பங்கள் குடியிருக்கின்றன.

நீண்ட காலமாகக் குடியிருக்கும் மக்கள் இதற்காக உறுதியை வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்து வந்துள்ளனர்.

எனினும் உரிய அதிகாரிகள் இது குறித்து பாராமுகமாக இருப்பதாகவும் இக்காணிகளில் குடியிருப்பவர்களுக்கு அதற்கான உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் இக்கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டது. (ம-7)

# மிகவும் மோசமான நிலையில் பருத்தித்துறை- மருதங்கேணி வீதி

பருத்தித்துறை,நவ.10

பருத்தித்துறை - மருதங்கேணி பிரதான வீதி மிக மோசமாகச் சேதமடைந்திருப்பதால் அப்பாதையில் பயணிப்போர் பெரும் கஷ்டங்களையும் சிரமங்களையும் எதிர் நோக்க வேண்டியுள்ளது.

தற்போது மழை ஆரம்பித்துள்ள நிலையில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த நாகர் கோயிலுக்கு ஊடாக வீதி திறக்கப்பட்டதையடுத்து தற்போது வடமராட்சிக்கும் வடமராட்சி கிழக்குக்கும் இடையிலான பிரதான பாதை யாக இந்த வீதியே பயன்பாட்டில் உள்ளது.

தற்போது இந்த வீதி அம்பன் தொடக்கம் செம்பியன்பற்று வரை மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகிறது.

நாளாந்தம் அரச, தனியார் பேருந்துகள், உட்பட பல்வேறு வாகனங்கள் இந்தப் பாதையின் ஊடாக பல சிர மத்தின் மத்தியில் பயணத்தைத் தொடர்ந்து வருகின்றன. சேதமடைந்த இந்த வீதியால் பயணிப்போர் வீழ்ந்து எழும்ப வேண்டிய நிலை உள்ளதாகவும் கூறப்படுகிறது. மழையால் வீதிகளில் நிறைந்துள்ள வெள்ளமே இதற்குக் காரணம்.

உரிய அதிகாரிகள் இதனைக் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று பயணிகள் கேட்கின்றனர்.

(ம-190)

# குடியிருப்பு வசதிகள் இன்மையே மக்கள் குடியமரப் பின்னிற்க காரணம்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.10

மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட இடங்களில் அவர்களுக்கான வீட்டு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகள் இல்லாமையினாலேயே அவர்கள் அந்தப் பகுதிகளில் மீளக்குடியமர்வதில் பின்னடிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தில் இராணுவத்தினருக்கும் அரச அதிபர் , பிரதேச செயலர்களுக்குமிடையில் கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசமாக இருந்த பகுதிகள் தற்போது மக்கள் பாவனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் இந்தப் பகுதிகளில் மக்கள் பெரும்பாலும் மீளக்குடியமர பின்னிற்கின்றனர்.

அவ்வாறு மக்கள் பின்நிற்பதற்கான காரணம் என்ன என்று இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க அரச அதிகாரிகளிடம் கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிளித்த அரச அதிபர், மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட இடங்களில் மக்களுக்கான வீடமைப்பு வசதிகள் இல்லை.

அத்துடன் மின்சாரம் மற்றும் போக்குவரத்து வசதிகள் உரிய வகையில் இல்லாத காரணத்தினாலேயே மக்கள் மீளக்குடியமர்வதில் பின்னிற்பதாக தெரிவித்தார்.

இந்திய அரசால் அமைத்துக் கொடுக்கப்படவுள்ள வீட்டுத் திட்டங்களில் இந்த மக்களை உள்வாங்க நடவடிக்கை எடுப்பதாக அரச அதிபர் இதில் மேலும் குறிப்பிட்டார். (ம-15)

# வீதி விளக்குகள் பொருத்த திட்டம்

மல்லாகம் சந்தியிலிருந்து அளவெட்டி எல்லைப்பகுதி வரையான சங்கானை, வல்லை வீதிக்கு வீதி விளக்கு பொருத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

மின்குமிழ்கள், மின் உபகரணங்கள் கொள்வனவு செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. விரைவில் வீதி விளக்குகள் பொருத்தும் பணி நடைபெறும் என்று வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (ம-36)

# வலி.கிழக்கில் மக்கள் மீள் குடியமர அனுமதியளிப்பு

24 வருடங்களின் பின்னர் வலி.கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் வளலாய் மேற்கு மற்றும் இடைக்காட்டில் அக்கரை ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் இன்னும் இரண்டு வாரங்களில் மக்கள் மீளக் குடியமர்வதற்கு அனுமதிக்கப்படும் என்று யாழ்.மாவட்ட இராணுவத் தனபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்ததாக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய இராணுவத்தால் 1987 ஆம் ஆண்டு மேற் கொள்ளப்பட்ட ஒப்பரேஷன் லிபரேஷன் நடவடிக்கையின் போது வளலாய் (ஜே/284), இடைக்காடு (ஜே/283) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்தனர்.

இடம்பெயர்வதற்கு முன்னர் இந்த இரு பிரதேசங்களிலும் 1,076 குடும்பங்கள் வரையில் வாழ்ந்து வந்துள்ளனர்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் இந்தப் பிரதேசத்தின் சில பகுதிகளில் இராணுவத்தினரால் மீளக் குடியமர்வுக்காக அனுமதிக்கப்பட்டன.

இதனடிப்படையில் இடைக்காடு மற்றும் வளலாய் கிழக்கு ஆகிய பகுதிகள் ஏற்கனவே மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளன. இந்த நிலையில் இன்னும் இரண்டு வாரங்களில் அக்கரை, வளலாய் மேற்கு ஆகிய பகுதிகளில் மீளக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பகுதிகளில் மீளக் குடியமர்வதற்காக 389 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 326 பேர் மீளக் குடியமரவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-15)

# ஆடியபாதம் வீதிக்கு 'காப்பெற்'

யாழ்ப்பாணம்,நவ.10

திருநெல்வேலி ஆடியபாதம் வீதி அடுத்த ஆண்டில் 'காப் பெற்' வீதியாக மாற்றப்படவுள்ளது.

அதற்கான ஆரம்ப வேலைகள் வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டன.

செவ்வாய்க்கிழமை முன்னோடி நடவடிக்கையாக இந்த வீதியில் அதற்கான அளவைகள் குறியிடும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.(ம-7)

# தனிப்பட்ட வாழ்க்கையை மேம்படுத்த அரச சேவையை பயன்படுத்தாதீர்கள்

## மாகாண பிரதிப் பிரதம செயலாளர் இராசநாயகம்

அச்சுவேலி,நவ.10

அரச சேவையை தனிப்பட்ட வாழ்க்கை மேம்பாட்டுக்கு உரியதாகக் கருதாமல்; பொதுமக்களுக்கு உதவு வதாகவும் பொது மக்களின் சேவையாகவும் கூட கருதி அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு கூறினார் வடக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளரும் மாகாண பிரதிப் பிரதம செயலாளருமான தி.இராஜநாயகம். வடக்கு மாகாண சேவையில் நிலவும் பட்டதாரிப் பதவி வெற்றிடங்களுக்கான நியமணம் வழங்கும் நிகழ்வு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு தலைமை தாங்கிய செயலாளர் தி.இராசநாயகம் தொடர்ந்தும் உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்குவதில் சிலகாலதாமதம் ஏற்பட்டது. அதனை உரிய நிபந்தனைகளுக்கு அமைய மேற்கொள்ள வேண்டும் என்பதனாலேயே தாமதம் ஏற்பட்டது.

இந்த வகையில் இதனை செய்து முடிப்பதற்கு சகல வகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய வடக்கு மாகாண ஆளுநருக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

இந்த நியமனங்கள் போட்டிப் பரீட்சையின் உயர் புள்ளி அடிப்படையில் நேர்முகப் பரீட்சை நடத்தி அதன் அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளன. இதில் எந்த விதமான தவறுதல்களுக்கும் இடம் இல்லை.

இன்று நியமனத்தைப் பெற்றுக் கொள்ளும் பட்டதாரிகள் பாக்கியசாலிகள், பல்லாயிரக் கணக்கான பட்டதாரிகள் வேலை வாய்ப்பின்றி இருக்கின்ற நிலையில் 348 பட்டதாரிகள் நியமனம் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அரச சேவையின் மதிப்பும் மரியாதையும் சமூகத்தில் மிக உயர்நிலையில் உள்ளன.

இதனை எதிர் வரும் 14 ஆம் திகதி பதவிப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும் பட்டதாரிகள் உணர்ந்து கொள்ள வேண்டும். பதவியால் அவர்கள் உயர்வடையும் வேளையில் அவர்க ளால் குறித்த பதவிப் பொறுப்புக்கள் சேவைகள் உயர்வடைய வேண்டும். பெருமை பெற வேண்டும்.

அரச சேவையைத் தனிப்பட்ட வாழ்க்கை மேம்பாட்டுக்கு மட்டும் உரியதாக கருதாமல் பொது மக்களுக்கு உதவக் கூடிய வகையில் பொது மக்களின் சேவையாகவும் கருதி அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும். சேவையால் நீங்கள் பெருமை பெற வேண்டும்.

எமது பிரதேசம் பல்வேறு விதமான அபிவிருத்தியை எதிர் நோக்கிக் காத்திருக்கின்றது. அவற்றை உரிய வேளையில் உரிய முறையில் நிறைவு செய்வதில் உங்களது பங்களிப்பு மிக அவசியம் என்பதை உணர்ந்து சேவையாற்ற வேண்டும் - என்றார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளரும் வடக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருமான இ.இளங்கோவன், பாரம்பரிய கைத் தொழில் மற்றும் சிறு கைத் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்படப் பலர் உரையாற்றினர். (ம-11)

# 'சிறிலங்காவின் கொலைக்களங்கள்' ஆதாரத்துடன் 'பாகம் - 2' விரைவில்

## சனல் - 4 தொலைக்காட்சி அறிவிப்பு

சிறிலங்காவின் கொலைக் களங்கள் ஆவணப்படத்தின் இரண்டாவது பாகத்தை புதிய சாட்சியங்களுடன் விரைவில் ஒளிபரப்பவுள்ளதாக சனல்-4 தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

இலங்கையின் கொலைக் களங்கள் ஆவணப்படம் பிரிட்டனின் ஊடக ஒழுங்கு முறையை மீறவில்லை என்று அறிவிக்கப்பட்ட அடுத்த வாரமே, அதன் இரண்டாவது பாகத்தை தயாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது இடம்பெற்ற கொடூரங்களை விவரிக்கும் 'சிறிலங்காவின் கொலைக் களங்கள்' என்ற ஆவணப் படத்தை சனல்-4 தொலைக்காட்சி கடந்த ஜூன் மாதம் ஒளிபரப்பியிருந்தது.

கையடக்கத்தொலைபேசி மூலம் எடுக்கப்பட்ட காணொளிப் படம் இதன் பிரதான போர்க்குற்றச் சாட்சியமாக இணைக்கப்பட்டிருந்தது.

இலங்கை இராணுவத்தால் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை விவரிக்கும் இந்த ஆவணப்படம், நீதிக்குப் புறம்பான படுகொலைகள் மற்றும் பாலியல் வன்முறைகளை வெளிச்சம் போட்டுக் காண்பித்திருந்தது.

இந்த ஆவணப்படம் நியூயோர்க் மற்றும் ஜெனிவாவில் உள்ள ஐ.நா தலைமையகங்களிலும், இந்தியா, கனடா, ஆஸ்திரேலியா, டென்மார்க், நோர்வே உள்ளிட்ட பல நாடுகளின் தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பப்பட்டது.

'சிறிலங்காவின் கொலைக் களங்கள்' - தண்டனை வழங்கப்படாத போர்க்குற்றங்கள், (தலைப்பு இன்னமும் முடிவாகவில்லை) என்ற பெயரில் 2 ஆவது ஆவணப்படம் அடுத்த ஆண்டு வெளியிடப்படும் என்று எதிர்பார்ப்பதாக சனல்-4 தொலைக்காட்சி நிர்வாகம் கூறியுள்ளது.

இதற்கென இயக்குநர் கல்லும் மக்ரே ஒளிப்படங்கள், காணொளிப் பதிவுகள், நேரில் கண்ட சாட்சிகள், ஆவணங்கள் போன்ற புதிய சாட்சியங்களை சேகரித்துள்ளதாக இதன் தயாரிப்பாளர் ஜொன் சினோ தெரிவித்துள்ளார்.

போர்க்குற்றங்களுக்கு அதிகாரபூர்வமாக உடந்தையாக இருந்தவர்கள் பற்றிய மேலதிக சாட்சியங்களை இது வெளிப்படுத்தும் என்று நாம் நம்புகிறோம்.

நாம் எதைக் கண்டறிந்தோம் என்பதை தொடர்ந்து உலகுக்கு வெளிப்படுத்துவோம். முதலாவது ஆவணப்படத்தைப் போலவே இந்தப் படக்காட்சிகளும் அதிர்ச்சிகளைக் கொடுப்பதாகவும் விழிப்பை ஏற்படுத்துவதாகவும் அமையும் என்று நம்புகிறோம் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள, இந்த ஆவணப் படத்தைத் தயாரிக்க உத்தரவிட்டுள்ள சனல்-4 தொலைக் காட்சியின் செய்தி மற்றும் நடப்பு விவகாரத் தலைவர் டொரத்தி பைன்,

'சிறிலங்காவின் கொலைக் களங்கள்' மூலம் கொடூரங்கள் வெளிப்படுத்தப்பட்டது உலகெங்கும் கவலையைத் தோற்றுவித்ததுடன் மேலதிக விசாரணைகளுக்கும் அழைப்புகள் விடப்பட்டன.

இதன் அடிப்படையிலேயே உண்மையைக் கண்டறிந்து தொடர்ந்து வெளிப்படுத்த முடிவு செய்துள்ளோம் என்று கூறியுள்ளார். (வ)




கோண்டாவில் பொதுநூலகம், நல்லூர் பிரதேச சபை மற்றும் ஏசியா பவுண்டேசன் அமைப்பு என்பன இணைந்து தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி அண்மையில் நடத்திய வாசிப்பு மாத நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண சபை ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன் தனிமனித ஆளுமை பயிற்சிப் பட்டறையில் பங்கேற்ற மாணவரொருவருக்குச் சான்றிதழ் வழங்குகிறார். நூலகர் அருகில் செல்வி கிருஷ்ணசாமி அனிதா நிற்கிறார்.

# பிரபாகரனின் பிறந்த தினத்தன்று தமிழகத்தில் புதிய கட்சி உதயம்

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளான எதிர்வரும் 26ஆம் திகதியன்று தமிழகத்தில் புதிய கட்சி ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளது. பாட்டாளி மக்கள் கட்சியின் முன்னாள் உறுப்பினர் வேல் முருகன் இந்தக் கட்சியை ஆரம்பிக்கவுள்ளார்.

பா.ம.க. நிறுவுனர் டாக்டர் ராமதாஸின் போக்கையும், கட்சிப் பொதுச் செயலாளர் வடிவேல் ராவணனையும் கடுமையாக விமர்சித்துப் பேசியதைத் தொடர்ந்து வேல்முருகன் கட்சியிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டார்.

கட்சியின் முன்னணித் தளபதிகளில் ஒருவரான வேல் முருகனுக்கு ஏற்பட்ட இந்த கதி பா.ம.கவினரிடம் மட்டுமல்லாமல் மாற்றுக் கட்சியினர் மத்தியிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

நீக்கப்பட்ட வேல்முருகனை கட்சியில் இணைக்க தமிழகத்தின் அத்தனை பிரதான கட்சிகளான தி.மு.க., அ.தி.மு.க., தே.மு.தி.க., காங்கிரஸ், ம.தி.மு.க. என பல கட்சிகளும் முயன்றன.

எனினும் தனி இயக்கம் காண வேல்முருகன் முடிவு செய்துள்ளார்.

இந்த நிலையில் தனது புதுக் கட்சியை விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் பிறந்த நாளான எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பிக்க வேல் முருகன் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரபாகரனின் பிறந்த நாள் மாவீரர் தினமாக உலகம் முழுவதும் உள்ள தமிழர்களால் கொண்டாடப்படுகிறது. அன்றைய தினத்தில் வேல்முருகன் தனது புதிய கட்சியைத் ஆரம்பிப்பார் என்று கூறப்படுகிறது.

# பருத்தித்துறை பிரதான வீதிகளில் வெள்ளம்

பருத்தித்துறை நகரை அண்டிய பிரதான வீதிகளின் ஓரங்கள் சேறும் சகதியுமாக உள்ளன. இதனால் அந்த வீதிகளால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதுடன், வர்த்தக நிலையங்களும், பாடசாலைகளும் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றன. மாணவர்கள் இந்த வீதியில் உள்ள சேற்றையும் சகதியினையும் தாண்டி பாடசாலைக்குள்ளே செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் அவர்களின் சீருடையும் சேறினால் பாதிப்படைகின்றது.

தொலைபேசி பரிவர்த்தனை நிறுவனமொன்று அண்மையில் நிலத்துக் கடியில் கேபிள்களை இணைப்பதற்காக வெட்டப்பட்ட குழிகள் சரியான முறையில் மண் நிரப்பப்பட்டு பரவி மூடப்படாததினாலேயே அந்தக் கிடங்குகளில் மழை நீர் நிரம்பி சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது. என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(வ-190)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

யா/ நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி 2011.11.02 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள உயர்திரு

**இராமநாதன் குணநாதன்**

அவர்கள் மேலும் பதவி உயர்வுகள் பெற்று கல்விப் பணியாற்ற வாழ்த்துகிறோம்.



கோட்டக்கல்விப் பணிப்பாளரும் அதிபர்களும்
கோப்பாய்க் கல்விக்கோட்டம்.

(சி/5691) (2-6)

## பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்

குறைந்த் செலவில் நிறைந்த வருமானம் தருகின்ற சிறுகைத்தொழில். வீட்டில் இருந்தபடியே செய்யக்கூடியதும் உங்கள் வசதிக்கேற்றபடி தொழில் இடத்தை நிர்ணயிக்கக் கூடியதுமான மிக இலகுவான கலை நுட்பம் வாய்ந்த சிறு கைத்தொழில் .

வயது வேறுபாடு இன்றி குறுகிய காலத்தில் வெற்றிகரமாக தனித்து நின்று தொழில் செய்யக் கூடியது.

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்பட்டு குறிப்பிட்ட தொகையினருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

பதிவுகளுக்கு முந்திக் கொள்ளவும்
நேர்முகப் பரீட்சை 12.11.2011
சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு

மேலதிக விவரங்களுக்கு:

**தாரணி பதிப்பகம், ஆர்ட்ஸ்**
541 (319), கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.
(மனோகரா தியேட்டர் அருகில்)
0786161998

ஒவ்வொரு வகுப்புப் பிரிவிலும் 3 பேருக்கு மட்டும் இலவச வகுப்பு கொடுக்கப்படும். (ஊனமுற்றோர், செவிப்புலனிழந்தோர்)

குறிப்பு: துணிகளில் அச்சுப் பதித்தல், பிளாஸ்ரிக்கில் பிறிண்டிங், அழைப்பிதழ், விசிற்றிங்காட் பிறிண்டிங் மற்றும் பல........................ பயிற்றுவிக்கப்படும்.

(10200)(4-25-6)

## பணிப்பெண் தேவை

வீட்டு வேலைக்கும், பிள்ளை பராமரிப்புக்கும் பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(10197) தொடர்புகளுக்கு: 0772224913 (4-25-6)

## வீடு வாடகைக்கு

கொக்குவில் மஞ்சவனப்பதிக்கு முன்பாக சகல வசதிகளும் கொண்ட பெரிய மாடி வீடு அரச/ அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: எஸ்.சிவசுப்பிரமணியம், பாலசுப்பிரமணியம்.0770464298,0213001295

(10251) (3,8,6)

## நீண்டகால குத்தகைக்கு

மாகியப்பிட்டிச் சந்திக்கு அருகில் கடை கட்டடங்களுடன் கூடிய 7 பரப்புக் காணி நீண்டகால குத்தகைக்குக் கொடுக்கப்படும். நிறுவனங்கள் நடத்துவதற்கும் உகந்தது. எஞ்சிய விவரம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொ.பே: 0750416429

(10241) (4-25-6)

ஜெய் குருதேவ்



## வாழும் கலைப் பயிற்சி

மூச்சுப் பயிற்சி, பிராணாயாமா, சுதர்சன கிரியா, யோகா
10.11.2011 முதல்
13.11.2011 வரை

| நல்லூர் | வடமராட்சி |
|---|---|
| காலை (மட்டும்) 10-12.30 மணி வரை | மாலை (மட்டும்) 3 6 மணி வரை |
| மகேஸ்வரன் மணி மண்டபம் | இலங்கை வங்கி முகாமையாளர் இல்லம், V.M.வீதி, பருத்தித்துறை. |
| T.P: 0770474757 | T.P: 0779037321 |

(10253) (2-6,25)

## "யாழில் முதியோர் இல்லம்"

யாழ்.நகரப் பகுதி, வெள்ளவத்தையிலும் மருத்துவ, சிறப்பு பராமரிப்பாளரின் சேவையுடன் குறைந்த செலவில் முதியோர், நோயாளர்கள் பராமரிக்கப்படுகின்றனர்.

தொடர்பு: 0752555689,0718234691

(10242) (6,3,25)

## வல்வெட்டித்துறை நகரசபை ஆதனவரி அறிவித்தல்

நகரசபை எல்லைக்குட்பட்ட தற்போதைய குடியிருப்பாளர்கள் அனைவரும் தாம் இருக்கும் ஆதனத்துக்கான ஆதனவரியை டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும். தத்தமது பெயரில் ஆதனங்கள் இல்லா விடில் நகராட்சி மன்றத்தில் பெயர்மாற்று விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுபெயர் மாற்றம்செய்யு மாறும் இதுவரை காலம் உள்ள நிலுவைகளை உடன்செலுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அதேவேளை குடியிருப் பாளர்கள் இல்லாதவிடத்தும் அந்த ஆதனத்தில் தற்காலிக மாகவோ அல்லது நிரந்தரமாகவோ குடியிருக்கும் அனை வரும் தமது ஆதனவரிகளை செலுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தவறும் பட்சத்தில் நகர சபை விதிகளுக்கு அமைவாக சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என சகல குடியிருப்பாளர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ந. அனந்தராஜ்
08.11.2011 தலைவர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை

# ஹெஜின் உடன்படிக்கை, தரம் குறைந்த பெற்றோல் நஷ்டத்தை ஈடுசெய்யவே எரிபொருள் விலையுயர்வு

## அரசை கடுமையாகச் சாடுகிறது ஐ.தே.க.

கொழும்பு,நவ.10

ஹெஜின் உடன்படிக்கை, தரம் குறைந்த பெற்றோல் இறக்குமதி, எண்ணெய்க் குழாய் கசிவுகள் ஆகியவற்றால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்துகொள்ளவே இன்று எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் அத்தியாவசியப் பொருள்கள் தொடக்கம் சடலத்தை தகனம் செய்வதற்கான கட்டணம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளன - என்று எதிர்க்கட்சிப் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலையேற்றம் தொடர்பான கவனயீர்ப்பு விசேட உரையொன்றை எதிர்க்கட்சிப் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க நேற்றுமுன்தினம் சபையில் ஆற்றியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியதாவது:

என்றும் இல்லாதவாறு எரிபொருள்களின் விலைகள் இன்று அதிகரிக்கப்பட்டுள்ளன. பெற்றோல் லீற்றரின் விலை 12 ரூபாவாலும், டீசல் லீற்றரின் விலை 8 ரூபாவாலும், மண்ணெண்ணெய் லீற்றரின் விலை 10 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதன்படி புதிய விலைச் சீராக்கலின் பின்னர் பெற்றோல் லீற்றரின் விலை 137 ரூபாவாகவும், டீசல் லீற்றரின் விலை 84 ரூபாவாகவும், மண்ணெண்ணெய் லீற்றரின் விலை 71 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முறைகேடான நிதி நிர்வாகத்தினால் ஏற்பட்டுள்ள நஷ்டத்தை ஈடுசெய்துகொள்வதற்காகவே இந்த விலை அதிகரிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோன்று, ஹெஜின் உடன்படிக்கையால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்வதற்காகவும் இந்த விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட தரங்குறைந்த பெற்றோல் காரணமாக பல கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டது. இந்தத் தரங்குறைந்த பெற்றோல் பாவனை காரணமாகப் பாவனையாளர்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்வதற்கு நஷ்டஈடு வழங்கவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் பணம் இல்லை.

அத்துடன், எண்ணெய் குழாய்களில் ஏற்பட்டுள்ள வெடிப்பாலும், பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அப்பாவி மக்களுக்கே இந்தச் சுமை சுமத்தப்படுகிறது.

உலக சந்தையில் எரிபொருள் விலை இன்று வீழ்ச்சியடைந்துள்ளது. ஆனால், இன்னும் பெற்றோலின் விலை அதிகளவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதனால், பஸ் உரிமையாளர்கள் பஸ் கட்டண அதிகரிப்பைக் கோருகின்றனர். அதனையடுத்து, பாண் உட்பட அணைத்து அத்தியாவசியப் பொருள்களதும், சேவைகளதும் விலைகள் அதிகரிப்பதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்படும்.

இதனால், மக்களின் செலவுச் சுமையை அதிகரிக்கும் வரவு- செலவுத் திட்டத்துக்குப் பதிலாக செலவுச் சுமையையே அரசு முன்வைக்கிறது. எனவே, உடனடியாக எரிபொருள்களின் விலைகளை மக்களது நலனுக்காகக் குறைக்கும்படி கோருகிறேன் - என்றார். (ச-சி)

## இணையங்கள் முடக்கம்: ஐரோப்பிய ஒன்றியம் விசனம்

கொழும்பு,நவ.10

இலங்கையில் சில இணையத்தளங்கள் முடக்கப்பட்டமை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கவனம் செலுத்தி வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கை அலுவலகம் ஊடக அறிக்கையின் மூலம் இதைத் தெரிவித்துள்ளது.

எந்தவொரு ஜனநாயகக் கட்டமைப்பிலும் கருத்துச் சுதந்திரம் என்பது மிகவும் முதன்மையான காரணிகளில் ஒன்று என்று ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஊடகங்கள் சுயாதீனமாக இயங்குவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமெனவும் அது வலியுறுத்தியுள்ளது.

ஊடகங்களினால் வெளியிடப்படும் அனைத்துத் தரவுகளையும் பார்வையிடுவதற்கான உரிமை மக்களுக்கு உள்ளது எனவும் ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

கருத்துகளை சுயாதீனமாக வெளியிடும் திறமை அனைவருக்கும் இருக்க வேண்டும். ஊடக சுதந்திரத்திற்கு இலங்கை அரசு மதிப்பளிக்க வேண்டும் எனவும் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 5 செய்தி இணையத்தளங்கள் முடக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-சி)

## கொத்மலையில் உணவு நஞ்சாகி 30 படையினர் ஆஸ்பத்திரியில்

கொழும்பு, நவ.10

கொத்மலையிலுள்ள இராணுவத்தின் மொழிப்பயிற்சி நிறுவகத்தில் பரிமாறப் பட்ட உணவை உட்கொண்ட 30 படையினர் சுகயீனமுற்று கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.ரு

இவர்களில் நால்வர் வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஏனையோர் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற பின்னர் வீடுதிரும்பினர் என்று கம்பளை வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சரத் வீர பண்டார தெரிவித்தார்.

கொத்மலை மொழிக்கற்கை நிறுவகத்தில் பொலிஸாரும், படையினரும் வதிவிட பயிற்சிபெற்று வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் உணவு உட்கொண்ட பின்னர் வயிற்றுவலி மற்றும் வாந்தியினால் பாதிக்கப்பட்ட படையினர் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ச-சி)



சார்க் நாட்டுத் தலைவர்களின் 17ஆவது உச்சிமாநாட்டில் கலந்துகொள்ள நேற்று புதன்கிழமை காலை மாலைதீவுக்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினரை கென் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் நஷீட் உள்ளிட்ட குழுவினர் வரவேற்றனர்.

## சிங்கள வர்த்தகர்களை நெருக்கடிக்குள் தள்ள அரசு முயற்சி

### ரவி கருணாநாயக்க



அரசு மூடிய பொருளாதாரக் கொள்கைகளை அறிமுகம் செய்ய முயற்சித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் ஓர் கட்டமாகவே சொத்துக்களை தேசியமயப்ப டுத்தும் சட்டம் அறிமுகம் செய்யப்படுகின்றது என்று அவர் தெரிவித்துள்ளார்.1956 ஆம் ஆண்டில் பஸ் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் தேசிய மயப்படுத்தப்பட்டதனைப் போன்றே தற்போதும் அரசு தனியார் நிறுவனங்களை தேசியமயப்படுத்த முயற்சிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ், முஸ்லிம் வர்த்தகர்களை அரசு ஏற்கனவே நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ள நிலையில் இந்தச் சட்டத்தின் மூலம் சிங்கள வர்த்தர்களை அரசு நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

லாபமீட்டாத மிஹின் எயார், இலங்கை மின்சாரசபை போன்ற நிறுவனங்கள் குறித்து கவனம் செலுத்தாது தனியார் நிறுவனங்களை அரசு ஏன் இலக்கு வைக்கின்றது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ச)

## தீர்வு முயற்சி தேக்கமுற்ற நிலையில் மன்மோகன் - மஹிந்த சந்திப்பு

### மாலைதீவில் தனியாகப் பேசுவர்

கொழும்பு,நவ.10

சார்க் மாநாட்டில் பங்கேற்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும் தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர் என்று டில்லித் தகவல்கள் கூறுகின்றன.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சிகள் தேக்கமடைந்துள்ள பின்னணியில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது என்று இந்திய நாளேடு ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசுடன் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பாக பேச்சு நடத்திவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இடைநிறுத்திய பேச்சுகளை மீள ஆரம்பித்தபோதும் எந்த முன்னேற்றங்களும் எட்டப் படாத நிலையில், அமெரிக்க, பிரிட்டன், கனேடிய அதிகாரிகளுடன் பேச்சுகளை நடத்தி வருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெளிநாட்டுப் பயணங்கள் இலங்கை அரசுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தவில்லை.

இலங்கை அமைச்சர்கள் பலரும் இதற்கு எதிராக குரல் கொடுத்து வருகின்ற நிலையிலேயே, இந்தியப் பிரதமரும் இலங்கை ஜனாதிபதியும் மாலைதீவில் சந்திக்கவுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது பல்வேறு பிரச்சினைகள் குறித்து இருவரும் கலந்துரையாடவுள்ளனர் என்று கூறப்படுகிறது.

தற்போதைய சந்திப்பின்போது நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை தொடர்பாக இருவரும் கலந்துரையாடுவதற்கு வாய்ப்புகள் இருக்கிறது என்று இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த அறிக்கை எதிர்வரும் 15 ஆம் திகதியளவில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது. (ச-சி)

## அரசியல் தீர்வு காணும் செயற்பாட்டில் அரசுடனேயே பேச்சு நடத்த வேண்டும்

### அமைச்சர் டிலான் பெரேரா கூறுகிறார்



தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் ஓர் அரசியல் கட்சி என்ற அடிப்படையில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், மாலைதீவு மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்குச் சென்று சந்திப்புக்களை நடத்தி வருகின்றனர். ஆனால் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் செயற்பாட்டில் கூட்டமைப்பினர் இலங்கை அரசுடனேயே பேச்சு நடத்த வேண்டும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பினர் நாடு திரும்பியதும் அவர்களுடன் அரசு பேச்சுகளை ஆரம்பித்து பிரச்சினைக்கு தீர்வுகாண முன்வர வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் செயற்பாட்டுக்கு கூட்டமைப்பினர் இலங்கை அரசுடனேயே பேச்சு நடத்த வேண்டும். அதனைவிடுத்து புலம்பெயர் நாடுகளில் செயற்படும் சிலருக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் கூட்டமைப்பினர் செயற்பட்டால் அது தமிழ் மக்களுக்கு செய்கின்ற அநீதியாகவே இருக்கும்.

அரசுடன் பேச்சு நடத்தி பிரச்சினைக்கு தீர்வுகாண தமிழ் மக்கள் தயாராகவே இருக்கின்றனர். அதனை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (ச)

உதயன்
10 நவம்பர் 2011 வியாழக்கிழமை

# ஆதார வைத்தியசாலையாகிறது மல்லாவி பிரதேச மருத்துவமனை

## பொறுப்பு மருத்துவர் விஜயகுமார் நம்பிக்கை

அக்கராயன்,நவ.10

மல்லாவி பிரதேச மருத்துவமனை அடுத்த ஜனவரியில் இருந்து ஆதார வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்படவுள்ளதாக மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவர் வே.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

மல்லாவி மருத்துவமனையின் தற்போதைய நிலை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மீள்குடியமர்வின் பின்னர் மல்லாவி பிரதேச மருத்துவமனையில் அதிகளவு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. முக்கியமாக இந்த மருத்துவமனையை எதிர் வரும் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ஆதார வைத்தியசாலையாகத் தரம் உயர்த்துவதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் வாக்குறுதி அளித்துள்ளார்.

இதனடிப்படையில் எமது பிரதேச மருத்துவமனையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறை சீர் செய்யப்பட்டு வருகிறது. உதாரணமாக; ஆய்வுகூடப் பரிசோதனையாளர், இரண்டு மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் மருந்துக் கலவையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மருத்துவர்கள் அதிகளவில் இங்கு பணியாற்ற ேண்டும். ஆனால் அவர்களுக்கான விடுதி வசதிகள் இல்லை. ஆண்களுக்கான விடுதிகள் இரண்டும், பெண்களுக்கு ஒரு விடுதியும் அமைக்க வேண்டி உள்ளன. மகப்பேற்று விடுதி அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன. ஆதார மருத்துவமனையாக மல்லாவி பிரதேச மருத்துவமனை தரமுயர்த்தப்பட்டால் ஆளணி கூடுதலாகத் தேவைப்படும்.

புதிதாக இரு மருத்துவர்கள் பணிக்கு வரவுள்ளனர். தற்போது என்னையும் சேர்த்து ஆறு மருத்துவர்கள் பணியில் உள்ளோம். இது ஆதார மருத்துவமனையின் தரத்துக்குக் குறைவானதாக இருந்தாலும் தற்போதைய பிரதேச மருத்துவமனையின் தரத்துக்குப் போதுமானதாகும். தற்போது நோயாளர்களின் தேவைகளைச் சமாளிக்கக் கூடியதாக உள்ளது. ஆனால், ஜனவரியில் இருந்து ஆதார வைத்தியசாலையாகத் தரம் உயரும் போது மேலதிக ஆளணி தேவைப்படும்.

தற்போது மேலதிக சிகிச்சை தேவைப்படும் நோயாளர்களை வவுனியாவுக்கும் கிளிநொச்சிக்கும் அனுப்பி வருகின்றோம். மருத்துவ நிபுணர்களின் தேவையும் உள்ளது. ஊடுகதிர் சிகிச்சைப் பிரிவும் இல்லை. ஜனவரியில் யாவும் பூர்த்தியாகும் என்று நம்புகின்றோம்.

அதன் பின்னர் நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்கென வெளியே அனுப்பும் தேவை இருக்காது.

துணுக்காயிலும் ஐயன்குளத்திலும் நட்டாங்கண்டலிலும் மருத்துவர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நோயாளர் காவு வண்டி கூட இரண்டு உள்ளன. வெளி நோயாளர்கள் பிரிவும் அமைக்கப்படும். எதிர்காலத்தில் மல்லாவி பிரதேச மருத்துவமனை பெரு வளர்ச்சியடையும்- என்றார்.

(க-410)

# தண்ணீரைச் சேமிப்பதில் வீதிகளுக்கு அதிக அக்கறை

## மழை பெய்ததும் குழிகளாகின்றன

வவுனியா,நவ.10

வவுனியாவில் மழை காரணமாக நகரசபைக்கு உட்பட்ட பல வீதிகள் மோசமான நிலையில் சேதமடைந்துள்ளன.

மில்வீதி, கந்தசாமி கோயில் வீதி,முதலாம் மற்றும் இரண்டாம் குறுக்குத்தெரு ஆகிய வீதிகள் மிகவும் மோசமான முறையில் சேதமடைந்துள்ளதால் இந்த வீதிகளில் பயணிக்கும்போது சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னரே இந்த வீதிகளைப் புனரமைத்து வழங்குமாறு உரிய அதிகாரிகளிடம் கோரியிருந்ததாக மக்கள் தெரிவிக்கின்றனர். எனினும் இந்த வீதிகள் திருத்தப்படாதிருந்ததாகவும் தற்போது பாவனைக்கு உதவாத வீதிகளாக மாறியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, பஸ் நிலையத்தினுள் அமைந்துள்ள நகர சபையின் கடைத்தொகுதிகளுக்குள் மழை நீர் செல்வதால் வியாபாரம் செய்ய முடியாதுள்ளதாக வர்த்தகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். கட்டடத் தொகுதியின் மேற்கூரை சேதமடைந்தத்ன் காரணமாக மழைநீர் கடைகளுக்குள் ஒழுகுகின்றது. இதனால் வர்த்தக நிலையங்களிலுள்ள பொருள்கள் பழுதடைவதாகவும் வர்த்தகர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (க-எ)

# வீதிப் புனரமைப்பு காரணமாக வாகனப் போக்குவரத்தில் தடங்கல்

மல்லாவி,நவ.10

பனிக்கன்குளத்திலிருந்து 18 ஆம் போர் இறக்கம் வரையான பல மைல் தூரம் கொண்ட வீதி ஒரே நேரத்தில் புனரமைக்கப்படுவதால் வாகனங்களில் செல்வோர் அதிக சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இந்த வீதியால் ஒரு வழியில் மட்டுமே வாகனங்கள் பிரயாணம் செய்ய முடியுமாதலால் 30 நிமிடத்துக்கு மேல் தாமதம் ஏற்படுகின்றது. அத்துடன் மூன்று இடங்களில் வாகனங்கள் மறிக்கப்படுகின்றன.

அத்துடன் வீதியில் புதிய மதகுகள், பாலங்கள் என்பன அமைக்கப்படுவதால் மிக அவதானமாகவே வாகனங்களைச் செலுத்த வேண்டியுள்ளது.

இந்த வீதியின் புனரமைப்பு வேலைகள் மூன்று மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டபோதும் அரைகுறை நிலையிலேயே உள்ளன.

மேலும் இங்கு பெய்து கொண்டிருக்கும் கடும்மழை காரணமாக வீதியில் பறிக்கப்பட்டிருந்த கிரவல் மண் அடித்துச் செல்லப்பட்டுள்ளதால் மேலதிக செலவு ஏற்படுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

(க-425)

# பாடசாலைகளில் புனரமைப்புப் பணிகள்

அக்கராயன்,நவ.10

கிளிநொச்சி கல்வி வலயத்திலுள்ள ஒன்பது பாடசாலைகளில் புனரமைப்புப் பணிகள் இடம்பெறுகின்றன.

இயக்கச்சி அ.த.க., உருத்திரபுரம் இந்து ஆரம்ப வித்தியாலயம், மாயவனூர் பாடசாலை, பாரதிபுரம் திருவள்ளுவர் வித்தியாலயம், உருத்திரபுரம் ம.வி, திருவையாறு ம.வி, மயில்வாகனபுரம் ம.வி, பிரமந்தனாறு ம.வி., முழங்காவில் ம.வி. என்பவற்றில் 'என்றிப்' மற்றும் 'நெக்கொட்' ஆகியவற்றின் பங்களிப்புடன் புனரமைப்பு வேலைகள் இடம்பெறுகின்றன.(க-410)

## இதுவுமொரு தலைவிதி...



இவர்களுக்கும் வசந்தம் வீசுமா? புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படாததால் அவல வாழ்வு வாழ்கின்றனர். (6)

# ஓய்வு பெற்றுச் செல்கிறார் துணுக்காய் கல்விப் பணிப்பாளர்

துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் இந்த மாதம் 30 ஆம் திகதியுடன் ஓய்வு பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.போர் நெருக்கடி, இடப்பெயர்வுகள் , மீளக்குடியமர்வு ஆகியவற்றின் போது துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள 56 பாடசாலைகளை இயங்க வைப்பதில் இவர் பெரும் பங்காற்றியவர்.அத்துடன் துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள 7 ஆயிரத்து 920 மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் பல சிறந்த செயற்பாடுகளை உருவாக்கியவர்.

மேலும் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் வாசிப்பு, கணித செயற்பாடுகளை ஊக்குவித்து வந்ததுடன் துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள பின் தங்கிய கிராமப்புற பாடசாலைகளின் வளர்ச்சிக்காகவும் பெரும் அக்கறை செலுத்தி வந்தார். இவருடைய காலத்திலேயே மாங்குளத்தில் புதிய வலயக் கல்விப்பணிமனைக்கான கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-410)

# வன்னேரிக்குளத்தையும் தேவன்கட்டையையும் இணைக்கும் வேலைகள் தாமதம்

அக்கராயன்,நவ.10

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தையும் தேவன் கட்டையும் இணைத்து உருவாக்கப்படவுள்ள பெரும் நீர்த்தேக்கப் பணிகள் ஆரம்பிக்கப்படாத நிலையிலேயே உள்ளன.

1953ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வன்னேரிக்குளம் குடியேற்றத்திட்டத்தில் வாழ்கின்ற மக்களின் உயிர்நாடி வன்னேரிக்குளமாகும். இந்தக் குளத்தின் கீழ் 400 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த நிலையில் வன்னேரிக்குளத்தையும் தேவன்கட்டையும் இணைத்து உருவாக்கப்படும் நீர்த் தேக்கம் மூலம் 1000 ஏக்கருக்கும் மேலான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள முடியும். அத்துடன் உவராகும் ஆபத்திலுள்ள வன்னேரிக்குளம் கிராமத்தையும் உவர் ஆபத்திலிருந்து காப்பாற்ற முடியும்.


2006 ஆம் ஆண்டு முதல் வன்னேரிக்குளத்தையும் தேவன் கட்டையும் இணைக்கும் பணிகள் தொடர்பாக ஆராயப்பட்ட போதும் செயல் வடிவம் பெறாமல் உள்ளது.

வன்னேரிக்குளத்தையும் தேவன்கட்டையும் இணைக்குமாறு வன்னேரிக்குளம் கிராம மக்கள் கிளிநொச்சி அரச அதிபரிடம் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

வன்னேரிக்குளம் மற்றும் தேவன்கட்டு இணைக்கப்பட்டு நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்டால் பூநகரி வரையும் நன்னீர் கொண்டு செல்ல முடியுமெனபதுடன் மக்களின் விவசாய முயற்சிகளும் நல்லமுறையில் அமையும் வாய்ப்பு ஏற்படும்.

பூநகரிப் பிரதேசம் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டில் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பிரதேசத்திலே நன்னீர்க் கிணறுகள் மிகக் குறைவாகவே உள்ளன. இங்கு நிலத்தடி நீர் உவராக மாறியுள்ளதே இதற்கு முக்கிய காரணியாகும்.(க-410)

# அவல வாழ்வு வாழ்ந்து வரும் சிறுநாவற்குளம் கிராம மக்கள்



மன்னார்,நவ.10

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் வரும் சிறுநாவற்குளக் கிராமத்தில் மீளக்குடியமர்ந்து வசித்து வரும் மக்கள் எதுவித அடிப்படை வசதிகளுமின்றி அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

1990 ஆம் ஆண்டு நாட்டில் நிலவிய யுத்தம் காரணமாக இந்த மக்கள் இடம்பெயர்ந்து இந்தியா மற்றும் இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். இந்தியாவுக்குச் சென்றவர்கள் 2004 ஆம் ஆண்டு நாடு திரும்பினர். ஆனால் இந்தக் கிராமம் இராணுவப் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்டதால் மக்கள் குடியமர்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் கடந்த ஆனி மாதம் 33 குடும்பங்களைச் சேர்ந்த 165 பேர் இந்தக் கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ளனர். ஆனால் இவர்களுக்கான வீட்டுத்திட்ட நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படாத நிலையே காணப்படுகின்றது.

தற்போது தற்காலிக வீடுகளை அமைத்து வாழ்ந்துவரும் இவர்கள் கடும் மழை காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாததால் இவர்களின் வாழ்க்கையே கேள்விக்குறியாக மாறியுள்ளது.

அத்துடன் கிராமத்தைப் பார்க்கும்போது வனாந்தரம் போன்று காட்சியளிக்கின்றது.

இந்த மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதோடு வீட்டுத் திட்டமும் நிறுத்தப்பட்டுள்ளதாக இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (க-601)

# கிளிநொச்சியில் பொது வசதிகள் இதுவரை சீர் செய்யப்படவில்லை

## அதிகாரிகள் அசமந்தப் போக்கு - மக்கள் விசனம்

கிளிநொச்சி, நவ.10

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்வு இடம்பெற்று இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் பொது வசதிகள் இன்னும் சீராக செய்யப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

பொது மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களை பெற்றுக் கொள்வதற்குரிய சந்தை வசதிகள் நகரில் இல்லையென தெரிவிக்கின்றனர்.

யுத்தகாலத்திலும், மீளக் குடியமர்வு ஆரம்பிக்கப்பட்ட வேளையிலும் கிளிநொச்சி நகரில் இயங்கிவந்த பொதுச் சந்தை அங்கிருந்து அகற்றப்பட்டு இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள அம்பாள் குளத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. இதனால் வர்த்தகர்களும், பொது மக்களும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்து வசதி அற்ற இடத்தில் இந்தப் பொதுச் சந்தை அமைக்கப்பட்டிருப்பதால் அங்கு மக்கள் செல்வதில்லை. இதனால் வழமையான வியாபார நடவடிக்கைகள் இடம்பெறுவதில்லை. இதன் காரணமாக சந்தை வியாபாரிகள் பெரும் நட்டத்திற்கு உள்ளாக நேரிட்டுள்ளது.

கிளிநொச்சி நகரில் இருந்து ஒதுக்குப்புறமான இடத்துக்கு சந்தையைக் கொண்டு சென்று இருப்பதால் நகரில் இருந்து சிரமத்தின் மத்தியில் சந்தைக்குச் செல்ல வேண்டியிருப்பதாக பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.


கிளி நொச்சி நகரின் பொதுச் சந்தை ஆறு மாதத்தில் அதன் பழைய இடத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு விடும் என அதிகாரிகள் உறுதியளித்திருந்த போதிலும் ஒரு வருடம் கடந்த நிலையிலும் உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை என சந்தைவியாபாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதே போன்று கிளிநொச்சி பஸ் நிலையமும் பயணிகள் நிற்பதற்குக் கூட வசதியற்ற நிலையில் உள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த இந்தப் பொது வசதிகளைஏற்படுத்துவதற்குப் பொறுப்பான கரைச்சிப் பிரதேச சபையினர் மீளக் குடியமர்வு ஆரம்பிக்கப்பட்ட போது பல்வேறு காரணங் களினால் அம்பாள் குளத்திற்கு சந்தையை மாற்ற வேண்டி இருப்பதாக தெரிவித்தனர். இந்தச் சந்தையில் அடிப்படை வசதிகள் இல்லாதிருப்பதை ஒப்புக் கொண்ட அவர் அவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகப் படிப்படியாக நடவடிக்கைகள் எடுக் கப்பட்டுள்ளதாக கூறியுள்ளனர்.

அத்துடன் பழைய இடத்தில் 274 மில்லியன் ரூபா செலவில் புதிய சந்தைக் கட்டடத் தொகுதி அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு முதற்கட்ட வேலைகள் நடைபெற்று வருவதாகவும் எதிர் வரும் 2013 ஆம் ஆண்டு இந்தப் பணிகள் முற்றுப் பெறும் என்றும் தெரிவித்துள்ளனர். (க-எ)

## நெல்வயல் போலும்...



பாவம் வீரர்கள்: கண்டாவளை கோரக்கன்கட்டுக் கிராமத்தில் டி.ஆர்.சி. நிறுவனத்தால் புனரமைக்கப்பட்ட விளையாட்டு மைதானம் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றது. (6)

# கிளிநொச்சி பஸ் நிலையம், சந்தை மக்களின் தேவைக்கு ஏற்றவாறு இல்லை

கிளிநொச்சி நவ.10

யுத்தத்தின் பின்னர் மெல்ல மெல்ல இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் கிளிநொச்சியில், மக்களின் அத்தியாவசிய தேவைகள் இன்னமும் நிறைவேற்றப்படாத நிலையிலேயே உள்ளதாக அங்கு வசிக்கும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சந்தை வசதிகள், பஸ் நிலையங்கள் ஏற்படுத்தப்படாமை, வடிகால் வசதிகள், சேதமடைந்த பாலங்கள், வீதிகள் என்பன திருத்தப்படாமை போன்றன மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பெரும் சவால்களாக அமைந்துள்ளன.

கிளிநொச்சி நகரில் இயங்கி வந்த பொதுச்சந்தை தேவையற்ற விதத்தில் அம்பாள் குளத்துக்கு மாற்றப்பட்டுள்ளமை மக்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இதைப் போன்றே கிளிநொச்சிப் பஸ் நிலையமும் மக்களுக்கு உதவாத நிலையில் காணப் படுகின்றது.

பொதுச்சந்தையின் வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் இதன் வேலைகள் 2013 ஆம் ஆண்டிலேயே நிறைவு பெறுமாகையால் அதுவரை தாம் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிவருமென மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.(க)

# கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னமும் 29 சதுர கிலோ மீற்றரில் கண்ணிவெடிகள்

கிளிநொச்சி, நவ.10

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னமும் 29 மில்லியன் சதுர கிலோ மீற்றர் பகுதியில் கண்ணிவெடி அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 68 மில்லியன் சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தில் இங்கு கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

அகற்றப்படாத பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவில் மட்டும் இன்னமும் மூன்று கிராம சேவகர் பிரிவுகளில் கண்ணிவெடிகள் அகற்றப்படவுள்ளன. இதனாலேயே இந்தப் பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு தாமதமாகி வருகின்றது.

மேலும் யுத்தத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் லட்சக்கணக்கான அளவில் கண்ணிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டிருந்தன. இவை மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள நிலையில் இவற்றை அகற்றும் பணிகள் மெதுவே இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு விடிவுகாலம் புனரமைப்புப் பணிகள் துரித கதியில்

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வைத்திய சாலைகளின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த மாவட்டத்திலுள்ள பூநகரி, பளை, முழங்காவில் ஆகிய வைத்தியசாலைகளின் புனரமைப்புப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மக்கள் இந்தப் பகுதிகளில் மீளக்குடியமர்ந்த பின்னர் யுத்தத்தினால் சேதமடைந்திருந்த இந்த வைத்திய சாலையை புனரமைத்து வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர். இந்தப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

பூநகரி வைத்தியசாலையின் அமைப்பு தற்காலத்துக்கு உகந்ததாக அமையவில்லையென பலரும் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் தற்போது 15 ஏக்கர் நிலப் பரப்பில் அமெரிக்க நிபுனர் குழுவின் அனுசரணையுடன் புதிய கட்டடத் தொகுதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் ஏழு பிரதேச வைத்தியசாலைகளும் , ஒரு மாவட்ட வைத்திய சாலையும் இரண்டு சித்த வைத்திய சாலைகளும் அமைக்கப் படவுள்ளன.

இந்த நிலையில் 28 பதவி வெற்றிடங்கள் உள்ளதாகவும் இவற்றை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (க)

# மல்லாவி மத்திய கல்லூரியின் பொன்விழா நேற்று ஆரம்பம்

மல்லாவி,நவ.10

முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரியின் பொன்விழா நேற்று புதன்கிழமை ஆரம்பமாகி இன்றும், நாளை வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளன.

கல்லூரியின் அதிபர் து.யேசுதாசன் தலைமையில் நடைபெற்றுவரும் இப்போட்டிகளில் மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் 14 கி.மீ தூரம் கொண்ட மரதன் ஓட்டப்போட்டியில் துணுக்காய், மாந்தை கிழக்கு கோட்டங்களின் மாணவர்கள் பங்குகொள்ளவுள்ளனர். (எ-410)

# நகர சபையினரும் பொலிஸாரும் இணைந்து மன்னாரில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்

மன்னார்,நவ.10

மன்னார் நகரசபையினரும் பொலிஸாரும் இணைந்து நேற்றுப் புதன்கிழமை மன்னாரில் பெரிய அளவில் டெங்கு ஒழிப்புக்கான சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

தற்போது பெய்துவரும் மழை காரணமாக வெள்ளம் தேங்கியுள்ளது. அத்துடன் டெங்கு நுளம்புகளின் பெருக்கமும் காணப்படுகின்றது.

மேலும் சிலர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த நிலையில் இந்த டெங்கு ஒழிப்புச் சிரமதானப் பணிகள் நடைபெற்றுள்ளன.



இதில் கடற்படையினரும் இராணுவத்தினரும் இணைந்து கொண்டதோடு தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கினர்.

இந்தச் சிரமதானப் பணிகள் பிற்பகல் 1.30 மணிவரை இடம் பெற்றன.

மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமெல், மன்னார் நகரபிதா எஸ்.ஞானப் பிரகாசம், நகரசபையின் உப தலைவரான ஜேம்ஸ் ஜேசுதாஸ், நகரசபை உறுப்பினர்கள், மன்னார் பொலிஸ் நிலையத் தலைமையகப் பொறுப்பதிகாரி வி.எம்.ஜெயவர்த்தன ஆகியோரும் இந்தச் சிரமதானப் பணிகளில் கலந்து கொண்டனர்.

தற்போது மன்னாரில் பெய்து வரும் கடும் மழை காரணமாக மக்கள் குடியிருக்கும் இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதால் பல்வேறு நோய்கள் பரவும் அபாய நிலையும் தோன்றியுள்ளது.

இதனால் இத்தகைய செயற்பாடுகள் உபயோகமுள்ளதாக இருக்குமென பலரும் பாராட்டியுள்ளனர். (க-601)

# இன்றைய இளம் சமுதாயத்தின் இணையப் பாவனை




## ஆரோக்கியமானது

இன்றைய இளம் சமுதாயத்தின் இணையப் பாவனை பல வழிகளிலும் நன்மை பயப்பதாகும். பல நூலகங்களின் கூட்டுத் தான் இணையமாகும். தற்போது மனிதன் துரித கதியில் செயற்படுவதற்கு இணையம் பல்வேறு வழிகளில் ஒத்தாசை புரிகிறது. கல்வி விடயங்கள் என்றாலும் சரி, பொழுதுபோக்கு விடயமானாலும்சரிஏன்வணிக செயற்பாடுகளிலும் கூட இணையம் ஆற்றும் பங்கு அளப்பரியது.

அந்த வகையிலே இன்றைய இளம் சமூகத்தினர் இணையத்தை வேறுபட்ட பல கோணங்களில் பயன்படுத்திப் பயனடைகின்றனர். கல்வி சம்பந்தமான செயற்பாடுகளிலே தமது தேடல்களை இலகுவாக மேற்கொள்கின்றனர். இங்கிருந்தவாறே வெளிநாட்டுப் பரீட்சைகளில் தோற்றிச் சித்தியடைகின்றனர்.

இணையத்தின் ஊடாகத் தொழில் மற்றும் சுயதொழில் வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்கின்றார்கள். வெளி நாட்டுப் பிரஜைகளுடன் பழகிப் பல நன்மைகளைப் பெறுகின்றார்கள். உலக நடப்புக்களை அலசி ஆராய்கிறார்கள். உலக மேடையிலே உட்கார்ந்து கொள்கிறார்கள். மற்றும் எமது இளம் சமூகத்தினர் சர்வதேச வளர்ச்சிகளுக்கு ஏற்ப தம்மை இயைபாக்கிக் கொள்ளவும் இணையத்தை ஓர் பாதையாக்கி கொள்கின்றார்கள் என்றால் அது மிகையாகாதாம். ஆதலினால் இளம் சமுதாயத்தினர்இணையத்தை ஆக்கபூர்வமான முறையிலே நாடினால் அது நல்கும் நன்மைகள் ஏராளம்.

**வி.திவாகரன்,**
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

## ஆரோக்கியமற்றது

இன்றைய இளம் சமுதாயத்துக்கு இணையப் பயன்பாடு ஆரோக்கியம் அற்ற ஒன்றாகவே காணப்படுகின்றது. இணையம் என்று நாம் இங்கே கருதுவது Internet என்ற ஆங்கிலப்பதத்தில் கூறப்படுவதனை ஆகும். இந்த இணையத்தில் இளம் சமுதாயம் கற்றுக் கொள்ள வேண்டிய பல விடயங்கள் காணப்பட்டாலும் அதில் இளம் சமுதாயத்தை முக்கியமாக மாணவர்களைப் பயங்கரக் குழியில் தள்ளும் தீமையான விடயங்களும் சரிக்குச் சரியாகக் காணப்படுகின்றன. அதிலே சில விடயங்கள் முக்கியத்துவம் வாய்ந்தன. குறிப்பாக மாணவர்களிடையே பரவலாகக் காணப்படும் 'முகப்புத்தகம்' என்று அழைக்கப்படும் 'Face book' பாவனை முக்கிய இடம் வகிக்கிறது. அத்துடன் 'Facebook' மூலம் இளம் யுவதிகள் மற்றும் இளைஞர்கள் ஏமாற்றப்படல். இணையத்தில் காணப்படும் ஆபாசப் படங்கள் மற்றும் ஆபாச வசனங்கள் என்பவை இளம் சமுதாயத்தை ஆரோக்கிய மற்றதொன்றாக மாற்றுகின்றன என்பதில் ஐயமில்லை.

நாட்டுக்குச் சேவைகளைச் செய்ய வேண்டிய இளைஞர்கள் இந்த இணையப்பாவனை மூலம் தங்கள்நிலைகளைமறந்துஅதில் காணப்படும் தீமை யான விடயங்களால் உள்வாங்கப் பட்டு தமது எதிர்காலத்தைத் தொலைத்த ஏதிலிகள் ஆகின்றனர். நாளைய தலைவர்களான இளைஞர்களை பாதுகாக்க வேண்டியது எமது கடமையல்லவா! எனவே இணையப் பாவனையை குறைத்து வளம் மிக்க இளம் சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதே என் தரப்பு வாதமாகும்.

**B.பிரியங்கா,**
அரசடி, ஆனைக்கோட்டை.

### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

*'இளவல்கள் வட்டம்',*
*'உதயன்',*
*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பெயர் : ..................................................
முகவரி : ..................................................
..................................................
.................... திகதி
.................... கையொப்பம்

# தோன்றிய காலம் தெரியாத இந்து மதம்



உலகில் உள்ள ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு கால கட்டத்தில் ஒவ்வொரு மதகுருவால் தோற்றுவிக்கப்பட்டது.

ஆனால் இந்து மதம் ஒருவரால் காலத்துக்கு ஏற்றவாறு தோற்றுவிக்கப்படாமல், உலகம் தோன்றிய காலம் முதல் ஆண்டவராலேயே தோற்றுவிக்கப்பட்டு எல்லாக் காலத்துக்கும் எல்லா மக்களுக்கும் ஏற்றவகையில் அநாதியாய் இருந்து வந்து தற்போது இந்து மதம் தவிர உலகில் உள்ள மதங்கள் எல்லாம் மூவாயிரம் நான்காயிரம் வருடங்களுக்கு முன்பு தோன்றியவை.

அதற்கு முன்னால் இருந்த மதங்கள் எல்லாம் இப்போது இல்லை.

இந்துமதம் எப்போது தோன்றியது என்பதை எவராலும் கூறமுடியாது, அழிக்கமுடியாது காணப்படுகின்றது.

**வி.ஜெயரூபி**
யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.

# சிந்தனைத்துளிகள்

★ துயரம் மனிதனை அழித்து விடுவது போன்று வேறெதுவும் அவனுக்குக் கேடு செய்ய முடியாது.
★ பிழைகள் புரியாத பெருமையுற்றவன் எவனுமில்லை நீ செய்த பிழைகளைக் குறித்து மனந்தளராதே அவைகளில் இருந்து பாடம் கற்றுக்கொள்.
★ விலை கொடுக்காமல் பெற இயலாத ஒரு பொருள் அனுபவம்
★ தீர்மானிக்க மனம், வழிவகுக்க அறிவு; செய்து முடிக்க கை அவசியம்.
★ இன்பங்கள் சேர்ந்து வருவதில்லை; துன்பங்கள் தனியே வருவதில்லை.
★ நீ பேசுவதை எல்லாம் சிந்தித்துப்பார் ஆனால் சிந்திப்பதை எல்லாம் பேசிவிடாதே.
★ கௌரவம் கொடு; அதேபோல் கௌரவம் கிடைக்கும்.
★ நல்ல நம்பிக்கை எதிர்காலத்துக்கு ஒளி அளிக்கும்.
★ கோபம் கொள்வது மற்றவர் செய்த தவறுக்காகத் தன்னைப் பழிவாங்குவதாகும்.
★ அன்புடன் பழகுபவர்களுக்கு அந்நியர் யாரும் இல்லை.
★ கவலைகள் உன்னில் வாழலாம்; ஆனால் கவலைகளால் நீ வாழாதே.

**ச.டிலானி**
Arts-2011 G.C.E

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

இன்றைய இளம் சமுதாயத்தின் இணையப் பாவனை

ஆரோக்கியமானதா [ ] ஆரோக்கியமற்றதா [ ]

பெயர்: ..................................................
முகவரி: ..................................................
அடையாள அட்டை இல.. ..................................................

உங்கள் தீர்ப்புக்களை 24.11.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.



# மௌனம்

எத்தனையோ சோகங்கள் இதயமதில்
எடுத்துரைக்க வார்த்தைகள்
இல்லை என்பதால்
இத்தனையும் தாங்கி மௌனித்துப்
போயுள்ள
என் அப்பாவி விழிகள்
விடியலின் எதிர்ப்பக்கமாய் மாறிய
என் வாழ்வு
இவ்வாறு காலம் தந்த காயங்கள்
வலியல்ல
இன்று நீ தந்த மௌனத்தைத் தவிர

**ராதிகா,**
**பொலிகண்டி**

# நாடுகளும் பழமொழிகளும்

நீங்கள் விதைப்பதைத்தான் அறுவடை செய்யப் போகிறீர்கள். அப்படியிருக்க அதை ஏன் நல்ல எண்ணங்களாக விதைக்கக் கூடாது?

**பிரெஞ்சு**

பயந்து பயந்து சாவது ஒவ்வொரு நற்குணத்துக்கும் தடையாக இருக்கும்.

**இத்தாலி**

இலவசமாக நீ ஒன்றைப் பெற்றுக்கொள் வாயானால் உன் சுதந்திரம் பறிபோய் விடும்.

**போலந்து**

தீபங்கள் அணைந்த பின்னர் எல்லாப் பெண்களும் அழகியரே.

**ஒறங்கேரி**

**கஜானி**
11 ஆம் வட்டாரம் நெடுந்தீவு

விவாத மேடைப் பகுதியில் ஆலயங்களில் மிருகப்பலியிடுதல் ஏற்றுக் கொள்ள முடியாததென்ற அணி வெற்றி பெற்றுள்ளது. அந்த அணிக்காக வாக்களித்தவர்களில் வெற்றி பெற்றோர் விபரம்:

1. ஜனனி மோகனதாஸ் - கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்
2. மகவத்சிங் ஆத்மீகா - நீர் வேலி தெற்கு
3. இரத்தினம் நர்மதன் - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

சிறந்த ஆக்கத்தை அனுப்பியவர்
வி.எஸ். இராசதுரை உடுவில் தெற்கு.

மேலும் சிறந்த ஆக்கத்தை அனுப்பியவர்கள்

1. எஸ். சுலக்ஸன்-சுருவில் வீதி, ஊர்காவல்துறை
2. செ. சுகிர்தா- சங்கானை
3. கலையரசி- துணவி
4. கே.எஸ்.சிவஞானராஜா- கொக்குவில்
5. எஸ்.டிலானி- 16/10, அம்மன் வீதி, திருநெல்வேலி
6. சூ.மேகலா- வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.
7. வி.விசாகன்- மீசாலை மேற்கு.
8. க. சி.இராசரத்தினம்- ஏழாலை

# அட்டாளைச்சேனையில் இராணுவ முகாம் அமைப்பதற்கு எதிராக மக்கள் போராட்டம்

அட்டாளைச்சேனை, நவ.10

தமது காணிகளில் இராணுவத்தினர் அத்துமீறி முகாம்களை அமைத்து வருகின்றனர் எனக் குற்றம் சுமத்தி அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட அஷ்ரப் நகர் பிரதேச மக்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



இந்த ஆர்ப்பாட்டத்தில் இராணுவத்தினரை அங்கிருந்து உடனடியாக வெளியேறும்படியும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

"எமது குடியிருப்பு மற்றும் பயிர்ச் செய்கை நிலங்களில் கடந்த சில நாள்களாக இராணுவத்தினர் அத்துமீறி நுழைந்து சிறிய ரக மினி முகாம்களை அமைத்து வருகின்றனர். இதனால் எமக்குச் சொந்தமான காணிகளுக்குள் நாம் நுழைவதை இராணுவத்தினர் தடுத்து வருகின்றனர்" - என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

அஷ்ரப் நகர் பகுதியிலுள்ள இரண்டு இடங்களில் இராணுவத்தினர் தற்போது குடிகொண்டுள்ளனர். இதேவேளை, குறித்த பகுதியில் இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விவகாரம் குறித்து அங்குள்ள இராணுவ அதிகாரி நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கும்போது,

அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நாம் இராணுவ முகாம்களை அமைத்து வருகின்றோம். அது போன்றதொரு நடவடிக்கையே இதுவாகும்.

இந்தப் பிரதேசத்தின் பாதுகாப்பினைப் பலப்படுத்தும் நோக்குடனேயே நாம் இங்கு இராணுவ முகாம்களை அமைத்துள்ளோம். மேலும், இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள இந்த இடமானது, அரசுக்கு சொந்தமானது என்று மாவட்ட செயலாளரால் எமக்கு அடையாளம் காட்டப்பட்டது. அதனால் தான் நாம் இங்கு நிலைகொண்டுள்ளோம் - என்றார்.

அட்டாளைச் சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட அஷ்ரப் நகரில் சுமார் 186 குடும்பங்கள் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தும் தீர்வைக் காண அரசு தவறிவிட்டது

**ஜே.வி.பி. பொதுச் செயலாளர்**



அரசு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தபோதிலும், தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தவறிவிட்டது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கண்டி தபாலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து தெரிவித்ததாவது:

இன்று எமது நாடு ஆபத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. நாட்டின் பொருளாதாரம் சின்னாபின்னமாகியுள்ளது. அரசு கூறுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் வெறும் வார்த்தைகள் மாத்திரமே. அவர்கள் கூறுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் உண்மையாக இருந்தால் ஏன் அத்தியாவசிய பொருள்களின் விலை இவ்வளவு உயர்வடைந்து செல்கின்றது- என்றார். (ச)



கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ்.எம்.ஜாபிர், வைத்திய அத்தியட்சகராகப் பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியானதை யொட்டி வைத்தியசாலை ஊழியர் நலன்புரி சங்கம் பாராட்டு விழாவை நடத்தியது. இந்த விழாவில் ஊழியர் நலன்புரி சங்கச் செயலாளர் எஸ்.சிவஞானசீலன், பொருளாளர் எஸ்.விஷ்ணுதாஸன் ஆகியோர் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஜாபிருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றனர். (ச-30)

## பிரதேச செயலர் இடமாற்றம் பழிவாங்கும் செயல்

வெல்லாவெளி, நவ.10

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் அம்பாறை மாவட்டத்துக்குத் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டமை நாகரிகமற்ற செயல்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் அரச அதிகாரி தனது கடமைகளைச் சுயமாகச் செய்ய முடியாத நிலையில் சிங்கள அரசு கட்டுப்படுத்துகிற செயல் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

இந்தச் செயற்பாடானது ஒரு இனத்தின் சுயநலத்துக்காக மற்றைய இனத்தைப் பழிவாங்கும் செயலாகவே எண்ணத் தோன்றுகிறது.

இது நேர்மையாகக் கடமையைச் செய்வதற்குப் பழிவாங்கும் செயலாகவே அமைகிறது. ஒரு நாட்டின் அரசு எல்லா மக்களையும் சமமாகப் பார்க்கவேண்டும்.

ஆனால் அந்த விடயத்தில் அன்று தொடக்கம் இன்றுவரை பாகுபாட்டுடன் நடத்தி வருகின்றது - என்றார். (ச)

## யானைகளின் தாக்குதலில் வீடு சேதம்



அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட அஷ்ரப் நகர் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு யானைகளின் தாக்குதலுக்குள்ளாகி வீடொன்று அதிக சேதத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து தெரிவிக்கப்படுவதாவது:

இரண்டு யானைகள் வீட்டினை இடித்துத் தள்ளியதோடு, சுற்றியிருந்த மரங்களையும் வேரோடு பிடுங்கி எறிந்துள்ளன. இந்த வீட்டிலிருந்தோர் அண்மையில் உள்ள வீட்டுக்குத் தப்பிச் சென்று விட்டனர்.

இந்த வீடு முன்னரும் யானைகளால் சேதப்படுத்தப்பட்டது.

ஆனால், அதற்கான எந்தவித நஷ்டஈடுகளும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## மானிய விலையில் பொருள்களை வழங்குக

**இலங்கை - இந்திய வம்சாவளி தொழிலாளர் சங்கம் வேண்டுகோள்**

நுவரெலியா, நவ.10

எரிபொருள்களின் விலையேற்றம் காரணமாக அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனால், மலையகப் பெருந்தோட்டத் தொழி லாளர்கள் மோசமான வறுமை நிலையை எதிர்நோக்கியுள்ளனர். எனவே, இது தொடர்பில் மாற்று நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசு முன்வரவேண்டும் என்று இலங்கை -இந்திய வம்சாவளி தொழிலாளர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை- இந்திய வம்சாவளி தொழிலாளர் சங்கத்தின் தலைவர் முத்தப்பன் செட்டியார் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில் இரண்டு வருடத்திற்கு ஒரு தடவையே சம்பள அதிகரிப்பை எதிர் கொள்ளும் மலையக பெருந்தோட்டத் தொழிலாளரின் பொருளாதார மேம்பாட்டை கட்டியெழுப்பி அவர்களது வறுமை நிலைமை யைப் போக்குவதற்கு அரசு கால தாமதமின்றி மானிய அடிப்படையிலான உதவிகளை வழங்க முன்வர வேண்டும்.

எரிபொருள்களின் விலை அதிகரிப்பு காரணமாக எழுந்துள்ள போக்குவரத்து செலவீனத்தால் அத்தியாவசிய பொருள்களின் விலைகள் பல மடங்கு அதிகரித்துள்ளன. தோட்டத் தொழிலாளர் களின் பிரதான உணவுக்கு கோதுமைமாவே பயன்படுத்தப்படுகின்றது.

அதன் விலை மலையகத்தில் இடத்துக்கு இடம் மாறுபட்டு விற்பனை செய்யப்படுகின்றது- என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## 100 அடி பள்ளத்தில் பாய்ந்தது வாகனம்!

மஸ்கெலியா, நவ.10

இரத்தினபுரி மின்சாரசபைக்குச் சொந்தமான சொகுசு வாகனம் கடந்த திங்கட்கிழமை நோட்டன் மஸ்கெலியா பிரதான வீதியில் மவுசாகலை தோட்ட வைத்தியசாலைக்கு அருகில் 100 அடி பள்ளத்தில் வீழ்ந்ததில் மூவர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சாரதியின் கவனக் குறைவினாலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அந்த சொகுசு வாகனத்தில் பயணித்த திட்ட உயரதிகாரி சமரவீர பண்டா, இரத்தினபுரி மின்சார சபை முகாமையாளர் கல்தேரா, காரின் சாரதி ஆகியோரே காயமடைந்துள்ளனர். (ச)

## வன விலங்குகளை வேட்டையாடியோர் பொலிஸாரால் கைது

அப்புத்தளை பொலிஸ் நிலைய பகுதிக்கு உட்பட்ட லேமாஸ்தொட பிரதேசத்தில் வனவிலங்குகளை வேட்டையாடி வந்த சந்தேகநபர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

வனவிலங்குகளை வேட்டையாடி அவற்றின் இறைச்சியை அதிக விலைக்கு விற்று வந்த இவர்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவல் ஒன்றைத் தொடர்ந்து நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபர்களைக் கைது செய்ததுடன் துப்பாக்கி ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர். (ச)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:**
நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர் உங்களைத் தேடி வரலாம். புதிய முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. உத்தியோகத்தர்கள் பொறுப்பான வேலைகளால் அலைக்கழிப்புகளுக்கு ஆள்படலாம். அரசியல்வாதிகளை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம்.

**இடபம்:**
பெரிய அளவில் ஆசைப்பட்ட ஒரு காரியம் நடக்காமல் போகலாம். பிள்ளைகள், குடும்பத்தினர் வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். சிலர் உங்களை நம்பி ஒப்படைத்த வேலைகளை முடிக்காமல் சாக்குப் போக்குச் சொல்லிச் சமாளிக்கலாம். தொழில் ரீதியான பயணம் செல்லலாம். பெண்கள் விடயத்தில் கவனம் அவசியம்.

**மிதுனம்:**
குதர்க்கமாகப் பேசும் சிலரிடம் அன்பாகப் பேசி அவர்களின் நட்பைப் பெறுவீர்கள். மாமன், மைத்துனர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி, சந்தோஷம் அடைவீர்கள். நடக்குமோ நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று எளிதில் நடந்து விடும். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்கலாம்.

**கடகம்:**
உங்களின் துணிச்சலான செயற்பாடுகளை பார்த்து மற்றவர்கள் வியப்படைவர். அயலாரிடம் கலகலப்பாகப் பேசி மகிழ்வீர்கள். பெண்கள் பிள்ளைகளின் செயற்பாடுகளை நினைத்துப் பெருமை அடைவர். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். கொடுத்த வாக்கை எப்பாடு பட்டாவது காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**சிங்கம்:**
அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளால் அவதிகளுக்கு ஆள்படலாம். இரண்டு நாள்களாக சந்திக்க முடியாமல் போன ஒருவரை இன்று திடீரெனச் சந்திக்கலாம். பழைய நண்பர் ஒருவர் மூலம் புதிய நண்பரின் அறிமுகம் கிடைக்கும். உங்களுக்காக மற்றொருவர் கணிசமான பணத்தைச் செலவிடலாம்.

**கன்னி:**
மனதில் இனம்புரியாத கவலை குடிகொள்ளும். உங்களிடம் உதாசீனமாக நடந்து கொள்ளும் சிலரை எண்ணி கோபம் அடைவீர்கள். உங்களுக்கு உதவி செய்வதாகச் சொன்னவர்கள் அதைச் செய்யாமல் இழுத்தடிக்கலாம். சில வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைத்து விட்டு அது எப்படியாகுமோ என பயம் கொள்ளலாம்.

**துலாம்:**
ஓய்வின்றி அடுக்கடுக்காக பல வேலைகளைச் செய்வீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். தொழிலில் மிகுந்த அக்கறை, ஆர்வத்துடன் செயற்படுவீர்கள். நீண்டநாள்களாக முயற்சித்த காரியம் ஒன்றில் இன்று பலன் கிட்டலாம். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறலாம். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்:**
உறவினர் ஒருவருக்கு சில உதவிகளைச் செய்யலாம். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். பெற்றோர் தொடர்பான விடயங்களில் வீண் பிடிவாதம், சர்ச்சைகளை தவிர்க்க வேண்டும். ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்ட குடும்ப உறுப்பினர்கள் மனம் மாறுவர். நண்பர் ஒருவர் சொல்லும் ஆலோசனையின் பேரில், சில வேலைகளை எளிதாக முடிப்பீர்கள்.

**தனுசு:**
தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். முன்யோசனை இல்லாமல் செயற்படுவதன் மூலம் சில விடயங்களில் தடுமாற்றங்களைச் சந்திக்கலாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும். ஆதாயத்தை எதிர்பார்க்காமல் உறவுகளுக்காகச் சில வேலைகளைச் செய்யலாம். புதியவர்கள் சிலரின் உதவி கிடைக்கலாம்.

**மகரம்:**
நீண்டதூர பயணம் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். இதுவரை வராத உறவினர்கள் சிலர் உங்களின் வீட்டிற்கு வரலாம். சில விடயங்களில் மிகுந்த சுய நலத்துடன் நடந்து கொள்வீர்கள். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம்.

**கும்பம்:**
திறமை, புத்திசாலித்தனம் அதிகரிக்கும். சில நாள்களுக்கு பின்னர் செய்ய வேண்டிய வேலை ஒன்றை இன்றே செய்து முடிப்பீர்கள். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெற மேற்கொண்ட முயற்சிகளில் இழுபறிகள் காணப்படும். நண்பர்கள் சிலருக்கு நல்ல விடயங்களைச் சொல்லி அவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

**மீனம்:**
வேண்டாத விவகாரங்களில் தலையிட்டு மன உளைச்சல்களுக்கு ஆள்படலாம். திட்டமிட்ட சில வேலைகளை உறவினர்கள் வருகையால் மாற்றி அமைக்கலாம். பொழுது போக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். நண்பர் ஒருவர் கேட்ட உதவியைச் செய்ய மனம் இல்லாமல் கையை விரிக்கலாம்.

# தேசிய நல்லிண[...] இன்று தே[...] புதிய பொ[...]

எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. நாடாளுமன்றில் சமர்ப்[...]
ஜெகான் பெரேரா எழுதியுள்ள கட்டு[...]

தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் நாடாளுமன்றத்தில் தமிழ் மக்கள் தொடர்பாக தாக்கல் செய்த அறிக்கையானது வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் உண்மையான நிலைமை குறித்து பாரதூரமான கேள்விகளை எழும்புவதாய் உள்ளது. பொதுவான கருத்து என்னவென்றால் போர் முடிவுற்றதாலும் நலன்புரி முகாம்கள் மூடப்பட்டமையாலும் அங்குள்ள மக்களின் வாழ்க்கை நிலைமை வேகமாக சீரடைந்து வருகின்றது என்பதாகும். ஆனால் உறுப்பினரின் அறிக்கையில் இன்னமும் 2 லட்சம் இடம்பெயர்ந்த மக்கள் தம் சொந்த இடங்களுக்கு சென்றடையவில்லை. அவர்கள் ஒன்றில் உறவினர்களின் வீடுகளில் அல்லது இடைத்தங்கல் முகாம்களிலேயே இருந்து வருகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்களை புலனாய்வு செய்து நிலைமைகளை சீர் செய்ய அல்லது நியாயப்படுத்த அரசு கடமைப்பட்டுள்ளது. போர் ஓய்ந்து இரண்டரை வருடங்கள் ஆனதன் பின்னரும் மக்கள் மிகக் கடினமான நிலையில் வாழ்க்கை நடத்துவதும் அவர்கள் நடத்தப்படும் முறைகளும் நிச்சயமாக எதிர்பார்ப்புகளுக்கு அப்பாற்பட்டவை என்பதே அறிக்கையின் சாரம் எனலாம்.

### இராணுவ மயமாக்கல்

வடக்கு கிழக்கில் தொடர்ந்தும் இராணுவ மயமாக்கல் இருந்து வருவதானது அந்தப் பகுதியில் இன்னமும் அமைதி திரும்பவில்லையென்பதையே எடுத்துக்காட்டுகின்றது. சமூகத்துறை இடர்பாடுகள் என்று பார்த்தால், மக்கள் விசேஷ பதிவுகளுக்கு உள்ளாக்கப்படுவது, மக்கள் தம் வீடுகளுக்கு வரும் விருந்தினர்கள் பற்றி பாதுகாப்பு படையினருக்கு அறிவிக்க வேண்டியிருப்பது, சமய சமூகங்களும் கூட தமது கூட்டங்கள் போன்றவை தொடர்பாக இராணுவத்தினருக்கு முன் கூட்டியே அறிவிக்க வேண்டுமென்றிருப்பது, அரசு அல்லது இராணுவத்தினர் தவறு இழைக்கும்போது அவர்களுக்கு தண்டனையிலிருந்து தப்பிக்கொள்ள வசதியிருப்பது போன்றவை குறிப்பிடக் கூடியவையாகும்.

பொருளாதார இடர்பாடுகள் என்று கவனித்தால், உயர் பாதுகாப்பு வலயம் என்றபேரில் பெரும் அளவிலான நிலங்கள் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்டிருப்பது, முன்னாள் இராணுவ அதிகாரிகளுக்கும் அரசுடன் தொடர்புடைய ஏனையவர்களுக்கும் காணிகளை வழங்குவது ஆகியவை குறிப்பிடப்பட வேண்டியவை.

தென்னிலங்கையிலிருந்து வேலையாள்களை கொண்டுவந்து அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத் துவதனால் குடாநாட்டு மக்கள் பொருளாதார கஷ்டங்களையும் தொழில் இழப்புகளையும் எதிர்நோக்க நேர்கின்றது. இது அவர்களை தொடர்ந்தும் ஏழ்மையில் வைத்திருக்கின்றது.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய பிரச்சினைகளில் ஒன்று வருமாறு:

வடக்கு - கிழக்கில் இருக்கின்ற 65,619 சதுர கிலோ மீற்றர் நில அளவில் 18,880 சதுர கிலோ மீற்றர் அளவில் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். 2009 மே மாதத்துக்குப் பிறகு தமிழ் மக்களுக்குரிய நிலங்களில் 7 ஆயிரம் சதுர மீற்றரை ஆயுதப் படைகள் ஆக்கிரமித்து கொண்டார்கள். யாழ்ப்பாண குடா நாட்டில் ஏறத்தாழ பத்து பொது மக்களுக்கு ஒரு இராணுவத்தினர் வீதம் இருந்துவருகிறார்கள். இவ்வாறு இராணுவத்தினரின் பெரும் எடுப் பிலான இருக்கையானது வடக்கு - கிழக்கில் மக்களுக்கு அதிக கவலையளிக்கும் விடயமாக இருந்துவருகின்றது.





மேலும், தமிழ் குடும்பங்கள் தங்கள் வீடுகளுக்கு வரும் விருந்தினர்கள், அவர்கள் தங்கியிருக்கப்போகும் கால அளவு, உறவு முறை இவையெல்லாம் இராணுவத்துக்கு அறிவிக்க வேண்டியிருக்கின்றது. குடும்ப உறுப்பினர்களின் ஒன்று கூடல், குழந்தையின் பிறந்தநாள், பெயரிடும் நிகழ்வு, சிறுமிகளின் பூப்பு நீராட்டு நிகழ்வுகள், திருமணங்கள் மற்றும் மரணச் சடங்குகள் யாவும் முன்கூட்டியே அறிவித்து அருகாமையிலுள்ள பொலிஸ் நிலையத்திலிருந்து அனுமதி



# ிணக்கத்துக்கு தவைப்படும் ாறிமுறை

சமர்ப்பித்த அறிக்கை தொ ர்பாகப் பேராசிரியர் கட் டுரையின் தமிழ் வடிவம் இது.

போரை வென்றெடுப்பதற்குத் தேவைப்பட்ட முன்னைய செயற்பாடுகளிலிருந்து விடுபடும் வகையிலான புதிய பொறிமுறையொன்றைக் கண்டு பிடித்தாக வேண்டும். அது தேசிய பாதுகாப்பையும் உறுதிபடுத்துவதாய் இருக்க வேண்டும். இப்பொழுது மனித பாதுகாப்பு, மீளவும் நிலை பெற்ற நீதி, ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.




பெற்றாக வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் இராணுவத்துக்கு சிவிலியன் விவகார நிலையம் ஒன்று இருக் கின்றது. இராணுவத்தால் நடத்தப்படும் இந்த நிலையங்களில் கிராமத்துக்குள் நுழையும் எந்த ஒருவரும் தன்னைப் பதிந்து கொள்ளவேண்டும். பொது மக்கள் வாழ்வினை இவ்வாறு கட்டுப்படுத்துவதானது இராணுவ ஆட்சியைத் தான் எடுத்துக்காட்டுகின்றது. ஜனநாயகத்தை அல்ல. விளையாட்டு நிகழ்வு ஒன்றை நடத்துவதானாலும் இராணுவத்துக்கு கிராமத்து மக்கள் அறிவித்தாகவேண்டும்.

எந்த யுத்தமானாலும், போருக்கு காரணமாய் இருந்த அநீதிகளை அடி நிலையில் இருந்து அகற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டால் அன்றி, மக்கள் மரியாதையோடு நடத்தப்பட்டு சட்ட ஆட்சி நடத்தப்படாவிட்டால், நீதியுடன் கூடிய அமைதி நிலை நாட்டப்படாவிட்டால், எதிர்ப்புணர்வுகள் மேல் எழுந்து புதிய முரண்பாடுகளுக்கு வழிகோலுவதாகவே இருக்கும்- புலனாய்வுடனான தீர்வுகள் முன்வைக்கப்படாதுவிடின் அதிகாரத்தின் துஷ்பிரயோகங்கள் விரிவடைந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் அவை பரவிவிடக் கூடிய சாத்தியம் ஏற்படும். நாட்டின் ஒரு பகுதியில் உருவாகும் சர்வதிகாரப்போக்கு நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இலகுவாகப் பரவிடக் கூடும்.

### சமாதான காலத்தில் அவசியமில்லை

கடந்த காலத்திலிருந்து நாம் விடுபடுவது அவ்சியமாகும். போரின்போது நடைபெற்றவை சமாதானக் காலத்தில் அவசியமற்றவையாகும். இலங்கையில் இழுபறிபட்டு பெரும் இழப்புகளை சந்தித்து முடிவுக்கு வந்துள்ள போருக்கு பின்னர் சகல இன மக்களுக்கும் இடையில் மட்டுமின்றி அரசுக்கும் இனரீதியிலான சிறுபான்மையினருக்கும் இடையிலும் கூட நல்லிணக்கம் தோற்றுவிக்கப்படுவது அவசியமாகும். மிகத் துன்பகரமான ஒரு முரண்பாட்டுக்குப் பின்னர் நாட்டைக் குணப்படுத்தி விடுவது அவ்வளவு சுலபமான காரியமல்ல. மக்கள் மீது ஏற்படுத்தப்பட்ட காயங்கள் கொடுமைகள் - உயிரிழப்புகள், வீடிழப்புகள், வாழ்வாதார நாசங்கள் ஆகியவை அவர்களுக்கு ஆழமான வடுக்களை ஏற்படுத்திருக்கவே செய்யும். இதில் பலதரப்பட்ட சமூகங்கள், அரசு மற்றும் அரசியல் கட்சிகளுக்கிடையில் ஜனநாயகத்தை மீளவும் கட்டியெழுப்பாது போனால் நல்லிணக்கத்தை மீளவும் தோற்றுவித்தல் முடியாத காரியமாகும். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு விரைவில் வெளியிட இருக்கும் அறிக்கையில் தெரிவிக் கப்படவிருக் கும் ஆலோசனைகள் மீள் நல்லிணக்கம் தொடர்பாக நாடு பின்பற்ற வேண்டிய பாதையினை எடுத்துக் காட்டுவதாய் இருக்கப்போகின்றன. அது சகல இலங்கையர்களும் நீதியுடன் கூடிய அமைதியைப் பேணுவதற்கு வழிகாட்டும்.

போரை வென்றெடுப்பதற்குத் தேவைப் பட்ட முன்னைய செயற்பாடுகளிலிருந்து விடுபடும் வகையிலான புதிய பொறிமுறையொன்றைக் கண்டு பிடித்தாக வேண்டும். அது தேசிய பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவ தாய் இருக்க வேண்டும். இப்பொழுது மனித பாதுகாப்பு, மீளவும் நிலை பெற்ற நீதி, ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். பொருளாதார வளர்ச்சியோடு மட்டும் மீள் நல்லிணக்கத்தைக் கட்டியெழும்பி விட முடியாது என்பதை அரசு ஏற்றாக வேண்டும். அது சமூக அரசியல் வாழ்வோடும் இணைக்கப்படுவது அவசியம். ✱

■ தொகுப்பு: ரம்யன்

## தனிநபர் சுதந்திரம்



“மூடனுக்கு கோபம் மூக்கு மேலே'' என்று ஒரு பழமொழி கூறுவார்கள். அப்படியென்றால் மற்ற வர்களுக்கெல்லாம் கோபம் காது மேலேயோ வருகிறது என்று கேட்காதீர்கள்.

அப்படி இல்லை, இப் போது, நீங்கள் நேராக நிமிர்ந்து நில்லுங்கள்; உங்கள் உடம்பில் முன்னால் இருக்கின்ற உறுப்பு எது? மூக்கு இல்லையே வயிறு தானே முன்னாள் இருக்கிறது என்று சொல்லி விடாதீர்கள். அது ஆண்டவனாக வடிவமைத்து கிடையாது. அதை நீங்களாக வடிவமைத்ததுக் கொண்டது. அதற்காகக் கவலைப்படாதீர்கள். தினமும் இந்த மாதிரியான நேரத்தில் கொஞ்சம் உடற்பயிற்சி செய்யுங்கள் சரியாகப் போய்விடும்.

மூக்கு முன்னாள் இருப்பதானால் முன் கோபத்தையும் மூக்கு மேலே கோபம் என்று சொன்னார்கள் போல் இருக்கிறது. முன் கோபம் என்றால் என்ன?

எல்லாவற்றையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு அது முந்திக் கொண்டு வந்துவிடும். அதனால் தான் அது முன் கோபம். அப்படி மூடனுக்குத் தான் வரும் என்கிற பழ மொழி இதுதான்.

மூடனுக்குக் கோபம் மூக்கு மேலே. அது மட்டுமல்ல சில பேருக்கு மூக்கிலே ஏதாவது பட்டால் உடனே கோபம் வந்துவிடும்.

ஒரு பெரியவர் காலையில் உடலை உற்சாகப்படுத்த ஓடிக்கொண்டிருந்தார். அவருக்கு முன்னால் இன்னொருத்தர் ஓடிக்கொண் டிருந்தார். முன்னால் போய்க் கொண்டிருந்தவர் கையில் ஒரு நீளமான குச்சி இருந்தது. அந்தக் குச்சியை வேகமாக முன் னாலும் பின்னாலும் வீசிக்கொண்டே அவர் நடந்து போய்க் கொண்டிருந்தார். அப்போது என்ன நடந்து என்றால்; அந்தக் குச்சி வேகமாக ஆடும்போது பின்னால் வந்து கொண்டிருந்தவருக்குக் கஷ்டமாக இருந்தது. அதுவும் எந்த அளவுக்கு? பின்னால் வந்து கொண்டிருந்தவரது முகத்தில் போய் இடிக்கும் அளவுக்குப் போய் விட்டது. அவ்வளவு வேகமாக வீசிக்கொண்டு போனார் அவர்.

பின்னால் வந்தவர் கொஞ்சம் பொறுமையாகத் தான் வந்து கொண்டிருந்தார். இருந்தாலும் அந்தக் குச்சி அவர் மூக்கில் வந்து இடிக்க ஆரம்பித்ததும் இவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. முன்னால் போகும் முதியவரைப் பார்த்து “இவ்வளவு வேகமாகக் குச்சியை வீசாதீர்கள்; அது என் மூக்கில் வந்து இடிக்கிறது'' என் றார்.

இதற்கு அவர் “ அப்படியெல்லாம் சொல்லாதீர்கள் வீசுவது என்னுடைய உரிமை, சுதந்திரம். தனி மனித சுதந்திரத்தில் நீங்கள் தலையிடுவது நியாயமில்லை'' என்றார். இதைக் கேட்டதும் பின்னால் வந்தவர் “ நீங்கள் சொல்வது சரிதான், இருந்தாலும் உங்கள் தனிமனித சுதந்திரம் என் மூக்கு ஆரம்பிக்கும் இடத்தோடு முடிந்து போகிறது'' என்றார்.

அவ்வளவுதான் முன்னால் போனவர் சிரித்துக் கொண்டு கொஞ்சம் வேகமாக நடைபோட ஆரம்பித்தார். மூக்கின் மேலே கைத்தடி பட்டால் கூட அவருக்கு ஏன் மூக்கு மேலே கோபம் வரவில்லை. அவர் பெரியவர்; அதனால் தான் கோபப்படாமல் பக்குவமாக இப்படிக் கூறினார்.

வேறு யாரும் சாதாரண மனிதராக இருந்தால் பதிலுக்கு தானும் ஒரு குச்சியை எடுத்து அவர் மூக்கிலே படும்படியாக நடக்க ஆரம்பித்திருப்பார். அதன் பின் விவகாரம் பெரிதாகிப் போயிருக்கும்.

தனிமனித சுதந்திரம் தேவை தான். ஆனால் அதற்காக அடுத்தவர்களின் மூக்கை உடைக்கும் அளவுக்குப் போனால் அது நியாயமா?

கோ.சுவாமிநாதன்




பூநகரி நல்லூர் மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்களின் சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் அதிபர் பே.திருக்கேதீஸ்வரன் உரையாற்றுகிறார். (ம)

# மாறிவரும் இன்றைய சூழலில் வீடுகளில் புத்தக 'றாக்கை'களைக் காணமுடியவில்லை

## சாவகச்சேரி வைத்தியசாலை அத்தியட்சகர் உரை

தென்மராட்சி, நவ.10

முப்பது வருடங்களுக்கு முன்னர் பல வீடுகளில் காணப்பட்ட புத்தக 'றாக்கை'கள் தற்போது சீ.டி, டி.வீ.டி அடுக்கி வைக்கும். இடமாக மாறியுள்ளன.

வாசிப்பின் மீது மக்களுக்கு ஏற்பட்டு வரும் அக்கறையின்மையை இதுமிகவும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. காலமாற்றம் ஏற்பட்டாலும் மாணவர்கள் மட்டுமல்ல பெரும்பாலானோர் வாசிப்பு பழக்கத்தை கைவிட்டுவிட்டனர்.

வாசிப்பு என்பது சிறுவயதிலிருந்து கைக்கொள்ள வேண்டியது. சிறுவயது தொடக்கம் வாசிப்பு பழக்கத்துக்கு முக்கியத்தை நடைமுறைப்படுத்துவதில் கைக்கொள்வதில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும். சமுதாய மாற்றம் கால ஓட்டத்தால் வாசிப்பு பழக்கத்தில் நாட்டம் இல்லாமல் போய் விட்டது.

தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெற்ற சாவகச்சேரி நகர சபையின் தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன. இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை வைத்திய அத்தியட்சகர் வைத்தியக் கலாநிதி த.குகதாசன் இவ்வாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 30 வருடங்களுக்கு முன்னர் மாணவர்கள் மட்டுமல்ல பெருமளவான மக்கள் சாவகச்சேரி நகரசபையின் பொது நூல் நிலையத்தை பயன்படுத்தினர். அவர்களில் நானும் ஒருவன் என்பதில் பெருமைப்படுகிறேன். அந்தக் கால கட்டத்தில் நூலகத்துக்கு வரும் மாணவர்கள் மற்றும் வாசகர்களின் நிர்வாகத்தினர் பெரிதும் உதவினர்.

சாவகச்சேரி நகர சபையால் நடத்தப்படும் மூன்று பொது நூலகங்களில் பெரும்பாலான புத்தகங்கள் வைக்கப்பட்டுள் ளன. இவை மாணவர்களால் பயன்படுத்தப்பட்டால் இன்றும் சில வருடங்களில் சிறந்த கல்விமான்களை சிறந்த பிரஜைகளை இந்தப் பிரதேசத்தில் காணமுடியும்.

எமது அரசு முன்னைய காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் மக்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவென சனசமூக நிலையங்களை அமைக்கவேண்டுமென அறிவுறுத்தியிருந்தமை இங்குள்ள பலருக்குத் தெரியாத விடயமாக உள்ளது.

நாங்கள் படிக்கும் காலத்தில் எமது நண்பர்கள் வீடுகளுக்குச் சென்றால் அங்கு புத்தக றாக்கைகள் காணப்படும் புத்தகங்கள் அங்குள்ளவர்களுக்கு மட்டுமல்ல அனைவருக்கும் பயன்படும். இன்று நாங்கள் செல்லும் வீடுகளில் காணப்படும் புத்தக 'றாக்கை'களில் சி.டியும், டி.வீ.டியும், வீடியோ கொப்பிகளும் நிறைந்து காணப்படுகின்றன.

இன்றைய காலத்திலும் பாடசாலைகளில் நடைபெறும் பரிசில் நாள் நிகழ்வுகளும் பரிசாக வழங்கப்படுவது பயனுள்ள நூல்களே. வாசிப்பு பழகத்தினை ஊக்கப்படுத்துவதற்காகவே இவை வழங்கப்படுகின்றன

''நகர சபையால் நடத்தப்படும் இந்த நிகழ்வானது மாணவர்களை மட்டுமல்ல இதில் கலந்துகொண்ட அனைவரையும் வாசகர்களாக மாற்றும் என்பதை திடமாக நம்புகிறேன்'' என்றார். (ம-207)

# தென்மராட்சி பிரதேச அபிவிருத்திகளுக்கு புதிய தோற்றுவாய் நல்வாழ்வு கூ.சங்கம்

## பலாலி ஆசிரியகலாசாலை முன்னாள் அதிபர்

நாவற்குழி, நவ.10

தென்மராட்சிப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கான புதிய தோற்றுவாயாக நல்வாழ்வு கூட்டுறவுச் சங்கத்திதன் வருகை அமைந்துள்ளது.

மக்களுக்கு சேவை செய்வதற்கான புதிய திறவுகோல் இதன் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபர் கு.சதாசிவமூர்த்தி இவ்வாறு கூறினார்.

வரையறுக்கப்பட்ட நல்வாழ்வு கூட்டுறவுச் சங்கத்தை தென்மராட்சிப் பிரதேசத்தில் அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் மிக அண்மையில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

கொழும்பிலிருந்து மிகத் திறமையான தொழில் நிபுணர்கள், சமூக சேவையாளர்கள் இன்று இங்கு வந்துள்ளனர்.

மக்களின் நலனில் அதிக அக்கறையுள்ள இவர்கள் யாவரும் தென்மராட்சிப் பிரதேசத் துக்கு வந்துள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது.

தென்மராட்சிப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கான புதிய தோற்றுவாயாக நல்வாழ்வு கூட்டுறவுச் சங்கத்தின் வருகை அமைந்துள்ளது.

மக்களுக்கு சேவை செய்வதற்கான புதிய திறவு கோல் இதன் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

எமது பிரதேசத்தில் இந்தச் சங்கத்தை இன்று அறிமுகம் செய்வதற்காக பிரதேசத்தில் உயரிய அக்கறையுள்ள சமூக சேவையாளர்கள் ஒன்று கூடியுள்ளனர்.

இவர்களின் வருகையும் அர்ப்பணிப்பு மிக்க சேவை மனப்பான்மையும் எமக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றது.

மக்களைச் சொந்தக்காலில் நிற்க வைக்கும் உதவிகளே எமக்குத் தேவை.

நல்வாழ்வுக் கூட்டுறவுச் சங்கத்தின் உருவாக்கும், தென்பகுதியில் இந்த நோக்கத்துடன் இயங்கி வருகின்றது.

எமது மாவட்டத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் இதனை அறிமுகம் செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

தென்பகுதியிலுள்ள தொழில் வல்லுநர்கள் பலர் இந்தச் சங்கத்தின் அபிவிருத்திக்கு உதவுவதாக இங்கு வாக்களித்துள்ளமை எமக்கு மகிழ்சியைத் தருகின்றது. கூட்டுறவு நோக்கில் பிரதேச அபிவிருத்திக்கு உழைக்கும் வாய்ப்பு இங்கு உருவாக்கப்பட்டுள்ளது.

திறமையும், தகுதியுமுள்ள அங்கத்தவர்கள் இதில் உள்வாங்கப்படுவார்கள்.

நாளடைவில் இந்தச்சங்கம் அனைத்து மக்களுக்கு சேவை புரியும் சமூக அச்சாணியாக உயருமெனப் பலமாக நம்புகிறேன்.- என்றார்.

இந்த நிகழ்வில் வரையறுக்கப்பட்ட நல்வாழ்வுக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் லலித் சில்வா ஏனைய உயர்மட்ட உறுப்பினர்கள், தென்மராட்சிப் பிரதேசத்தின் சமூக அக்கறையுள்ள உயரதிகாரிகள், வணிகர்கள், பிரமுகர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-121)

# பலமான நிலையில் மூத்த பேரவை இருக்கவேண்டும்

நவாலி, நவ. 10

யாழ்.மாவட்டத்தில் உள்ள மூத்த பேரவை பலப்படுத்தப்பட்டிருத்தல்வேண்டும். அவ்வாறு இருந்தால் மட்டுமே முதியோர் சங்கங்களின் தேவைகளை நிறைவேற்ற முடியும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை நடத்திய முதியோர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண பிரதம செயலாளர் பணிமனையின் உதவிச் செயலாளர் திருமதி. பி.சிவலிங்கம் கூறினார்.

பேரவையின் தலைவர் க.சிவாகுமாரன் தலைமையில் மானிப்பாய் பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அவர் மேலும் கூறுகையில்;

சண்டிலிப்பாய் பிரதேசத்திலுள்ள முதியோர் சங்கங்களின் முதியோர் தின விழா ஒவ்வொரு வருடமும் மிகவும் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றது. 2012ஆம் ஆண்டில் இருபத்தைந்து வீதமான முதியோர் அதிகரிக்கவுள்ளனர்.

இந்தப் பேரவை அரச உதவிகளை எதிர்பார்க்காமல் சிறந்த முறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

பேரவையின் தலைவர் எங்கெங்கு உதவிகளை பெறமுடியுமோ அவ்வாறு உதவிகளைப் பெற்று பேரவையை இயக்கி வருகிறார்.-என்றார். (ம-100)

## பேச்சுப் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு தமிழ்ச் சங்கம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தினத்தை முன்னிட்டு திறந்த பேச்சுப் போட்டியை நடத்தவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

இந்தப் பேச்சுப் போட்டியில் 17 முதல் 25 வரையான வயதுக்குட்பட்ட எவரும் பங்கு பற்றலாம். போட்டிக்கான தலைப்பு நாவலர் தினத்தன்று வழங்கப்படும்.

ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் டிசெம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னதாக பொதுச் செயலாளர், கொழும்பு தமிழ்ச் சங்கம் இல 7, 57 ஆவது ஒழுங்கை, கொழும்பு-6 எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

நாவலர் விழா எதிர்வரும் டிசெம்பர் 24ஆம், 25 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. (ம-313)

## நியமனம்

யாழ்ப்பாணம், நவ.10

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வணிகவியல் சிரேஷ்ட ஆசிரியரும், இணை உப அதிபராக கடமையாற்றிய வண ஜி.நடராஜா பதில் அதிபராக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர் சபையால் நியமனம் பெற்றுள்ளார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் மாணவராக, ஆசிரியராக, சிரேஷ்ட மேற்பார்வையாளராக, இணை உப அதிபராக பதவி உயர்வுகளைப் பெற்று தற்போது பதில் அதிபராக பதவி உயர்வு பெற்றதை கல்விச் சமூகம் பாராட்டியுள்ளது. (ம-302)

## யோகாசன வகுப்பு

ஓம் கிரியா பாபாஜி யோக ஆரண்யத்தினரால் யோகாசன வகுப்பின் ஆரம்ப நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 6 மணிக்கு திருநெல்வேலி பழங்கிணற்றடிப் பிள்ளையார் கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

## சமய தீட்சை வழங்கல் இன்று

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட சமய தீட்சை வைபவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நீராவியடி பிள்ளையார் கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 7 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் சமய தீட்சை பெற்றுக் கொள்ள முடியும். (ம-313)

## சக்கர பூசை

அளவெட்டி, நவ.10

அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் ஆலயத்தின் புவனேஸ்வரி அம்பாளுக்கு ஸ்ரீசக்கர பூசை இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி விசேட பூசைகள் இடம்பெற்று அம்பாள் திருவீதி உலா இடம்பெறும். (ம-36)

# நரகத்தினுள் ஒரு சந்தை

சுன்னாகம் மரக்கறிச் சந்தை குடா நாட்டின் முக்கிய சந்தைகளில் ஒன்று. இந்தப் பகுதிகளை அண்டிய விவசாயிகள் மட்டுமன்றி ஏனைய இடங்களைச் சேர்ந்த விவசாயிகளும் இங்கு வந்து தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துகிறார்கள்.


இங்கு பொதுமக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றனர். முக்கியமாக சந்தையின் சுகாதார நிலைமை படுமோசம். இதனை பிரதேச சபை மட்டுமன்றி சுகாதார பரிசோதகர்களும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்குவதால் பெரும் தொற்றுக்கள் ஏற்படும் நிலை உள்ளது. வீதியின் தென்புறத்தில் காணப்படும் வாழைக்குலைச் சந்தை நரகத்திலும் நரகமாகவே காணப்படுகின்றது. வாழைக்குலைச் சந்தையில் சைக்கிள் விடுவதற்கென ஒரு கொட்டகை கிழக்குப் பகுதியில் உண்டு. இங்கு சைக்கிள்களும் நிறுத்தப்படுகின்றன.

மட்டுமல்லாமல் மலசலகூடமாகவும், மதுப்பிரியர்களின் இடமாகவும் பயன்படுத்தப்படுகின்றமை விசனத்தை தோற்றுவிக் கிறது. மதுப்பிரியர்களுக்கு எதுவுமே தெரிவதில்லைப் போலும். அந்தத் துர்நாற்றத்துடன் மழைநீரால் சேறு சகதியாகியுள்ள அந்தக் கொட்டகையில் சர்வ சாதாரணமாக உட்கார்ந்து மது அருந்துகின்றனர்.

சைக்கிள் தரிப்பிடத்தில் நிலைமை இது என்றால் இதன் தென்பகுதியில் கழிவுகள் கொட்டுவதற்கென ஓர் இடம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கே வாழைக் குலைச் சந்தையில் கிடைக்கக்கூடிய கழிவுப் பொருள்களைக் காண்பது குறைவு.

அயலில் உள்ளவர்கள் சொப்பிங் பைகளில் தமது வீட்டுக் கழிவுகளை போட்டு அவற்றுடன் குழந்தைகளின் கழிவுகளையும் இங்கு வீசிவிட்டுப் போய்விடுகிறார்கள். நன்றியுள்ள





பிராணிகள் இறந்தால் அவையும் அயலவர்களால் இங்கேதான் வீசப்படுகின்றன. இதுதவிர வாழைக்குலைச் சந்தையின் கிழக்குப் புறமாக மதிலின் அருகிலும் கழிவுப் பொருள்கள் போடப் படுகின்றன. ஒவ்வொரு நாளும் கழிவுகள் அகற்றப்படவேண்டும். ஆனால் இங்கு நான்கு ஐந்து தினங்களுக்கு ஒரு தடவைதான் கழிவுப் பொருள்கள் அகற்றப்படுவதாக விவசாயிகள் குறைப் படுகின்றனர். சந்தையின் தெற்குப் பகுதியில் உள்ள கேற் உடைந்தும் மேற்குப் பகுதி வாயில் மழை வெள்ளத்தில் சேறாகவும் காணப்படுகின்றன.

வளவுக்குள் கற்கள் குவிக்கப்பட்டுள்ளன. அது எதற்காகப் போடப்பட்டுள்ளது என்பது தமக்கு தெரியாததெனக் கூறுகின்றனர் வியாபாரிகள். இந்தக் கற்குவியலுக்குள் பாம்புகள் குடியிருக்கின்றன. இரண்டு, மூன்று நாள்களுக்கு ஒரு தட்வை அவற்றுடன் போராட வேண்டியுள்ளதாகவும் கூறுகிறார்கள்.

மீன்சந்தையின் நுழைவாயில் சேறும் சகதியுமாக உள்ளது. வாய்க்காலில் தண்ணீரும் தேங்கியுள்ளது. உள்ளே மீன் வியா பாரிகளுக்குத் துணையாக நாய்களும் கூடவே நின்று வெட்டுவ்தற்குப் போடப்பட்டுள்ள மீன்களில் தாம் விரும்

**லக்ஸ்மன்**

பியதை வாயில் போட்டுக் கொள்கின்றன. மீன்கள் வெட்டுபவர்களும் வெட்டிய மீன்களை வெறும் தரையில் போட்டு அப்படியே கிடக்கும் கழிவுகளுடன் கோலி அள்ளி வாடிக்கையாளர்களிடம் ஒப்படைகிறார்கள். சந்தையில் ஆங்காங்கே மீன் கழிவுகள் காணப்படுவதால் துர்நாற்றம் கோலோச்சுகிறது.

கோழி விற்பனைப் பகுதியில் கோழிக் கழிவுகள் பரவலாகச் சிதறிக் கிடக்கின்றன. சந்தையின் மரக்கறி விற்பனைப் பகுதிக்குள் செல்வதே பெரும் சங்கடம்தான்.

(18 ஆம் பக்கம் பார்க்க)



அகில இலங்கை
சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்
நடத்தும் 29 ஆவது ஆண்டு
மகர ஜோதிப் பெருவிழா

இடம் : ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம் தம்பையா சத்திரம் - கொழும்பு - 13
காலம்: கார்த்திகை முதலாம் திகதி (17.11.2011) தொடக்கம் 48 நாள்கள்

இலங்கையின் முதலாவது இந்து மத குருபீடாதிபதி
சிவாகமஞானி அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார்
சங்கானை இலுப்பைத் தாழ் முருகமூர்த்தி ஆதீன குரு முதல்வர்
சிவாகமஞானி சிவ.நித்தியானந்த சிவாச்சார்யார்
ஆகியோரின் அருள் ஆசியுடன் சர்வதேச இந்து மத குருபீடாதிபதி - சபரிமலைக் குருஜீ
ஆன்மீக அருள்ஜோதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார்
தலைமையில் மகரஜோதிப் பெருவிழா நடைபெறும்.



பிரம்மஸ்ரீ சுதாஸ்ரீ சுபஸ்வரசர்மா
(ஸ்ரீ சாஸ்தாபீடம்- கொழும்பு)

சுபஸ்ரீ சாம்பசிவஸ்ரீ மணிகண்ட சர்மா
(ஸ்ரீ சாஸ்தாபீட இளவரசன்)

தொ.பே:
011 2433468
0779930140

S.N. மோகன் நாயுடு (J.P)
(நிர்வாகப் பணிப்பாளர்)

பிரம்மஸ்ரீ நித்ய சுதானந்த சர்மா
( ஸ்ரீ சாஸ்தாபீட நிர்வாகப் பொறுப்பாளர் - I.D.M. சங்கானை)

(10237)(1.6.8)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் 30 ஆவது பிறந்த தினமும்



தாயின் மடியில்
10.11.1981

ஆண்டவன் மடியில்
21.11.2005

### சிவசுப்பிரமணியம் பானுரூபன்

கண்ணே ரூபா ஆறாண்டுகள் சென்றனவோ
எம்மை விட்டு நீ சென்று !
பாசத்தின் உறைவிடமே பண்பின் இலக்கணமே !
சலனமின்றி இறைவனிடம் சென்றதன் மாயமென்ன !
நித்தம் துடிக்கும் எம் இதயம்
உன்னை நினைக்கத் தவறவில்லை !
சீர்பெற்ற உன்வாழ்வு சொர்க்கத்திலும் சிறக்கட்டும் !

அன்புடன்,
அப்பா, அம்மா, அண்ணன்,
அண்ணி, அக்கா, தம்பி,
மைத்துனர், மாமா,
பெறாமகள்கள், மருமகன்.

மூத்த விநாயகர் கோவிலடி,
கரணவாய், கரவெட்டி.
தொ.பே: 021 3006013 (8004)(1,6,)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



தோற்றம்:
02.10.1929

மறைவு:
11.10.2011

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 359/34 நல்லலெட்சுமி அவெனியூ, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் நேசமணி சிவஞானசுந்தரம்

கடந்த 11.10.2011 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தாயாரின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (10.11.2011) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

359/34, நல்லலெட்சுமி அவெனியூ,
கோயில் வீதி, நல்லூர். (10213)(1,7,19)
குடும்பத்தினர்



## அந்தியேட்டிக் கிரியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



அமரர்

### கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்,
கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், சமாதான நீதிவான்)

கடந்த (11.10.2011) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (10.11.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தென் கிழக்கு, கைதடி. (10188)(1,6,8)
குடும்பத்தினர்.


## 175 நாடுகளில் ஒரே நேரத்தில் பஜனை

யாழ்ப்பாணம், நவ.10

உலகம் முழுவதும் அமைதியும் சாந்தியும் நிலவ வேண்டும் என்பதற்காக 175 நாடுகளிலுமுள்ள சாயி நிலையங்களில் ஒரே நேரத்தில் 24 மணி நேர பஜனை நிகழ்வு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 6 மணி முதல் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி வரை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் ஓம்காரம், காயத்திரி ஜெபம், பிரசாந்திக் கொடியேற்றம், வேதபாராயணம், அஷ்டோத்திரம், பஜனை, நாமபஜனை, சுப்ரபாதம் என்பன இடம்பெறும். (ம-313)

## நரகத்தினுள் ....

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தையைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள வாய்க்கால்களில் கழிவு நீர் ஓடுவதில்லை. பத்திரமாகத் தேங்கி நிற்கின்றன. இதனூடாகத்தான் சந்தைக்குள் செல்ல வேண்டியுள்ளது.

சந்தையின் பாதைகளில் வியாபாரிகள் அழுகிய காய்கறிகளைப் போட்டிருக்கிறார்கள். குப்பைகளை அகற்றுபவர்கள் ஒழுங்கில்லை. நடைபாதைகளிலும் கடை ஓரங்களிலுமாக குப்பைகளைப்போடுகின்றனர்.

புடைவைக் கடைப் பகுதிகளில் மக்கள் நடமாடுவது சிரமமாக உள்ளது. நடைபாதைகளையும் கடைக்காரர்கள் ஆக்கிரமித்து தமது கடைகளைப் பரப்பியுள்ளனர். தற்போது நடைபாதை கடைப்பாதையாக மாறியுள்ளதை அவதானிக்க முடிந்தது. சந்தைப் பகுதியில் மின்வெளிச்சம் போடுவதற்கான 'சுவிச்' கிடையாது. மின்வெளிச்சம் போட வேண்டு மெனில் பிரதேச சபை அலுவலகத்துக்கே செல்ல வேண்டுமாம்!

குப்பைகளைத் தொட்டிகளில் போடலாம்தானே என்ற கேள்விக்கு குப்பைத் தொட்டிகள் வைத்தால்தானே? என்று எதிர் கேள்வி கேட்கிறார்கள். கிணறு, மின்இயந்திரம் உள்ள பகுதியின் ஓடையுள் இளநீர் கோம்பைகள், சாராயப் போத்தல்கள் உட்பட பல்வேறு கழிவுகள் நிரம்பியுள்ளன. இவற்றில் மழைநீர் தேங்கி, நுளம்புகள் பல்கிப்பெருகி மகிழ்கின்றன. ஓர் அரை மணிநேரம் தொடர்ந்து மழை பெய்தால் எங்கள் பாடு கஷ்டம் தான் என்கிறார்கள் மக்கள்.

பிரதேச சபை சந்தையைக் குத்தகைக்கு விடுவதுடன் தனது கடமை முடிந்துவிட்டதாக நினைக்கிறது. ஒப்பந்தகாரர் தனது தேவைக்கு மட்டுமே அங்கு வருகிறார். பின்னர் அவரைக் காணமுடியாது. குத்தகை எடுத்தவர் சந்தையை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும் என்பது தான் பொதுவாக வியாபாரிகளின் ஒட்டுமொத்த கருத்தாக இருக்கிறது. தாங்கள் வியாபாரம் செய்யும் இடத்தை தாங்களே நன்றாக வைத்திருக்க வேண்டும் என்ற கருத்தில் வியாபாரிகளுக்கு உடன்பாடில்லை போலும்.

பிரதேச சபை, வியாபாரிகள், ஒப்பந்தகாரர் இவர்களுடன் சேர்ந்து பொதுமக்களுக்கும் கூட ஒரு பிரதான சந்தையைச் சுகாதாரச் சூழலில் வைத்திருக்க வேண்டிய கடப்பாடு உண்டு. முக்கியமாக பிரதேச சபை இது விடயமாக அக்கறைசெலுத்தி எதிர்காலத்திலாவது சுகாதாரச் சூழல் மிக்க ஒரு சந்தையாக இதனை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## சீரற்ற நிலையில் வீதி

யாழ்.ஆஸ்பத்திரி வீதிக்கும் யாழ்.வேம்படி வீதிக்கும் இடையில் அமைந்துள்ள யாழ். மணிக்கூட்டு வீதி பள்ளம் மேடாகக் காணப்படுகிறது.

யாழ்.பொலிஸ் நிலையம் முன்பாகவும் பள்ளம்மேடு காணப்படுகிறது. யாழ். மணிக்கூட்டு கோபுரத்துக்கருகில் உள்ள வடிகால் புனரமைப்புச் செய்யப்பட்டு வீதியில் தகடு போடப்பட்டுள்ளது. ஆனால் இந்தவீதி ஒழுங்காகச் செப்பனிடப்படாதால் இவ்வீதியூடான போக்குவரத்து சிரமமாக உள்ளது என்று கூறப்படுகிறது. (ம-51)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 07.11.2011 அன்று உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டம்பெற்ற

செல்வன் நடராசா தவரூபன்

அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்வு நிலையடையப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: நண்பர்கள் (10240) (4-6-6)



## பிள்ளையார் இன் "A" உல்லாசப் பயணிகள் தங்குமிடம்

("A" Grade Hotel Approved by Ceylon Tourist Board)

பிள்ளையார் இன் விடுதியில் உங்களின் திருமண வைபவங்கள், வியாபார கலந்துரையாடல்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள் எதுவானாலும் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தில் 300 பேர் அமரக்கூடிய மண்டபம் 14.10.2011 தொடக்கம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. 37 குளிரூட்டப்பட்ட அறைகள், விசாலமான வாகனத்தரிப்பிடம், வாகனம் யாவும் எம்மிடம் உண்டு. உங்களின் உணவு வகைகள் யாவும் ஒரு மணித்தியாலத்தில் செய்து கொடுக்கப்படும். எமது (Restaurant) காலை 9 மணிமுதல் இரவு 10 மணிவரை திறந்திருக்கும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

பிள்ளையார் "இன்"
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல்
Pillaiyarinn@gmail.com
வலைப்பின்னல்
www.Pillaiyarinn.com

தொ.பே: 0212222829, 0212224449 (10199)(4-8-6)



## Dr.Pimple

TRICHOLOGY CENTRE
Hair and Pimple Clinic
V Care

முகப்பருக்களுக்கு
International Skin Peeling
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு



எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா- 24,25 ஆகிய திகதிகளில்.
முன் பதிவுகளுக்கு- 021-2220288

V care Colombo - No.190, George R.De Silva Mawatha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.



## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய 30 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண்தேவை. சம்பளம் ரூபா 10,000/=
தொடர்பு: 0771965666 (10167)(3,8,6)



## கட்டடம் விற்பனைக்குண்டு

ஆஸ்பத்திரி வீதியில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக கட்டடம் ஒன்று விற் பனைக்குண்டு.

தொடர்பு:
0779854886, 021 222 1252



## காணி விற்பனைக்கு

கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழை நாச்சிம்மையார் கோவிலுக்கு அருகில் மேற்குப் புறமாகவுள்ள பெரிய வளவு எனும் பெயரிலுள்ள 4ஆவது காணி வரை படங்களுடனும் மலசல கூட வசதியுமுள்ள 5 பரப்புக் காணி. உடன் விற்பனைக்கு.
தொடர்பு: ச.சுகந்தினி( கொடிகாமம்)
0770532169 (ஆவந்தம்) , 0775078421 (சிவகுமார்),
0772419631 (துளசிகரன்) (10231)(3,19,6)



## வீடு விற்பனைக்கு

யாழ். இராசாவின் தோட்ட வீதியில் ரைஸ் பதிக்கப்பட்ட புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:
0217902989, 0772720119



இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே

V Care

## DR.HAIR

TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic



தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள்ளுங்கள்!

தலைமுடி உதிர்தல், ஆண் பெண் வழுக்கை, பொடுகு, ஊிநரை, புளுவெட்டு, PSORIASIS போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை, இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்படும் வசதியுண்டு.

எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா-24,25 ஆகிய திகதிகளில். முன் பதிவுகளுக்கு- 021-2220288

V care Colombo - No.190, George R.De Silva Mawatha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.

# ஆதரவற்ற பிள்ளைகளை நற்பிரஜைகளாக உருவாக்கும் உரும்பிராய் கருணை இல்லம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

உரும்பிராய் கருணை இல்லம் மகிழ்ச்சியான சூழலில் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதாகக் கூறிய போதிலும் அவர்களின் குடும்ப உறவுகள் பிரிவுகள் தொடர்பாகக் கூறும் போது அவர்களில் சோக உணர்வு வெளிப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி, கிளிநொச்சி, முல்லைத்தீவு உள்ளடங்கலான தமிழ்ப்பிரதேசங்களைச் சேர்ந்த மாணவிகள் நிலையத்தில் தங்கியிருந்து ஒரே குடும்பத்தினர் போன்று சகோதர பாசத்தோடு கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

உறவுகளைப் பிரிந்து அல்லற்படும் தமிழ் பெண் பிள்ளைகளின் வாழ்விடமாகத் திகழும் உரும்பிராய் கருணை இல்லம் பொன்.தெய்வேந்திரத்தின் வழிப்படுத்தலில் உள்ளூர் பிரமுகர்களின் நேரடிக் கண்காணிப்பில் முன்னோடி அமைப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.




அங்கு தங்கியிருந்து கல்வியைத் தொடரும் 50 பெண்பிள்ளைகளும் சட்டரீதியாக நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமையவும்; சிறுவர் நலன் மேம்பாட்டு அதிகாரிகளின் சிபார்சுக்கு அமையவும் அனுமதிக்கப்படுகின்றனர். கருணை இல்லத்தின் அமைப்பு விதியின் பிரகாரம் 10 வயது (தரம் 5) வகுப்பில் கல்வி கற்பதற்கு ஏற்ற வயது நிலையில் உள்ள பிள்ளைகளே அனுமதிக்கப்படுகின்றனர். அனுமதி முடிவு வயதெல்லை 18 வயது. ஆனால் க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்கின்றவர்கள் கல்வி நிறைவடையும் வரையும் பராமரிக்கப்படுகின்றனர். தங்கியிருப்பதற்கான வயதெல்லை முடிவடைந்தவர்கள் யார் மூலம் அனுமதிக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டார்களோ அவர் களிடம் ஆவணரீதியாக உரியமுறையில் கையளிக்கப்படுகின்றனர். பாட சாலைகள் செயற்படும் நேரங் களில் சுகயீனம் காரணமாக அல்லது உடல் நலக் குறைவு காரணமாக பாடசாலைக்குச் செல்ல முடியாத ஒன்று இரண்டு பிள்ளைகளின் நடமாட்டத்தை மட்டும் காண முடியும். ஆனால் பாடசாலைகள் முடிவடைந்த பின்னரும் விடுமுறை நாள்களிலும் பாடசாலை போன்று தொழிற்பட்டுக்கொண்டிருக்கும்.

கணினி பயிற்சியில் ஈடுபடுபவர்கள், தையல் பயிற்சியில் ஈடுபடுபவர்கள், மற்றும் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் என்ற வகையில் மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டிருப்பார்கள். பாடரீதியாக எல்லா மாணவர்களுக்கும் பிரத்தியேக வகுப்புக்கள் மூலம் பாடங்கள் போதிக்கப்படுகின்றன. அதற்கெனத் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்கள் கருணை இல்லத்துக்கு வருகை தந்து அதற்குரிய இடத்தில் வகுப்புக்களை நடத்திச் செல்கின்றனர். இந்த வகையில் கருணை இல்லத்தின் நோக்கான "ஆதரவற்ற வறுமைக்கு உட்பட்ட பெண்பிள்ளைகளை சமூகப் பொருத்தப்பாடுடைய நற்பிரஜைகள் ஆக்கு தல்" உரிய முறையில் நிறைவு செய்யப்படுகின்றது.

கற்றலுக்கும் ஆரோக்கியமான மனோநிலையுடன் கூடிய வாழ்க்கைக்கும் ஏற்புடைய கல்வி நிலையைக் கொண்ட உரும்பிராய் கருணை இல்லத்தின் தங்கியிருக்கும் மாணவிகள் 20 X 10 அகல நீளம் கொண்ட விசாலமான அறை களில் தனித்தனியாக கட்டில்கள் வழங்கப்பட்டு நான்கு பேர் வீதம் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த வகையில் மாணவிகள் தங்குவதற்கு 14 அறைகள் விடுதி அமைப்பில் புதிதாக நிறுவப்பட்டுள்ளன.

அத்துடன் மாணவிகள் உலாவுவ தற்கு ஏற்றவகையில் விசாலமான விறாந்தை மற்றும் உரிய நேரத்தில் கற்பதற்கு ஏற்புடைய வகையில் கற்கை மண்டபம் மற்றும் உள்ளக விளையாட்டுக்களுக்கு உரிய உபகரண வசதிகள், பொழுது போக்குவதற்கு தொலைக்காட்சி வசதி என்பன வழங்கப்பட்டுள்ளன. பொருத்தமான வகையில் போஷாக்குள்ள சைவ உணவு, மருத்துவ வசதி என்பன வழங்கப்படுவதாக மாணவிகள் தெரிவித்தனர்.

**ஞான ஆதவன்**

உறவினர்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் வந்து பார்வையிட்டு உரையாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதோடு மாதாந்தம் மாணவிகளுடன் கலந்துரையாடலை நிர்வாகிகள் நடத்தி மாணவிகளின் தேவைகள் குறைபாடுகளைக் கேட்டு நிவர்த்தி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதன் மூலம் மாணவிகள் தமது தேவைகள், வசதிகளை நிர்வாகிகளுக்கு தெரியப்படுத்துக் கூடியதாக உள்ளது எனத் தெரிவித்தனர்.

தலைவர் ஏ. ஈஸ்வரநாதன் தலைமையிலான ஐந்து பேர் கொண்ட பரிபாலன சபை கருணை இல்லத்தின் அனைத்துச் செயற்பாடுகளையும் கூட்டுப்பொறுப்புடன் நிறைவு செய்து வருவதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது - மாணவிகள் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையிலும் உரும்பிராய் இந்துக் இந்துக் கல்லூரியிலும் கற்றுவருகின்றனர்.

(தொடரும்)


## ஏழாண்டு நினைவுகளுடன்...

*உதயமாக:*
*1946.06.25*

*அஸ்தமனமாக:*
*2004.10.27*





*அமரர்*

## சுப்பிரமணியம் செல்வராசா

**உரிமையாளர், வாணிரெக்ஸ் - சாவகச்சேரி**
திதி: பூரணை (10.11.2011)

ஏழாண்டு காலங்கள் துரிதகதியில் மறைந்த போதிலும்
ஏகாந்த வாழ்க்கை மட்டும் இன்னும் எமை சுமையாக வாட்டுதப்பா
அழகான நேரங்களை வாழ்நாளில் எமக்களித்து
அழியாத சோகங்களை இமைப்பொழுதில் தந்து மறைந்தீர்களேயப்பா
வாழ்வின் நியதி இதுவென உணர்ந்தும் நீங்களற்று நிர்க்கதியாய் நிற்கிறோமே
வாழ்க்கையின் விம்பங்களோ வசந்தமிழந்து பாலையாய் தோன்றுதப்பா
ஏழாண்டுகளென்ன ஏழுஜென்மங்கள் கடந்தாலும் கூட..... அப்பா
ஏங்கித் தவிக்கும் எமது நெஞ்சங்கள் உங்கள் நினைவுகளுடன்....

கென்ஸ்மன் லேன்,
டச்சு றோட், சாவகச்சேரி.

உங்கள் ஜீவசாந்திக்காக இறைஞ்சும்
குடும்பத்தினர்

(சி-5669)(1.6.7)

## சாரதிகளிடம் லஞ்சம் வாங்குகின்ற பொலிஸாரை கைது செய்ய ஏற்பாடு

கொழும்பு, நவ.10

போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு அவர்களைத் தப்பிக்கவிடும் போக்குவரத்துப் பொலிஸாரைக் கைது செய்வதற்கென தனியான நடவடிக்கைப் பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பு பிராந்தியத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவரின் தலைமையில் இந்தப் பிரிவு இயங்கவுள்ளது. இந்த விசேடகுழு கொழும்பிலும் அதற்கு அண்மையில் உள்ள பிரதேசங்களிலும் இரவு பகலாக இயங்கவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

போக்குவரத்து விதிகளை மீறுபவர்களையும், குற்றங்கள் இழைப்பவர்களையும் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்த வேண்டுமென போக்குவரத்துப் பொலிஸாருக்கு கட்டாயப் பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது. எந்தக் காரணத்தைக் கொண்டும் தவறுகளை இழைப்பவர்கள் சட்ட நடவடிக்கையின்றி விடுதலை செய்யப் படக்கூடாதென நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

பல சாரதிகள் தங்களைப் பிடிக்கும் பொலிஸாருக்கு லஞ்சம் கொடுத்துவிட்டுத் தப்பிக்கொள்கின்றனர். அவ்வாறான செயல்களைத் தடுப்பதற்கே இந்த விசேட நடவடிக்கைக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ச)

## நுகேகொடவில் சுற்றிவளைப்பு; சந்தேகத்தில் 223 பேர் கைது

கடந்த இரு தினங்களாக நுகேகொட பிராந்திய பொலிஸ் நிலையங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது 223 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நுகேகொடை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் தெரிவிக்கின்றது. கைதுசெய்யப்பட்டவர்களில் 55 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நுகேகொடை பிராந்தியத்துக்குப் பொறுப்பான தேசபந்து தென்னக்கோனின் விசேட பணிப்புரையின் கீழ் பிராந் தியத்தில் உள்ள 13 பொலிஸ் நிலையங்கள் இணைந்து ஆறு சுற்றி வளைப்புகளை மேற்கொண்டன.

மதுபோதையில் வாகனம் செலுத்திய 12 பேரும், மோசடி வழக்குகள் சம்பந்தமாக 104 பேரும் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தச் சுற்றி வளைப்புகளின் போது கணிசமான அளவு சட்ட விரோத மதுபானமும் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச)



சுன்னாகம் ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிரேஷ்ட மாணவ முதல்வர் செல்வி. ம.ரம்பியா வரவேற்புரை நிகழ்த்துகின்றார். அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருக்கின்றனர்.

## குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட 4 பேர் ஹெரணையில் கைது

கொழும்பு, நவ.10

ஹொரணைப் பிரதேசத்தில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட நான்கு சந்தேகநபர்களை பொலிஸார் நேற்றுமுன்தினம் காலை கைதுசெய்தனர்.

குற்றச்செயல் ஒன்று தொடர்பில் விசாரணை நடத்தச் சென்ற ஹொரணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினரே இந்த சந்தேகநபர்களைக் கைதுசெய்துள்ளனர். சந்தேகநபர்களால் பல்வேறு இடங்களில் கொள்ளையிடப்பட்ட பொருள்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## சீன நிறுவனம் செலுத்திய பணத்தை மீள வட்டியுடன் செலுத்த தீர்மானம்

காலி முகத்திடலில் 7 ஏக்கர் நிலப்பரப்பில் ஹோட்டல் கட்டடத் தொகுதியொன்றையும் ஆடம்பர வீட்டுக் கட்டடத் தொகுதியொன்றையும் நிர்மாணிப்பது தொடர்பாக சீனாவின் கட்டிக் நிறுவனம் கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதி இலங்கை அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டிருந்தது.

இந்த ஒப்பந்தத்துக்கு அமைய 4 ஏக்கர் நிலப்பரப்பைக் கொள்வனவு செய்வதற்காக அந்த நிறுவனம் 54.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை திறைசேரிக்குச் செலுத்தியிருந்தது.

கட்டிக் நிறுவனம் இலங்கையரசுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ரத்தானதையடுத்து இந்தத் தொகையை வட்டியுடன் மீளச் செலுத்த அரசு தீர்மானித்துள்ளது.

அரச காணிகள் முதலீடுகள் தொடர்பாக அறுதியாக விற்கப் படக்கூடாது என்று அமைச்சரவை பின்னர் தீர்மானித்துள்ளதோடு, அது கட்டிக் நிறுவனத்துக்கும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

தேவையெனின் இந்த நிலப்பரப்பை 99 வருட குத்தகை அடிப்படையில் வழங்க முடியும் என்று அரசு தெரிவித்திருக்கிறது.

இந்த நிபந்தனைகளுக்கு கட்டிக் நிறுவனம் இணங்கிக் கொள்ளாததன் காரணமாகப் பின்னர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செல்லுபடியற்றதாக்க அரசு தீர்மானித்துள்ளது. (ச-22)


# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
02.10.1934

மறைவு:
24.10.2010

# சோமசுந்தரம் சுப்பிரமணியம்

*(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், துறைமுக அதிகாரசபை, திருகோணமலை)*

சோமசுந்தரம் மேத்திரியார் சந்ததியின் பெயர் சொல்ல - முருக
நாமமுடன் வலம் வந்த மங்காத மணி விளக்கே
சுப்பண்ணா என்று நும்மை அன்போடு அழைப்பார்
எப்போதும் இறைபணியில் இன்முகமாய் இருந்தீர்கள்

நெடியகாட்டுப்பிள்ளையாரின் நிர்வாகத் தலைவராகி
அடியார்கள் மனம் மகிழ அரும்பணிகள் ஆற்றினீர்கள்
அம்மாவின் கரம்பிடித்து ஆலயமும் நூலகமும்
அம்மையப்பன் வருவதுபோல் அழகாக வருவீர்கள்

பிள்ளைகள், மருமக்கள், பேரன், பேர்த்தி மனங்களையும்
கொள்ளைகொண்டு வாழ்ந்தீர்கள் கொடுத்து வைத்த பிறவி ஐயா
தெய்வத்தின் திருவடியை தினம் தொழுது வேண்டுகின்றோம்
ஐயா உன் முகங்காண அவனியெங்கும் தேடுகின்றோம்

**நாளை (11.11.2011) வெள்ளிக்கிழமை மதியம் எமது
இல்லத்தில்நடைபெறும் அன்னாரின் சிரார்த்த கிரியைகளிலும்
அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

A.G.A., ஒழுங்கை, நெடியகாடு, வல்வெட்டித்துறை.
தொ.பே: 021 373 5678

(8005)(1.7.22)

**குடும்பத்தினர்.**



# அந்தியேட்டி ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு: 30.06.1951
உதிர்வு: 11.10.2011



திருமதி
## வரதலக்ஷ்மி (தங்கம்) புஸ்பராஜா

கடந்த 11.10.2011 செவ்வாய்க்கிழமை இறையடி இணைந்த எமது அன்புத் தெய்வம் நோயுற்று வைத்தியசாலையில் அனுமதித்திருந்தபோது உடனிருந்து உதவியோர், அவரின் உதிர்வுச்செய்தி கேட்டு உடன் வருகைதந்து எமைத்தேற்றிய அயலவர், உற்றார், உறவினர் , நண்பர்கள் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்கள், மலர்வளையம் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியோர், பத்திரிகை மூலம் அஞ்சலி பிரசுரித்தோர், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோர் அனைவருக்கும் மற்றும் இன்றுவரை பல்வேறு வகைகளிலும் ஆறுதலும் ஒத்தாசை வழங்கியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாளை (11.11.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு நல்லூர் சட்டநாதர் கோயிலடி திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும் அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**J/91, J/92** *கிராம அலுவலர் பிரிவு மக்கள் உள்ளிட்ட அனைவரும் இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

**தாயகம்,**
**இல.06, இராஜேஸ்வரி வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**பு.தஜீதரன் (கிராம உத்தியோகத்தர் J/91, J/92)**
**இவருடன் குடும்பத்தினர்**

(10228)(1,7,19)

# மத்திய அரசுக்கு கடிதம் எழுதாதீர் மக்களைத் திரட்டி போராட வாரீர்

## ஜெயலலிதாவுக்கு ராமதாஸ் அழைப்பு

சென்னை, நவ.10

தமிழக மீனவர்கள் மீது இலங்கை ராணுவம் நடத்தும் தாக்குதல் தொடர் பாக மத்திய அரசுக்கு கடிதம் எழுது வதால் எந்தப் பயனும் ஏற்படாது. எனவே தமிழக மீனவரைப் பாதுகாக்க மக்களைத் திரட்டிப் போராட முதல்வர் முன்வரவேண்டும் என்று பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளி யிட்ட அறிக்கையில் குறிப்பி டப்பட்டுள்ளதாவது:

கச்சத்தீவு பகுதியில் ராமேஸ் வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்ப டையினர் மீண்டும் ஒரு தாக்குதல் நடத்தியுள்ளனர். இது கடந்த 3 நாள்களில் நடத் தப்பட்ட 2 ஆவது தாக்குதல் ஆகும்.

கடந்த ஆட்சியில் மீனவர் களைக் காக்க நடவடிக்கை எடுக்காமல் பிரதமருக்கு கடிதம் எழுதுவதையே வழக்கமாகக் கொண்டிருக்கிறார் என்று அப் போதைய முதல்வரை ஜெய லலிதா விமர்சித்தார்.

தற்போது அவரும் அதே கொள்கையைத்தான் கடைப் பிடித்து வருகிறார். கடந்த சில மாதங்களில் பிரதமருக்கு முதல் வர் ஜெயலலிதா 4 இற் கும் மேற்பட்ட முறை கடிதம் எழுதிய போதும் அதன் மீது எந்த நட வடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மீனவர் பிரச்சினைக்காக மத்திய அரசுக்கு கடிதம் எழுது வதால் எந்தப் பலனும் இல்லை என்று ஏற்க னவே பலமுறை



கூறியுள்ளேன். அதைப் புரிந்து கொண்டு தமிழக மீனவர் களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து அனைத் துக் கட்சிகளுடன் கலந்துபேசி மக்களைத் திரட்டி போராட முதல்வர் முன்வர வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (வ)

கூடங்குளம் விவகாரம் விஷயத்தில்:

# மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டியது மத்திய அரசின் கடமை என்கிறது பா.ஜ.க.

டில்லி, நவ.10

கூடங்குளம் அணுமின் நிலை யம் பாதுகாப்பானதா என்பது பற்றிய மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டியது மத்திய அரசின் கடமை - என்று பாரதிய ஜனதாக் கட்சி கூறியுள்ளது.

கூடங்குளம் அணுமின் நிலை யம் பாதுகாப்பானது என இந் தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்துள்ளது பற்றி கருத்துத் தெரிவிக்க பா.ஜ.க வின் செய்தித் தொடர்பாளர் பிர காஷ் ஜவ்தேகர் மறுத்துவிட்டார்.

அவர் செய்தியாளர்களிடம் கடந்த திங்கட்கிழமை கூறி யவை வருமாறு -

மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டியது அரசின் கடமை. மக்களின் பாதுகாப்பை நாட்டுக்கு உறுதி செய்யவேண்டியது அரசின் பொறுப்பு. அப்துல் கலாம் மரியாதைக்குரிய விஞ் ஞானி ஆவார். இருந்தாலும் அவரது கருத்துப் பற்றி நான் எதுவும் தெரிவிக்க முடியாது.

ஏனெனில், கூடங்குளம் பற்றிய அவரது 32 பக்க அறிக் கையை நான் இன்னும் பார்க்க வில்லை. கூடங்குளம் அணு மின் நிலைய பாதுகாப்பு குறித்து அப்பகுதி மக்களின் அச்சத்தில் நியாயம் இருக்கும் என்று தோன்றுகிறது. இதனைப் பரி சீலிக்க வேண்டியது அவசியம். கூடங்குளம் அணுமின் நிலை யத்துக்கு தொழில்நுட்பங்களை ஏற்றுமதி செய்த சில நாடுகள், சில காரணங்களால் தொழில் நுட்பங்கள் வழங்குவதை நிறுத் திக்கொண்டுவிட்டன. இது போன்ற திட்டங்களை மேலும் செயற்படுத்த அவை முன் வரவில்லை- என்றார். (வ)

# எலிக் காய்ச்சல் பரவும் அபாயம் சென்னை மாநகராட்சி எச்சரிக்கை

சென்னை, நவ.10

மழைக் காலங்களில் வீதி களில் தேங்கி நிற்கும் நீர் மூலம் லெப்டோ ஸ்பைரோசிஸ் என்ற எலிக் காய்ச்சல் நோய் வரலாம் என்று பொது மக்களுக்கு சென்னை மாநகராட்சி எச்ச ரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து மாநகராட்சி வெளியிட்டுள்ள அறிக்கை யில்:

மழைக் காலங்களில் பரவும் வயிற்றுப் போக்கு, கொலரா, மஞ்சள் காமாலை, தைபோயிட் போன்ற நோய்கள் வராமல் தடுக்க, குடிதண்ணீரை வடி கட்டி, நன்றாகக் கொதிக்க வைத்து ஆறிய பின்னர் குடிக்க வேண்டும்.

மழை நீரை வீட்டின் மேல் தளங்கள், பூந் தொட்டிகள், உபயோகமற்ற டயர்கள், மற் றும் பொருள்களில் தேங்க விடக்கூடாது. அவற்றில் கொசுக் கள் உற்பத்தியாகி மலேரியா, டெங்கு காய்ச்சல் நோய்கள் பரவலாம்.

எனவே உபயோகமற்ற பொருள்களை உடனடியாக அகற்றிவிட வேண்டும்.

வீதிகளில் தேங்கி நிற்கும் நீரில் நடந்தால் கால்களை நன்றாகக் கழுவ வேண்டும். அந்த நீர் மூலம் லெப்டோ ஸ்பைரோசிஸ் என்ற எலிக் காய்ச்சல் நோய் உருவாகலாம் என்று மாநகராட்சி அறிவித் துள்ளது. (வ)



புதுடில்லியில் சுவதேஷ் நாளிதழ் குழுமங்களின் சிறப்பு பதிப்பு விழாவில் பா.ஜ. மூத்த தலைவர் அத்வானி, லோக்சபா எதிர்க்கட்சித்தலைவர் சுஷ்மா சுவராஜ், அருண்ஜேட்லி ஆகியோர் கலந்து கொண்ட னர்.

## நாடாளுமன்றத்தை முடக்குவோம் பா.ஜ.க. எச்சரிக்கை

டில்லி, நவ.10

நாடாளுமன்றத்தின் குளிர் காலக் கூட்டத்தொடர் சுமுக மாக நடைபெற வேண்டு மென்றால் பெற்றோல் விலை உயர்வை உடனடியாகத் திரும் பப் பெறவேண்டும் என்று பா.ஜ.க. வலியுறுத்தியுள்ளது.

இல்லையெனில் இந்த விவகாரம் குறித்து நாடாளு மன்றத்தின் இரு அவைகளிலும் பிரச்சினை எழுப்புவோம்.

இரு அவைகளின் நடவடிக் கைகளும் முடங்கும் என்று அந்தக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் பிரகாஷ் ஜவ டேகர் டில்லியில் திங்கட் கிழமை தெரிவித்தார். (வ)

## கனிமொழி பிணை மனு: பதிலளிக்குமாறு சி.பி.ஐக்கு நோட்டீஸ்

டில்லி, நவ.10

தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி தாக் கல் செய்துள்ள பிணை மனு குறித்து பதிலளிக்குமாறு மத் திய புலனாய் வுத் துறைக்கு டில்லி உயர்நீதிமன்றம் நோட் டீஸ் அனுப்பியுள்ளது.

டில்லி உயர்நீதிமன்றத்தில் அவரது பிணை மனு தொடர் பாக நேற்று விவாதம் நடை பெற்றது.

அப்போது கனிமொழிக்கு பிணை வழங்க சி.பி.ஐ. சட் டத்தரணி எதிர்ப் புத் தெரி விக்கவில்லை. விசாரணை நீதிமன் றத்தில் தெரிவித்த தையே இங்கும் தெரிவிக் கிறோம். அந்த நிலையில் மாற்றமில்லை என்று சி.பி.ஐ. சட்டத்தரணி கூறினார்.

கனிமொழி கடந்த 5 மாதங்களாக சிறையில் இருப் பது குறிப்பிடத்தக்கது. அவரது பிணை மனுக்கள் 4 முறை சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளன. நேற்று 5 ஆவது முறை யாக அவரது மனு விசாரணைக்கு வந்தது.

கலைஞர் ரி.விக்கு ரூ. 200 கோடி தரப்பட்ட விவகாரத்தில் அவர் கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (வ)

# குஜராத் கலவர வழக்கில் 31 பேர் குற்றவாளிகள்

குஜராத் கலவர வழக்கில்ம் 31 பேர் குற்ற வாளிகள் என்று தீர்ப்பளித்துள்ள நீதிமன்றம், 42 பேரை வழக்கிலிருந்து விடுவித்துள்ளது.

குஜராத் மாநிலத்தில் கடந்த 2002 ஆம் ஆண்டு கோத்ரா ரயில் எரிப்புக்கு பின்னர் நடைபெற்ற கலவரம் தொடர்பான வழக்கில் 31 பேர் குற்ற வாளி கள் என்று நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பளித்துள்ளது.

சர்தார்புரா என்ற இடத்தில் நடைபெற்ற கலவரத்தில் 33 பேர் எரித்து கொல்லப்பட் டனர்.

இது தொடர்பான வழக்கில் மொத் தம் 73 பேர் குற்றம் சாட்டப்பட் டிருந்தனர். இவர்கள் அனைவர் மீதும் கொலை, கொலை முயற்சி, தீ வைத் தல், கலவரத்தில் ஈடுபடுதல் மற்றும் கிரிமினல் சதி குற்றச்சாட்டுக்கள் சுமத் தப்பட் டிருந்தன.

இந்த வழக்கு விரைவு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில்,நேற்று இந்த வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதில் 31 பேர் குற்றவாளிகள் என்று அறி வித்த நீதிமன்றம், 42 பேரை வழக்கிலிருந்து விடுவிப்பதாக தெரிவித் தது. இதேவேளை இந்த 42 பேரில் 11 பேர் குற்றவாளிகள் இல்லை என்றும், மீதமுள் ளவர்கள் தனி நபர் உத்தர வாத பத்திரம்



அளித்து விடுதலை பெறலாம் என்றும் நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப் பிட்டுள்ளது.

குஜராத் கலவரம் தொடர்பாக பல வழக்குகள் நடைபெற்று வந்தாலும், சர்தார்புரா நீதிமன்றம் நேற்று அளித்துள்ள தீர்ப்புதான் குஜராத் கலவர வழக்கில் முதல் தீர்ப்பு ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

ஸ்பெக்ட்ரம் விவகாரம்:

## சுவாமி தாக்கல் செய்த மனுவின் விசாரணை ஒத்திவைப்பு

2ஜி ஸ்பெக்ட்ரம் அலைக் கற்றை ஒதுக் கீடு தொடர்பாக ப.சிதம்பரத்துக்கு எதிராக சுப்ரமணிய சுவாமி தாக்கல் செய்த மனுவை சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் அடுத்த மாதம் 3ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளது.

தொலைத்தொடர்பு நிறுவனங்களின் பங்கு களை விற்பது தொடர்பாக முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசாவுக்கும், சிதம்பரத்துக்கும் இடையே நடைபெற்ற கூட்டங்கள் தொடர்பான அனைத்து விவ காரங்களையும் சுவாமியிடம் சி.பி.ஐ. அளிக்க வேண்டும் என்று நீதிமன்றம் கேட்டுக் கொண்டது.

அலைக்கற்றை ஒதுக்கீடு நடைபெற்ற ஐக்கிய முற்போக் குக் கூட்டணி அரசின் முதல் 5 ஆண்டு காலத்தில் நிதி அமைச் சராக இருந்த ப.சிதம்பரத்துக்கும் பங்குண்டு என்று சுவாமி குற்றம் சாட்டி வருகிறார். (வ)

## எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு ரஷ்யாவின் நட்புறவு விருது

இந்திய எழுத்தாளர் ஜெய காந்த னுக்கு ரஷ்ய நாட்டின் மிக உயரிய நட்புறவு விருது (ஆர்டர் ஆஃப் ஃபிரண்ட்ஷிப்) வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருதைப் பெறும் முதல் இந்திய எழுத்தாளர் ஜெய காந்தன். இதற்கு முன்னதாக, பிரபல திரைப்பட இயக்குநர் மிர்ணாள் சென்னுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

ரஷ்ய அதிபர் திமித்ரி மெத் வதேவ் பிறப்பித்த உத்தரவின் நகலை இந்தியாவுக்கான ரஷ்ய துணைத் தூதர் நிகோலாய் ஏ லிஸ்தப தோவ், ஜெயகாந் தனிடம் சென்னையில் வழங் கினார்.

இந்தோ ரஷ்ய கலாசார மற்றும் நட்புறவு மையத்தின் தலைவராக ஜெயகாந்தன் உள்ளார். இவர் தனது எழுத்துப் பணியோடு இந்திய, ரஷ்ய நாடுகளிடையே உறவை வளர்க் கும் பணியில் தொடர்ந்து ஈடு பட்டு வருவதால் அவருக்கு இந்தவிருது வழங்கப்பட்டுள்ளது.

அவரது நாவலைத் தழுவி எடுக்கப்பட்ட உன்னைப் போல் ஒருவன் (1965) திரைப்படம் ரஷ்ய அதிபர் விருதைப் பெற்றது.

# சனிப் பெயர்ச்சிப் பலன்கள்

15.11.2011 - 02.11.2014

தருவது ஜோதிடக் கலைமாமணி
டாக்டர் முருகடிமை துரைராஜ்

## கும்பம்

(அவிட்டம் 3ஆம், 4ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1ஆம், 2 ஆம், 3ஆம் பாதங்கள்)



கும்பராசிக்காரர்களுக்கு 15.11.2011 முதல் 211.2014 வரை சனி பகவான் பாக்யஸ்தானம் எனும் 9 இல் சஞ்சரிப்பார்.

கடந்த 2 வருடகாலமாக சனிபகவான் உமது ராசிக்கு 8இல் சஞ்சரித்தார். சனி பகவான் 8இலிருந்தபோது வீடு மாற்றம். தொழிலக மாற்றம், புத்திரபாக்கியம் என கிடைத்தன. கெட்டவன் கெட்டில் கிட்டும்.ராஜயோகம் என்ற கூற்று மெய்யானது. வாக்கினால் வளமும் நலமும் சேர்ந்தது. புதிய முயற்சிகளில் வெற்றி பணிச்சுமையையும் குடும்பப்பொறுப்பும் கூடின.

தற்சமயம் சனிபகவான் பாக்ய ஸ்தானம் என்னும் 9 இல் வருகிறார். இந்த ஸ்தானத்துக்கு மகாலட்சுமி ஸ்தானம் என்று ஒரு பெயர். மூலதனம் பெருகும். உங்கள் ராசிநாதன் 9 இல் உச்சம்பெறுவது மிகவும் விசேடம். முதலீடுகள் பெருகும். வாகனம் வாங்க இடமுண்டு. சிலர் தந்தையின் தொழிலை ஏற்று செய்ய இடமுண்டு. கணவன் மனைவி இடையில் வேற்றுமை விலகும்.

**சனி பகவான் பார்வை பலன்கள்**

சனி பகவானின் 3, 7,10 ஆம் பார்வையினால் உமது ராசிக்கு 11, 3, 6 ஆகிய வீடுகளில் பாதிப்பை செய்வார். சனி பகவானின் 3 ஆவது பார்வையினால் உமது ராசிக்கு 11 ஆம் வீட்டை பார்வைசெய்வதால் தொழில் வழி முன்னேற்றம் கிட்டும். பதவி உயர்வு கிட்டும். கண் சம்பந்த உபாதைகளுக்கு இடமுண்டு. பூர்வீக சொத்தில் நிலவிய வில்லங்கங்கள் தீரும். சிலர் காதல் திருமணம் புரிவர். விவாகரத்து பெற்றவர்கள் மறு திருமணம் புரிவர். விவாகரத்து பெற்றவர்கள் மறு மணம் புரிவர்.

சனி பகவானின் 7ஆவது பார்வை பயனால் உமது ராசிக்கு 3ஆம் வீட்டைப்பார்வை செய்வதால் பணப்புழக்கம் உண்டாகும். தாயார் வழியில் மருத்துவச் செலவுகள் வரும். மனைவி வழியில் சுபநிகழ்ச்சியும் அதனால் கணிசமான செலவும் உண்டாகும். உமது பெயரும் புகழும் ஓங்கும்.

சனி பகவானின் 10 ஆவது பார்வையினால் உங்கள் ராசிக்கு 6 ஆம் இடமான டெராணப்ராப்த ஸ்தானத்தைப்பார்வை செய்வதால் எதிரிகள் விலகுவர். கடன் தீரும், கவலைகள் விலகும். கணவன் மனைவி இடையில் நிலவிய சங்கடமான சூழ்நிலை அகன்று சந்தோசம் குடிகொள்ளும்.

**விசேட பலன்கள்**

**உத்தியோகஸ்தர்களுக்கு :** மருத்துவம் , கால்நடை மருத்துவம் , சித்த ஆயுள் வேதம், விவசாயம், பொதுப்பணி போன்ற துறைகளில் பணிபுரிவோர் ஏற்றம் பெறுவர். தடைப்பட்ட பதவி உயர்வு கிட்டும்.

**வியாபாரிகளுக்கு :** எரிபொருள், உரம், பண்ணை சாதனங்கள் போன்ற தொழிற் பிரிவினர் மிக அனுகூலம் பெறுவர்.

**விவசாயிகளுக்கு:** அபிவிருத்திப் பணிகளுக்கு அரசு வழியில் உதவியும் ஒத்தாசையும் கிட்டும். பணப் பயிர்கள் நல்ல விளைச்சல் தரும். , உழவு சாதனங்கள் சேர்க்கை உண்டு. விளைபொருள்கள் நல்ல ஆசன வாய்ப்புக்கிடைக்கும்.

**பெண்களுக்கு:** வேலை தேடுபவர்களுக்கு வேலை கிட்டும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு பதவி உயர்வு கிட்டும். கணவன், மனைவிக்கிடையில் கருத் தொற்றுமை நிலவும். வேசலைக்குப் போகும் பெண்கள் முன் அறிமுகம் இல்லாத வர்களிடம் பழகுவதை தவிர்த்தல் நலம்.

**மாணவர்களுக்கு:** மின்சாதனத்துறை,ஆர்க்கிடெக் போன்ற பிரிவுகளில் பயில் வோர் முன்னிலைபெறுவர். சிலர் உயர் கல்வி பயில வெளிநாடு செல்லவுட் இடமுண்டு.

**சஞ்சார பலன்**

15.11.2011 முதல்07.2.2012 வரையும் 03.8.2012 முதல் 27.10.2012 வரையும் சனி பகவான் சித்திரை நட்சத்திரத்தில் செவ்வாய் சாரத்தில் சஞ்சரிப்பதால் வீடு போன்ற ஸ்திர சொத்துக்களில் முதலீடு செய்யும் யோகம் உள்ளது. உத்தியோக, வழியில் அல்லது தொழில் வழியில் இடமாற்றம் உண்டாகும்.

28.10.2012 முதல் 18.2.2013 வரையும் 9.7.2013 முதல் 5.11.2013 வரையும் சனி பகவான் சுவாதி நட்சத்திரத்தில் யோகக்காரர் ராகு பகவான் சாரத்தில் சஞ்சரிப்பதால் எதிர்பாராத தன வரவுக்கு இடமுண்டு.சிலருக்கு பதவி ஏற்ற உயர்வு கிட்டும் இடமாறுதலுக்கு இடமுண்டு.

05.11.2013 முதல் 02.3.2014 வரையும் 21.7.2014 முதல் 2.11.2014 வரையும் சனிபகவான் விசாகம் நட்சத்திரத்தில் குரு பகவான் சாரத்தில் சஞ்சரிப்பதால் வாக்கினால் ஜீவனம் புரிபவர்கள் மிகவும ஏற்றம் அடைவர்.குடும்பத்தில் சுக செலவுகள் வந்த வண்ணமிருக்கும்.

**சனி பகவான் வக்ரகால பலன்கள்**

08.2.2012 முதல் 16.2.2012 வரையும் 17.2.2013 முதல் 08.7.2013 வரையும் 03.3.2014 முதல் 20.7.2014 வரையும் சனிபகவான் வக்ர கதியில் சஞ்சரிப்பதால் உடல் நலனில் கவனம்தேவை. கடன் தொல்லை தராது. விரோதிகள் விலகுவர்.

**மூர்த்திகர நிர்யண பலனும் பரிகாரமும்.**

சனிப்பெயர்ச்சியின்போது, மூர்த்திகர நிர்ணயத்தில் ரஜமூர்த்தி ஆகிறார். இதன் பலன் முக்கால் பங்கு நன்மை கிட்டும். இதற்கு பலன் முக்கால் பங்கு நன்மை கிட்டும். இதற்கு உலோகம் வெள்ளி மகாவிஷ்ணு கோயிலுக்கு வெள்ளியிலான பூசைப்பாத்திரங்கள் கொடுத்தல் நன்று.

**சனிப் பெயர்ச்சியும் குருப்பெயர்ச்சியும்**

சனிப்பெயர்ச்சியின் போது 16.5.2012 வரை குரு பகவான் உங்கள் ராசி 3இல் சஞ்சரிப்பார். சரளமான பணப்புழக்கம் உண்டாகும். 28.5.2013 வரைக்கும் பகவான் உமது ராசி 4இல் சஞ்சாரம். இதனால் வீடு மாற்றம் தொழில் மாற்றம் உண்டாகும். 19.6.2014 வரைக்கும் பகவான் உங்கள் ராசிக்கு 5இல் வருவதால் நிதிப் பற்றாக்குறை தீரும். புத்திரபாக்கியம் கிட்டும். இதற்குப்பின்பு சனிபகவான் 10இல் வரும்வரை பகவான் உங்கள் ராசிக்கு 6இல் வருவதால் கடன் தீரும். பகை விலகும். செய்தொழில் எதுவானாலும் அதில் முன்னேற்றம் கிட்டும்.அரசியலில் ஈடுபட்டோருக்கு பெயரும் புகழும் சேரும்.

**சனிப்பெயர்ச்சியும் இராகு, கேது பெயர்ச்சியும்**

சனிப்பெயர்ச்சியின்போது 06.6.2011 முதல் இராகு 10இலும் கேது 4இலும் சஞ்சாரம். இதனால் தொழில் நிலையம் பரபரப்பான சூழ்நிலை நிலவும். பிரயாணம் அதிகரிக்கும் உடல் நலனில் கவனம் தேவை. 25.12.2012 முதல் ராகு 9இலும் கேது 3இலும் சஞ்சாரம். மின்சாதனம், கணினி வழியில் முதலீடு பெருகும். 14.7.2014 முதல் ராகு 8இலும் கேது 2இலும் சஞ்சாரம் இதனால் புதிய முயற்சிகளில் தடைகள் உண்டாகும். கணவன், மனைவி இடையில் ஏறுக்குமாறான வாதம் உண்டாக இடமுண்டு.

**விசேட பரிகாரம்**

பிரதி சனிக்கிழமைகளில் சனிபகவானுக்கு நல்லெண்ணையில் தீபம் ஏற்றி கருங்குவளை சாற்றவும்.

## மீனம்

(பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)



மீன ராசிக்காரர்களுக்கு சனி பகவான் 15.11.2011 முதல் 02.11.2014 வரை அஷ்டம ஸ்தானம் எனும் 8ஆம் வீட்டில் சஞ்சரிப்பார்.

கடந்த 2 வருட காலசனிபகவாள் உங்கள் ராசிக்கு 7இல் இருந்தபோது மனைவியின் உடல் நலனில் இன்னல் நேர்ந்தது. களத்திர ஸ்தானம் என்பதால் கணவன் மனைவி இடையில் கருத்து வேறுபாடுகளும் நிலவின. கூட்டுத் தொழிலில் பல சங்கடங்கள் நிகழ்ந்தன. தொழில் வழியில் விரயம் நிலவினாலும் முதலீடுகளும் பெருகின.

தற்சமயம் சனிபகவான் உங்கள் ராசிக்கு 8இல் வருகிறார். அச்சம் வேண்டாம் 1,5,9 இற்குடையவர்கள் பாபியே ஆனாலும் சுப பலனே தருவார் என்பது விதி மேலும் 12 இற்குடைய சனி பகவான் 8 இல் உச்சம் பெறுவதால் வாக்கினால் ஜீவனம் புரிபவர்கள் மிக்க அனு கூலம் அடைவர்.

**சனி பகவான் பார்வை பலன்கள்**

சனிபகவான் 3, 7, 10 ஆம் பார்வையினால் உங்கள் ராசிக்கு 10, 2, 5 ஆகிய வீடுகளை பார்வை செய்வார்.

சனிபகவானின் 3ஆவது பார்வையினால் உங்கள் ராசிக்கு 10ஆவது வீடடைப் பார்வை செய்வதால் தொழில் வளம் பெருகும். தொழில் வழியில் புதிய முதலீடு செய்ய கடன் கிடைக்கும். புத்திர பாக்கியத்தடை விலகும். ஆண்குழந்தை பிறக்க இடமுண்டு.

சனிபகவானின் 3ஆவது பார்வையினால் உங்கள் ராசிக்கு 2 ஆவது வீட்டைப் பார்வை செய்வதால் வாக்கினால் ஜீவனம் புரிபவர்கள் அதிக இலாபம் பெறுவர். குடும்பத்தில் வீண் வாக்குவாதம் தவிர்க்கவும்.

சனி பகவானின் 10வது பார்வையினால் உங்கள் ராசிக்கு 5ஆம் வீட்டைப்பார்வை செய்வதால் பூர்வீக சொத்தில் வில்லங்கம் தீரும்.

விரோதிகள் விலகுவர். செய்தொழிலில் அபிவிருத்தி கிட்டும்.

**விசேட பலன்கள்**

**உத்தியோகத்தர்களுக்கு:** வங்கி, கல்லூரி, அஞ்சலகம், தலைமைச் செயலகம் நிதித்துறை போன்ற பிரிவுகளில் பணிபுரிவோர் ஏற்றம் அடைவர். தடைப்பட்ட பதவி உயர்வு கிட்டும். உயர் அதிகாரிகளிடம் சற்று இங்கிதமாக நடந்து கொள்ளவும்

**விவசாயிகளுக்கு:** நெல், மற்றும் அனைத்து விற்பனை அபிவிருத்தி, மண் பாதுகாப்பு போன்றவைகளில் கவனம் செலுத்துவீர்கள் காய்கறித்தோட்டம் நல்ல இலாபம் தரும் அரச வழியில் கூட்டுறவு விவசாய வங்கிகள் மூலம் ஒத்துழைப்புக் கிட்டும்.

**வியாபாரிகளுக்கு:** மொத்த வணிகம் செய்யும் அனைத்து பிரிவினரும் மற்றும் சில்லரை வணிகம், கணினி, தனியார் நிறுவனங்கள் நடத்துவோர் மிகவும் பயனடைவர்.

**பெண்களுக்கு:** கருத்துவேறுபாடு காரணமாக பிரிந்து வாழும் தம்பதிகள் இணைந்து வாழ இடம் உண்டு. புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திர பாக்கியம் கிட்டும். சிலருக்கு கணவனுடன் வெளிநாடு செல்லும் யோகம் கிட்டும். வேலை தேடும் பெண்களுக்கு வேலை கிடைக்கும்.

**மாணவர்களுக்கு:** ஊடகத்துறை, கணக்காளர் போன்ற பிரிவுகளில் பயில்வோர் ஏற்றம் பெறுவர். கல்விக்கடன் கிடைக்கும் சிலர் உயர் கல்வி நிமித்தம் வெளிநாடு செல்லவும் இடம் உண்டு.

**சஞ்சார பலன்கள்**

15.11.2011 முதல் 07.2.2012 வரையும் 03.8.2012 முதல் 22.10.2012 வரையும் சனி பகவான் சித்திரை நட்சத்திரத்தில் செவ்வாய் சாரத்தில் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் வீண் வாக்குவாதம் தவிர்க்கவும். தன இலாபம் பெருகும். கணவன் மனைவி இடையில் கருத்து ஒற்றுமை தேவை.

28.10.2012 முதல் 18.2.2013 வரையும் 09.7.2013 முதல் 05.11.2013 வரையும் சனி பகவான் சுவாதி நட்சத்திரத்தில் யோகக்காரர்கள் ராகு பகவான் சாரத்தில் சஞ்சரிப்பதால் வாக்கினால் ஜீவனம் புரிபவர்கள் ஏற்றம் பெறுவர். சரளமான பணப்புழக்கம் உண்டு. எதிர்பாராத தன இலாபம் கிட்டும்

05.11.2013 முதல் 02.3.2014 வரையும் 21.7.2014 முதல் 02.11.2014 வரையும் சனி பகவான் விசாகம் நட்சத்திரத்தில் குருபகவான் சாரத்தில் சஞ்சரிப்பதால் பதவி உயர்வு கிட்டும். வரவேண்டிய நிலுவை ஊதியம் கணிசமாக வந்துசேரும்.

**சனி பகவான் வக்ர கால பலன்கள்**

08.2.2012 முதல் 02.8.2012 வரையும்19.2.2013 முதல் 08.7.2013 வரையும் 03.3.2014 முதல் 20.7.2014 வரையும் சனி பகவான் வக்ர கதியில் சஞ்சரிப்பதால் கடன் தொல்லை தராது. கணவன் மனைவி இடையில் வீண் வாக்கு வாதம் உண்டாகும். யாருக்கும் கடன் கொடுத்தால் திரும்பி வாங்குவது சிரமம்.

**மூர்த்திகர நிர்ணய பலனும் பரிகாரமும்**

சனிப்பெயர்ச்சியின்போது மூர்த்திகர நிர்ணயத்தில் உலோக மூர்த்தியாக வருகிறார் இதன் பலன் கால் பங்குகள் பிரதி சனிக்கிழமை சனி பகவானுக்கு உள் தீபம் ஏற்றவும்.

**சனிப்பெயர்ச்சியும் குருப்பெயர்ச்சியும்**

சனிபகவான் உமது ராசிக்கு 3இல் சஞ்சரிக்கும் காலத்தில் 16.5.2012 வரை குருபகவான் உங்கள் ராசியில் சஞ்சரிப்பார். இதுவரை பணப்புழக்கம் உண்டாகும். வாக்கினால் ஜீவனம் புரிபவர்கள் ஏற்றம் பெறுவர். 28.5.2013 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 3 இல் சஞ்சரிப்பதால் தொழில் அலைச்சல்கள் உண்டாகும் 19.6.2014 வரை குருபகவான்உங்கள் ராசிக்கு 4 இல் சஞ்சரிப்பார். வீடு,வாங்க வாய்ப்பு கிட்டும். இதற்கு பின்பு சனிபகவான் 9 இல் பிரவேசிக்கும் வரையில் உங்கள் ராசிக்கு 5 இல் சஞ்சரிப்பார் இதனால் சந்தோஷம் பெருகும். உத்தியோக உயர்வு கிட்டும்.

**சனிப் பெயர்ச்சியும் இராகு, கேதுப் பெயர்ச்சியும்**

சனிபகவான் உங்கள் ராசிக்கு 8 இல் சஞ்சரிக்கும் காலத்தில் 6.6.2011 முதல் இராகு 9 இலும் கேது 3 இலும் சஞ்சாரம். இளைய சகோதரனுடன் மனஸ்தாபம் உண்டாகும். 25.12.2012 முதல் இராகு 8 இலும் கேது 2 இலும் சஞ்சாரம். இதனால் தண்ணீரில் கண்டம் உண்டாகும். 14.7.2014 முதல் இராகு 8 இலும் கேது உங்கள் இராசியிலும் சஞ்சரிப்பதால் உடல் நலனில் மிக்க கவனம் தேவை . பிரயாணத்தைத் தவிர்க்கவும், கணவன், மனைவி இடையில் வீண் விதண்டாவாதம் தவிர்த்தல் நலம்.

**விசேட பரிகாரம்**

குருபிரதோசம், சனி பிரதோசம், சோமபிரதோசம், செவ்வாய் பிரதோசம் ஆகிய விசேச தினங்களில் சிவாலயம் சென்று வழிபடவும். பிரதி சனிக்கிழமை சனி பகவானுக்கு நல்லெண்ணையில் எள்முடிச்சு தீபமேற்றி வழிபடுதல் நன்று.

# அமெரிக்காவின் கரங்களைத் துண்டிக்க ஈரானுக்கு அணுகுண்டு தேவையில்லை

## நிஜாத் கடும் எச்சரிக்கை

அமெரிக்காவின் கரங்களைத் துண்டிக்க ஈரானுக்கு அணுகுண்டு தேவையில்லை எனத் தெரிவித்த ஈரானின் ஜனாதிபதி அஹ்மது நிஜாத் மோதலுக்குத்தான் தயாராகிறது என்றால் ஈரானின் பதிலடி குறித்து சிந்தித்து அமெரிக்கா துக்கமடைய வேண்டிய சூழல் ஏற்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரான் அணு ஆயுதம் தயாரிக்கும் நிலையை நெருங்கி விட்டதாக சர்வதேச அணுசக்தி தொடர்பகத்தால் அறிக்கை வெளியிடப்பட உள்ளது என அண்மையில் கசிந்த செய்தியைத் தொடர்ந்து ஈரான் ஜனாதிபதி நிஜாத்தினால் வெளியிடப்பட்ட எச்சரிக்கை அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் அவர் தெரிவித்ததாவது:

ஏனைய நாடுகளை வறுமையில் உழலச்செய்து அவர்களுடைய சொத்துக்களை ஏப்பமிட்டு அமெரிக்கா தனது சொந்த செல்வச் செழிப்பை உறுதிச்செய்கிறது.



அதுமட்டுமன்றி அணு ஆயுதமற்ற உல கைத் தோற்றுவிக்க அமெரிக்கா ஈடுபாடு காட்டவில்லை. தன்வசம் இருக்கும் அணுகுண்டுகளை மேலும் வலுப்படுத்த அமெரிக்கா 81 பில்லியன் அமெரிக்க டொலர்களை மேலதிகமாக ஒதுக்கியுள்ளது .

சர்வதேச அணு சக்தி தொடர்பகத்தின் தலைவர் யூகியோ அமானோ அமெரிக்காவின் பொம்மை. மேற்கு சக்திகளின் அணு ஆயுதங்கள் குறித்த அறிக்கையைத் தயார் செய்யாத சர்வதேச அணுசக்தி தொடர்பகம் அமெரிக்கா வசம் 5000 ஆயிரம் அணு ஆயுதங்கள் இருப் பதை மறந்துவிடக் கூடாது. ஈரானின் அணுசக்தி தொடர்பாக சர்வதேச அணுசக்தி தொடர்பகம் தயார் செய்துள்ள அறிக்கை பொய்யான காரணங்களின் பின்னணியைக் கொண்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதாக கூறும் மேற்கத்திய நாடுகளிடம் அதற்குரிய ஆதாரங்கள் இல்லை எனத் தெரிவித்த ஈரானின் வெளியுறவுத்துறை அமைச்சர் அலி அக்பர் ஸலாஹி, அதிகாரப் பூர்வம் இல்லாத அறிக்கையின் வாதத்தில் உறுதியாக இருந்தால் அதனை விரைவாக வெளியிட வேண்டும் என சவால் விடுத்துள்ளார். (ந)

# இஸ்ரேல் பிரதமர் ஒரு பொய்யர் ஒபாமாவிடம் சர்கோஸி விமர்சனம்

லண்டன்

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெடான்யாஹூ ஒரு பொய்யர் எனப் பிரான்ஸ் அதிபர் நிக்கோலஸ் சர்கோஸி ஒபாமாவிடம் விமர்சித்ததாகத் தகவல் ஒன்று தற்போது வெளியாகியுள்ளது.



பிரான்சின் கேன்ஸ் நகரில் சமீபத்தில் நடைபெற்ற ஜி 20 நாடுகளின் மாநாட்டு அரங்கில் பத்திரிகையாளர்கள் இருந்த இடத்துக்கு கருவிகள் மூலம் பேச்சுக்கள் கேட்கும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பல மொழிகள் அந்தக் கூட்டத்தில் பேசப்படுவதால், மொழி பெயர்க்கும் கருவிகளும் பத்திரிகையாளர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் அமெரிக்க அதிபர் ஒபாமாவுடன் தனிப்பட்ட முறையில் பேசிக் கொண்டிருந்த சர்கோஸி இஸ்ரேல் பிரதமரிடம் இருந்து நான் இனி ஒன்றும் எதிர்பார்ப்பதற்கில்லை; அவர் ஒரு பொய்யர் என்று கூறியுள்ளார். இதற்குப் பதிலளித்த ஒபாமா ''உங்களுக்கு வேண்டுமானால் அவர் மீது வெறுப்பு இருக்கலாம்; ஆனால் நான் அவருடன் தினசரி உரையாடுகிறேன்'' என்று கூறியதுடன் , ஐ.நா.,வின் 'யுனெஸ்கோ' அமைப்பில் பலஸ்தீனத்துக்கு முழு உறுப்பினர் அந்தஸ்து வழங்கும் வாக்கெடுப்பில் பிரான்ஸ், பலஸ்தீனத்துக்கு ஆதரவாக வாக்களித்தது பற்றி ஏன் தன்னிடம் முதலில் தெரிவிக்கவில்லை எனவும் ஒபாமா சர்கோஸியிடம் கேட்டுள்ளார். இவர்கள் இருவரதும் உரையாடல்களை பத்திரிகையாளர்கள் ஒரு சிலர் மட்டுமே கேட்டனர். ஆனால் பின்னர் எப்படியோ . வெளியில் கசிந்து விட்டது. இதனையடுத்து இந்த உரையாடல்கள் இஸ்ரேல் மீதான மேற்குலகின் நம்பிக்கை குறைந்து வருவதைக் காட்டுவதாக நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந)

# ஈரானைத் தாக்கும் எண்ணம் எதுவும் இஸ்ரேலுக்கு இல்லை

டெல்வ் அவிவ், நவ.10

ஈரானுக்கு எதிராக இராணுவ நடவடிக் கைகளை மேற்கொள்வது குறித்து தாம் இன்னும் தீர்மானிக்கவில்லையென இஸ்ரேல் அறிவித்துள்ளது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரான் மீது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள முனைவதாகத் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எனினும் ஈரான் மீது சர்வதேசத்தின் அழுத்தம் தொடர்ந்தும் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும், ஈரானின் அணுத்திட்டங்கள் குறித்து விரிவான பரிசோதனைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் இஸ்ரேல் வலியுறுத்தியுள்ளது.



ரஷ்யா வந்திருந்த சீனப் பிரதமர் வென்ஜியாபோவை (இடது) அந்நாட்டு பிரதமர் விளாடிமிர் புடின், தலைநகர் மாஸ்கோவில் வரவேற்றார்.

# காபன் வரித் திட்டத்துக்கு ஆஸ்திரேலிய செனட் சபை அங்கீகாரம்

சிட்னி,நவ.10

சூழல் மாசடைதல் தொடர்பான சர்ச்சைக்குரிய காபன் வரித் திட்டத்துக்கு ஆஸ்திரேலியாவின் செனட் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தூய்மையான சக்தி சட்டத்தின் பிரகாரம் நாட்டில் மிகப்பெரிய மாசுபடுத்தலை ஏற்படுத்தும் 500 நிறுவனங்கள் வரியை செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்பிரகாரம் குறித்த நிறுவனங் கள் தாம் வெளியேற்றும் காபனுக்காக அடுத்த ஆண்டு ஜுலை முதலாம் திகதி முதல் இந்த வரியை செலுத்த வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந)

# இந்துமத மருத்துவர்கள் நால்வர் பாகிஸ்தானில் சுட்டுக்கொலை

கராச்சி, நவ.10

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் நான்கு இந்துமதத்தைச் சேர்ந்த நான்கு மருத்துவர்கள் மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சிந்து மாகாணத்தின் சிகார்பூர் அருகில் உள்ள சாக் நகரில் உள்ள மருத்துவமனை ஒன்றில் பணியாற்றும் அசோக், நரேஷ், அஜீத் மற்றும் சாதியா பால் ஆகிய நான்கு மருத்துவர் களுமே இவ்வாறு மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என பாகிஸ்தான் இந்து கவுன்சில் தலைவரான ரமேஷ் குமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும்கூறுகையில்:

''இந்துக்கள் கொல்லப்படுவது இது முதன் முறையல்ல. இதுபோன்ற பாதகச் செயல்களில் ஈடுபடும் சில குற்றவாளிகளுக்கு இப்பகுதி சட்ட அமுலாக்கத் துறையினர் துணை போகின்றனர். இந்தப் பகுதியில் 50 ஆயிரம் இந்துக்கள் வாழ்கின்றனர். அவர்களைக் காக்க வேண்டியது அரசின் கடமை'' என்றார்.

இக்கொலைகள் தொடர்பாக பாகிஸ்தான் அதிபர் சர்தாரி, உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி மற்றும் ராணுவத் தலைமைத் தளபதி கயானி ஆகியோருக்கு பாகிஸ்தான் இந்து கவுன்சில் புகார் அளித்துள்ளது.இதையடுத்து, இந்த விவகாரத்தில் உடனடி அறிக்கையை சமர்ப்பிக்கும்படி பொலிஸிடம் கேட்டுள்ளதுடன் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர்'' என, சர்தாரி தெரிவித்துள்ளார்.

## மொங்கோலியாவில் தலாய்லாமா பேச சீனா எதிர்ப்பு

மொங்கோலியாவில் புத்தமதத் தலைவர் தலாய்லாமா நடத்த இருந்த கூட்டத்துக்கு சீன அரசு எதிர்ப்பு தெரிவத்துள்ளது.

ஜப்பான் நாட் டில் சுற்றுப்பயணம் செய்த திபெத் புத்தமதத் தலைவர் தலாய்லாமா மொங்கோலியத் தலைநகரில் உள்ள விளையாட்டு மைதானத்தில் திபெத்தியர்களை சந்தித்துப் பேசுவதற்கு ஏற்பாடாகி இருந்தது. ஆனால் இதற்கு சீனா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.இதற்குக் காரணம் அந்த மைதானத்தை சீன அரசு கட்டிக் கொடுத் துள்ளமையே. இதனையடுத்து வேறொரு இடத்தில் தலாய்லாமா கலந்து கொள்ளும் பொதுக் கூட்டம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ந)

# கடைசி நாள்களில் உணவுக்காக வீடு வீடாக அலைந்தார் கடாபி

## பாதுகாப்பு அதிகாரி பேட்டியில் தெரிவிப்பு

லண்டன்:

''கடாபி தன் கடைசி நாள்களில் உணவைத் தேடி அலைந்தார். பாதுகாப்புக்காக ஒவ்வொரு வீடாக மாறினார்'' என அவரது பாதுகாப்பு அதிகாரிகளில் ஒருவர் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

லிபியாவின் முன்னாள் தலைவர் மும்மர் கடாபி கடந்த மாதம் 20 ஆம் திகதி எதிர்ப்பாளர்களால் உயிருடன் பிடிக்கப்பட்டு கொல்லப்பட்ட போது கடாபியின் பாதுகாப்பு அதிகாரி மன்சூர் தாவ்வும் பிடிப்பட்டார். தற்போது மிஸ் ரட்டாவில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள மன்சூர் தாவ் கடாபியின் கடைசி நாள்கள் பற்றி அளித்த பேட்டியில் மேலும் கூறியதாவது:

தனது ஆட்சியில் சகல ஆடம்பரங்களுடன் வசித்த அவர், எதிர்ப்பாளர்கள் முன்னேறிய போது, தனது மாளிகையில் மின்சாரம் இல்லாமல் அவதிப்பட்டார். அதுமட்டுமன்றி சிர்ட் நகரில் அவர் பதுங்கியிருந்த போது, கைவிடப்பட்ட வீடுகளில் நுழைந்து உணவு இருக்கிறதா என்று தேடி அலைந்தார். அத்துடன் எஞ்சியுள்ள பொழுதைத் தன் கையில் வைத்திருந்த புத் தகங்களைப் படிப்பதில் செல விட்டார் எனத் தெரிவித்தார்.



மேலும் போராளிகள் தான் இருக்கும் இடத்தை நோக்கி வருகிறார்கள், என்று தெரிந்ததும் கடாபி பதட்டமாக இருந்ததுடன் சிர்தேவில் இருந்து 20 கிமீ தொலைவில் உள்ள தனது சொந்த ஊரான ஜாரேப் என்னும் கிராமத்துக்குத் தப்பித்துச் செல்ல விரும்பினார். அந்த நேரம் அவர் மிகவும் கவலையுடனும் பயத்துடனும் இருந்தார் எனக் கூறிய மன்சூர் நான் கடந்து போன காலங்களுக்காக வருத்தப்படுகிறேன். நான் உயிருடன் இருப்பதற்கே இப்போது வருந்துகிறேன் என்றார். (ந)

# 1,018 நாடுகளை வலம்வரும் 'ஒலிம்பிக்' சுடர்!

2012 லண்டனில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு1,018 முக்கிய இடங்களின் ஊடாக ஒலிம்பிக் தீபச் சுடர் வலம் வர இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் மே மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் - ஜூலை 27ஆம் திகதி வரை 70 நாள்களுக்கு ஒலிம்பிக் தீபச் சுடரின் பயணம் செல்ல விருக்கிறது.

இறுதியாக தேம்ஸ் நதியின் கீழாகப் பயணித்து ஒலிம்பிக் பூங்காவில், நிகழ்வுகள் ஆரம்பமாகும் இடத்தை தீபச்சுடர் வந்தடைய இருக்கிறது.

10 வாரங்களுக்கு நடைபெறும் இந்த சுற்றுப்பயணத்தில், சுமார் 8000 வீரர்களால் தாங்கிச்செல்லப்படும் ஒலிம்பக் தீபச்சுடர் 8000 மைல்களுக்கு பயணிக்கவுள்ளது.

குறிப்பாக ஸ்கொட்லாந்து, வட அயர்லாந்து, உட்பட ஒவ்வொரு ஐரோப்பிய நாடுகளின் குக்கிராமங்கள்தோறும் பயணிக்க இருக்கிறது.

இந்த ஒலிம்பிக் சுடர் அலுமினிய கலவையினால் உருவாக்கப்பட்டு லேசர் கதிர் வீச்சுக்கள் மூலம் துல்லியமாக வெட்டப்பட்டு சுமார் 8000 தீபச்சுடர்கள் வடிமைக்கப்பட்டுள்ளது. (ந)

# சாவகச்சேரி டிறிபேர்க் அணி வென்றது

யாழ்ப்பாணம்,நவ.10

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதுப் பிரிவு அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அணி சம்பியனானது.

கடந்த வாரம் வரணி மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியை எதிர்த்து நாவற்குழி மகாவித்தியாலய அணி மோதிக் கொண்டது.

ஆட்டம் தொடங்கியது முதல் இரண்டு அணியினரும் தமது அணிக்கான கோலைப் பெற வேண்டும் என்ற நோக்கோடு விளையாடினர்.

ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட போது இரு அணியினரும் எந்த வித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட ஆட்டம் இரண்டாம் பாதி ஆட்டத்துக்காக ஆரம்பமான போது இரண்டு அணியினரும் தத்தமது அணிக்கான கோல்களை பெற வேண்டும் என்ற நோக்கோடு விளையாடினர்.

ஆட்ட முடிவில் இரண்டு அணியினரும் 1:1 என்ற கோல் களைப் பெற்றதால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,நவ.10

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 13 வயது பிரிவினருக்கான துடுப்பாட்ட சுற்று போட்டியின் முதலாவது சுற்றுக்கான ஆட்டத்தில் இன்று வியாழக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் போட்டிகள் இடம் பெறவுள்ளன. (ம-23)

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டம் இன்று வியாழக்கிழமை கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் வதிரிடைமன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம். (ம-23)

# உதைபந்தாட்ட காலிறுதியாட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம்

யாழ்ப்பாணம், நவ.10

வடமராட்சி கல்வி வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 16, 18 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் கால் இறுதி யாட்டங்கள் நேற்று முன்தினம் இடம் பெற்றன. இதில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:

**16 வயதுப் பிரிவு**

16 வயதுப் பிரிவு அணிகளுக்கான காலிறுதியாட்டத்தில் தேவரையாளி இந்துக் கல்லூரியை எதிர்த்து கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மோதிக் கொண்டது.

இதில் தேவரையாளி இந்துக் கல்லூரி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி மோதிக்கொண்டது.

இதில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய தேசிய பாடசாலையை எதிர்த்து கொற்றாவத்தை அ.த.க.பாடசாலை மோதிக்கொண்டது.

இதில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

நான்காவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியை எதிர்த்து இமையாணன் அ.த.க. பாடசாலை அணி மோதிக் கொண்டது. இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. அதில் இமையாணன் அ.த.க.பாடசாலை அணி.4:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

**18 வயதுப் பிரிவு**

18 வயதுப் பிரிவினருக்கான கால் இறுதி ஆட்டங்களில் முதலாவதுக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து தென்மாராட்சி வீரகத்தி மகாவித்தியாலய அணி மோதிக்கொண்டது.

இதில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடிமத்திய மகாவித்தயாலய தேசிய பாடசாலை அணி மோதிக்கொண்டது.

இதில் உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி அணியை எதிர்த்து தேவரையாளி இந்துக்கல்லூரி அணி மோதிக்கொண்டது.

இதில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணி 4: 0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

நான்காவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் விக்னேஸ்வராக் கல்லூரி அணிக்கும் உடுத்துறை மகாவித்தியால அணிக்கும் இடையிலான போட்டி இடம் பெறவிருந்தது.

இதில் உடுத்துறை மகா வித்தியாலய அணி மைதானத்துக்குச் சமூகம் தராமையால் விக்னேஸ்வர கல்லூரிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (ம-23)

# 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்டம் சனியன்று



யாழ்ப்பாணம், நவ.10

யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவ கழகங்களுக்கு இடையிலான 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளது.


இந்தப் போட்டியானது சனிக்கிழமை குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டியில் 15 மேற்பட்ட அணிகள் பங்கு கொள்ளவுள்ளன எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் கூறியுள்ளனர். (ம-23)

# வெற்றிபெற்ற அணிகள்

யாழ்ப்பாணம்,நவ.10

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைக்கு இடையில் இடம்பெற்ற 18 வயதுப்பிரிவு பெண்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்த வரோதய வித்தியாலயம் ஆகியன முதல் மூன்று இடங்களையும் பெற்றுள்ளன. (ம-23)



சென்.ஜோன்ஸ் கல்லூரி உதைபந்தாட்டத்தை வளர்க்கும் நோக்கோடு வருடாவருடம் நடத்தும் ஓய்வு பெற்ற அதிபர் அமலசீலன் உதைபந்தாட்ட கண்காட்சி நேற்று கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. போட்டியில் பங்கு கொண்ட வீரர்களைப் படத்தில் காணலாம். (23)

# சதுரங்கப் போட்டி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.10

இலங்கை சம்மேளனத்தால் நடத்தப்படும் கழகங்கள் பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்க சுற்றுப் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வைத்தீஸ்வரா கல்லூரியில் ஆரம்பமாகின்றது.

போட்டிகள் சனி, ஞாயிறு தினங்களும் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டி கடந்த 30 வருடங்களின் பின்னர் யாழ்.மாவட்டத்தில் இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

# தேசிய மட்ட உதைபந்து மானிப்பாய் இந்து வென்றி

கொழும்பு சென்.ஜோசப் கல்லூரி, தேசிய மட்ட ரீதியாக நடத்திய 5 பேர் பங்கு பற்றிய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் பிளேட் கிண்ணத்துக்கான 19 வயது பிரிவு அணிகளுக்கான உதை பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சம்பியனானது.

சென்.ஜோசப் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து டி.எஸ்.சேன நாயக்க கல்லூரி அணி மோதிக்கொண்டது.

ஆட்டம் தொடங்கிய முதல் இரண்டு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட போது மானிப்பாய் இந்துக்கல்லூரி



அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்துக்காக ஆரம்பமாகிய போது இரண்டு அணிகளும் தத்தமது அணிக்காக கோல்களைப் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர்.

இதன் பயனாக மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி மேலும் இரண்டு கோல்களைப் பெற்றது.

ஆட்டம் முடிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. (ம-23)

# யாழ்.வலயமட்ட போட்டியில் வெற்றி பெற்ற அணிகள்



யாழ்ப்பாணம்,நவ.10

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயது பிரிவு அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு.

கொக்குவில் இந்துக்கல்லூரி அணிக்கும் நாவாந்துறை ஆர்.சி வித்தியாலய அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

யாழ்.இந்துக் கல்லூரி அணிக்கும் யாழ்.மத்திய கல்லூரி அணிக்கும் இடையில் இடம்பெற்ற போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் உரும்பிராய் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# இந்தியா வென்றது

**மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்டின் இரண்டாவது இன்னிங்சில், சேவாக் (55), சச்சின் (76), லட்சுமண் (58 ஆட்டமிழப்பில்லை) அரைசதம் அடித்து கைகொடுக்க, இந்திய அணி 5 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.**

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட சச்சின், தனது 100 ஆவது சதத்தை நழுவவிட்டார்.

இந்தியாவுக்குப் பயணம் செய்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி, மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் டில்லியில் நடந்தது. முதல் இன்னிங்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 304 ஓட்டங்கள், இந்தியா 209 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாவது இன்னிங்சில் மேற்கிந்தியத் தீவுகள் 180 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர், 276 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இன்னிங்சை தொடக்கிய இந்திய அணி, மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 2 இலக்கு இழப்புக்கு 152 ஓட்டங்கள் எடுத்திருந்தது. சச்சின் (33), டிராவிட் (30) ஆட்டமிழக்காமல் இருந்தனர்


அரைச்சதம் விளாசிய சச்சின்



நேற்று நான்காவது நாள் ஆட்டம் நடந்தது. இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த இந்திய அணிக்கு டிராவிட் (31) ஏமாற்றம் அளித்தார். அடுத்து வந்த அனுபவ வீரர் லக்ஸ்மனுடன் இணைந்த சச்சின், டெஸ்ட் அரங்கில் தனது 62 ஆவது அரைசதத்தை பதிவு செய்தார். இவர், 148 பந்துகளில் 76 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, பிஷூ சுழலில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து நுழைந்த யுவராஜ் சிங்குடன் இணைந்த லக்ஸ்மன், டெஸ்ட் அரங்கில் தனது 55 ஆவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். வெற்றிக்கு ஓர் ஓட்டம் தேவைப்பட்ட நிலையில் யுவராஜ் சிங் (18), டரன் சமி பந்தில் 'கிளீன் போல்டானார்'. டோனியுடன் இணைந்த லக்ஸ்மன் ஒரு ஓட்டம் எடுக்க இந்திய அணி இரண்டாவது இன்னிங்சில் 5 இலக்குக்கு 276 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. லக்ஸ்மன் (58), டோனி (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர். மேற்கிந்தியத் தீவுகள் சார்பில் டரன் சமி 2, பிடல் எட்வேர்ட்ஸ், சாமுவேல்ஸ், பிஷூ தலா ஒரு இலக்கினை வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக அறிமுக ஆட்டத்திலேயே அசத்திய தமிழக வீரர் அஸ்வின் தெரிவு செய்யப்பட்டார். இதன்மூலம் இந்திய அணி, மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்று முன்னிலை வகிக்கிறது. (15)

**"இவ்விரு அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட், கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் எதிர் வரும் 14 ஆம் திகதி தொடங்குகிறது."**


வீழ்த்தப்படுகிறார் சச்சின்...

# பொறுமையே சாதித்தது

## ஆட்டநாயகன் அஸ்வின்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் சிறப்பாக பந்துவீசி இலக்குகளை வீழ்த்தியதற்கும் ஆட்ட நாயகன் விருதை தட்டிச் சென்றதற்கும் பொறுமையும், கடின உழைப்புமே காரணம் என்று இந்திய சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் 3 இலக்குகள் வீழ்த்திய அஸ்வின், இரண்டாவது இன்னிங்ஸில் 6 இலக்குகள் வீழ்த்தி அந்த அணியை சரிவுக்குள்ளாக்கினார். இதன் மூலம் அறிமுக டெஸ்ட் ஆட்டத்தில் சிறப்பாகப் பந்துவீசி அதிக இலக்குகள் வீழ்த்திய இந்திய வீரர்கள் வரிசையில் அஸ்வின் (9 இலக்குகள், 128 ஓட்டங்கள்) இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார். இதற்கு முன்னர் 1988 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் இந்தியாவின் நரிந்தர் ஹிர்வானி 136 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 16 இலக்குகளை வீழ்த்தியதே இன்றளவிலும் சாதனையாக உள்ளது.

இதுகுறித்து அஸ்வின் மேலும் கூறியதாவது:

டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் விளையாடுவேன் என்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை. இருப்பினும் சச்சின், டிராவிட் போன்ற ஜாம்பவான்களோடு சேர்ந்து விளையாடுவதை எனக்கு கிடைத்த மிகப் பெரிய வரமாகவே கருதுகிறேன். இதற்குமுன்பு டில்லி மைதானத்தில் விளையாடியதே இல்லை. அதனால் இந்த மைதானம் துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமானதா, பந்து வீச்சாளர்களுக்கு சாதகமானதா என்று எனக்குத் தெரியாது. முதலில் நான் பல்வேறு வகையான பந்து வீச்சைக் கையாண்டபோது மைதானம் எனக்கு சாதகமாக இல்லை. இருப்பினும் பொறுமையாக காத்திருந்து, கடினமாக உழைத்ததால் இங்கு இலக்குகள் எடுக்க முடிந்தது.

எனது பந்துவீச்சின் வேகத்தை அதிகரித்ததோடு, பல்வேறு வகையான உத்திகளையும் கையாண்டேன். முதல் ஆட்டம் என்பதால் நான் எவ்வித அச்சமும் கொள்ளவில்லை. நானும் மனதளவிலும் என்னை தயார் படுத்திக் கொண்டேன். சக வீரர்களும் எனக்கு ஆதரவாக இருந்தனர். ரஞ்சி கிரிக்கெட் ஆட்டத்தில் விளையாடியது மிகவும் உதவியாக உள்ளது.

மற்றவர்களுக்கும் டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடுவதற்கான வாய்பை ஏற்படுத்தும். டெஸ்ட், ரஞ்சி இரண்டுமே ஒரே மாதிரியான போட்டி. நான் அதிக அளவில் ரஞ்சி ஆட்டங்களை விளையாடியதில்லை என்றாலும், அந்த அனுபவம் எனக்கு மிகவும் உதவியாக இருந்தது என்றார். (15)


டிராவிட்டின் ஆட்டமிழப்பு

## விடுதலைப் புலிகளின் 7 கப்பல்களும் எங்கே...?

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

**சபையை இடைநிறுத்தி சபாநாயகர் தீர்ப்பு**

இருதரப்பினதும் சூடான விவாதங்களை அவதானித்த சபாநாயகர் உடனடியாகத் தமது தீர்ப்பை வழங்காமல் சபை நடவடிக்கைகளை அரை மணி நேரத்துக்கு இடைநிறுத்தி வைத்தார். மூன்று பத்து முதல் மூன்று நாற்பது மணிவரை சபை ஒத்தி வைக்கப்பட்டது.

சபை மீண்டும் கூடியபோது முக்கியத்துவம் மிக்க தமது தீர்ப்பை வழங்கினார். சட்டமூலம் தொடர்பான விவாதத்தை நடத்த அனுமதி வழங்கினார். அதற்கு அவர் இப்படியான கூற்றுகளை முன்வைத்தார்.

* நாட்டின் தேசிய முக்கியத்துவம் கொண்ட அவசரமான சட்டம் என அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

* அரசமைப்புக்கு முரணானது அல்ல என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

* தேசிய முக்கியத்துவமும் அவசரமும் கருதி ஏற்கனவே இவ்வாறான சட்டமூலங்கள் இவ்வாறு விவாதிக்கப்பட்டுத் தீர்மானிக்கப் பட்டுள்ளன.

* சிவில் நீதிமன்றங்களில் உள்ள மனுக்களைக் காட்டி விவாதத்தைப் பின்போடமுடியாது.

* நிலையியற் கட்டளையும் ஒழுங்கு விதிகளும் மீறப்படவில்லை.

எனவே இந்தச் சட்டமூலத்தை சபையில் விமர்சிக்க அனுமதிக்கின்றேன் எனத் தீர்ப்பளித்தார் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ.

**பாரத லக்ஷ்மனின் கொலையும் சரத் பொன்சேகாவின் சிறையும்**

சபாநாயகரின் தீர்ப்பை ஆளும் கட்சியினர் பெரும் ஆரவாரத்துடன் மேசைகளைத் தட்டி வரவேற்றனர்.

அதேவேளை ஐ.தே.க. உறுப்பினரான தயாசிறி ஜயசேகர தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார். அதையும் நாகரிகமான முறையிலேயே குறிப்பிட்டார்.

சபாநாயகரின் தீர்ப்பை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். அவரது தீர்ப்பு எமக்கும் சாதகமாகவே அமைந்துள்ளது. நீதிமன்றங்களின் முன் உள்ள விடயங்கள் நாடாளுமன்ற விவாதங்களுக்கு தடையாகாது. நாடாளுமன்றம் தன்னாதிக்கம் கொண்டது என்று குறிப்பிட்டார்.

இதனால் பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்ட பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலை தொடர்பாகவும், சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் விடயம் தொடர்பாகவும் நாங்கள் இந்தச் சபையில் பேசுவோம். அதற்கு வாய்ப்பு ஏற்படுத்திய சபாநாயகருக்கு நன்றி கூறுகின்றேன் என்றார் தயாசிறி ஜயசேகர.

**பிரதமரின் ஆவேசம்**

வழமையாகவே நகைச்சுவையாகப் பேசுபவர் பிரதமர் தி.மு.ஜயரத்ன. ஆனால் நேற்று மிகவும் ஆவேசம் கொண்டவர் போல் உரையாற்றினார்.

எதிர்க்கட்சியினர் கூறுவது போல் இது ஒன்றும் அரசியல் பழிவாங்கல் இல்லை. தனி நபர்களின் சொத்துகளை அபகரிக்கவும் இல்லை. ஏற்கனவே அரசாங்கத்தினால் வழங்கப் பட்டவை. அவற்றை உரிய முறையில் செயற்படுத்தத் தவறி உள்ளனர்.

இதனால் தொடர்ச்சியாக நஷ்டம் ஏற்பட்டு மூடப்பட்டுள்ளன. இவ்வாறான நிறுவனங்களை அரசு மீண்டும் பொறுப்பேற்று அவற்றுக்குப் புத்துயிர் அளிப்பதே இந்தச் சட்டமூலத்தின் நோக்கம் என்றார் பிரதமர்.

**கூச்சலும் குழப்பமும்**

ஆளும்தரப்பின் பிரதான பேச்சாளரான பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று நீண்ட நேரம் உரையாற்றினார்.

அவர் உரையாற்றும்போது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அதிரடி நடவடிக்கைகளையும் அவசரமாக நிறைவேற்றப்பட்ட சட்டங்களையும் சுவீகரிக்கப்பட்ட நிறுவனங்களையும் பட்டியல் போட்டுக் காட்டினார். இடைக்கிடையே எதிர்க்கட்சி உறுப்பினர்களைச் சீண்டியும் விட்டார்.

பஸில் ராஜபக்ஷவின் பேச்சு ஆளும்கட்சி உறுப்பினர்களுக்குக் 'குஷி' ஏற்படுத்தியது. இதனால் கூச்சலும் குழப்பமும் தொடர்ச்சியாக இடம்பெற்றன. அமைச்சரின் பேச்சைக் கூட முழுமையாகக் கேட்கமுடியவில்லை. சபையில் அமைதியை ஏற்படுத்துவதில் சபாநாயகரும் பெரும் சிரமப்பட்டார்.

**நாடாளுமன்றம் ஒரு றப்பர் ஸ்டாம்ப்**

பிரபல சட்டத்தரணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தனது வாதத் திறமையைக் காட்டத் தவறவில்லை. இந்தச் சட்டமூலம் தொடர்பாக ஏழு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நீதிமன்றங்களின் முன் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றுக்கான தீர்ப்புகள் இன்னும் வழங்கப்படவில்லை.

இவற்றைவிட பல நிறுவனங்கள் தமது நிறுவனங்கள் சுவீகரிக்கப் பட்டமை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் ஐந்து வருடங்களுக்கு மேல் கிடப்பில் இருக்கின்றன. இது யாருடைய தவறு?

இந்த அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை தம்வசம் வைத்துக்கொண்டு தான்தோன்றித்தனமாக எல்லாவிடயங்களையும் மக்களையும் கொண்டு நடத்துகின்றது. இந்த நாடாளுமன்றம் ஒரு றப்பர் முத்திரை போல ஒப்பம் இடுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது என்று சாடினார் சுமந்திரன் எம்.பி.

சூடான வாதப்பிரதிவாதங்கள், குத்தல் பேச்சுகள், கூச்சல் குழப்பங்கள் எதிர்க்கட்சிகளின் பலத்த எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் இந்தச் சட்டமூலம் ஆளும் கட்சியினரின் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

# நகராட்சி மன்றம், சாவகச்சேரி
## கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் என்னால் 21.11.2011 ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதே தினம் முற்பகல் 11 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலையின் பொருட்டு, நிர்மாண பயிற்சி நிலையத்தில், 30.04.2012 வரை வலுவுள்ள (ICTAD) தரம் C7 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் மட்டுமே கேள்வி கோருவதற்கு தகைமையுடையவராவர்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (+VAT) |
|---|---|---|---|
| 01. | சாவகச்சேரி இறைச்சிக்கடைத் தொகுதி கட்டட நிர்மாண வேலை | 25,000 | 1,120 |

கேள்விப்பத்திரங்கள் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் 18.11.2011 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மேற்குறிப்பிட்ட கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி தவிசாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி என முகவரியிடப்பட்டு, நேரடியாகப் பெட்டியில் இடப்படவேண்டும். இணைப்பிரதி, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், பண்ணை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 21.11.2011 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

மேற்படி கேள்வியானது உறையிடப்பட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.
10.11.2011.

இறப்பியேல் தேவசகாயம்பிள்ளை
தவிசாளர்,
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

(4-25-6) (சி/ 2859)

# சாவகச்சேரி நகர சபை
## 2012 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகளை 2012 ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்கழி 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 25.11.2011 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணி வரை சாவகச்சேரி நகர சபை அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று முற்பகல் 11.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை தலைவர், சாவகச்சேரி நகர சபை, கண்டி வீதி, சாவகச்சேரி என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு, தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும், அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்துக்கு முன் இடுதல் வேண்டும்(எந்தக் காரணம் கொண்டும் அன்று முற்பகல் 10.00 மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது) இணைப் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமும் செலுத்தி நகரசபை அலுவலகத்தில் 24.11.2011 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடைகளுக்குரிய கேள்விகாரர் கேள்வித்தொகையின் 2/3 பகுதியை 02.12.2011 ஆம் திகிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளவேண்டும். மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### 2012 ஆம் ஆண்டு இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இ. | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதர வரிகள் தவிர) | கேள்விவைப்பு பணம் (மீளளிக்க கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | மாட்டிறைச்சிக்கடை 01 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை 02 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக்கடை 01 | 700,000.00 | 7,000.00 | 1,000.00 |
| 04 | ஆட்டிறைச்சிக்கடை 02 | 700,000.00 | 7,000.00 | 1,000.00 |
| 05 | கோழி இறைச்சிக்கடை 01 | 500,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 06 | கோழி இறைச்சிக்கடை 02 | 500,000.00 | 5,000.00 | 1,000.00 |

குறிப்பு: நகர சபை கோழி இறைச்சிக்கடைகளிலிருந்து 500 மீற்றர் சுற்றுவட்டடாரத்துக்குள் தனியார் எவரும் கோழி இறைச்சி விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.
10.11.2011

இ.தேவசகாயம்பிள்ளை,
தவிசாளர்,
நககராட்சிமன்றம், சாவகச்சேரி.

(சி/2850)(3,25,6)

**மன்னார், முல்லை....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இந்தச் செயல் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்துக்கு எதிரானது என்பதுடன் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் நடவடிக்கையுமாகும்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வினோநோகராதலிங்கமும் சிவசக்தி ஆனந்தனும் தெரிவித்துள்ளனர்.

இந்த இடமாற்றத்தைத் தடுத்து நிறுத்தும்படி கேட்டு ஜனாதிபதிக்கு அவர்கள் அவசர கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.

மன்னார் அரச அதிபராக இருந்த நீக்கலஸ்பிள்ளை, ஓய்வு பெறும் நேரத்தில் அரசியல் பழிவாங்கல் காரணமாக் கொழும்பு பொது நிர்வாக அமைச்சுக்கு மாற்றப்பட்டார் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக் காட்டி உள்ளனர். (160)

---

**சபையில்....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி நேரத்தின் போது சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கா ஜயரத்னவிடம் மிஹின் லங்கா விமானசேவை நிறுவனத்தின் இலாபம் நஷ்டம் தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்தக் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் தெளிவில்லாத வகையில் பதிலளித்தார். அதாவது கோடிக் காணக்கான ரூபா தொடர்பான கணக்கை தட்டுத் தடுமாறிக் கூறினார்.

அமைச்சரின் பதில் தெளிவில்லாததனால் அநுர குமார எம்.பி அதனை மில்லியன்களில் கூறுமாறு அமைச்சரைக் கேட்டார்.

அமைச்சர் தடுமாறிப் போனார். நிலைமையைப் புரிந்து கொண்ட மற்றொரு அமைச்சர் அருகில் வந்து மில்லியன்களில் பதிலளிக்க உதவினார்.

பதிலளிக்க உதவிய அமைச்சர் எஸ்.பி திஸநாயக்க சிரித்துக்கொண்டே தனது ஆசனத்துக்கு சென்று அமர்ந்து கொண்டார். (ஒ)

# அறிவித்தல்
## 60 அடி தொலைத்தொடர்புக் கோபுரம் அமைத்தல்
### கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

இல.243, கச்சேரி நல்லூர் வீதியில் (60) அறுபது அடி தொலைத் தொடர்புக் கோபுரம் அமைப்பது தொடர்பாக மாநகர சபையில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இத்தொலைத் தொடர்புக் கோபுரம் அமையவுள்ள சூழலில் வசிக்கின்ற பொது மக்கள் இத்தொலைத் தொடர்புக் கோபுரம் இச்சூழலில் அமைவதால் ஏதேனும் பாதிப்பு தங்களுக்கு ஏற்படும் எனக்கருதுவார்களாயின் தங்களது அபிப்பிராயத்தினை இத்திகதியிலிருந்து பதினைந்து (15) நாள்களினுள் யாழ். மாநகரசபைக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மாநகர முதல்வர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

(சி-5703)(1,6,25)


# அறிவித்தல்
## 60 அடி தொலைத்தொடர்புக் கோபுரம் அமைத்தல்
### ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.

இல.18,20 ஈச்சமோட்டை வீதியில் (60) அறுபது அடி தொலைத் தொடர்புக் கோபுரம் அமைப்பது தொடர்பாக மாநகர சபையில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இத்தொலைத் தொடர்புக் கோபுரம் அமையவுள்ள சூழலில் வசிக்கின்ற பொது மக்கள் இத்தொலைத் தொடர்புக் கோபுரம் இச்சூழலில் அமைவதால் ஏதேனும் பாதிப்பு தங்களுக்கு ஏற்படும் எனக் கருதுவார்களாயின் தங்களது அபிப்பிராயத்தினை இத்திகதியிலிருந்து பதினைந்து (15) நாள்களினுள் யாழ். மாநகரசபைக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மாநகர முதல்வர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

(சி-5704)(1,6,25)

# மரண அறிவித்தல்



## மயில்வாகனம் கந்தையா
### (ஓய்வுபெற்ற ஆசிரியர் - சிறுப்பிட்டி)

யாழ்ப்பாணம், சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், தற்காலிகமாக கொழும்பில் வசித்து வந்தவருமான மயில்வாகனம் கந்தையா அவர்கள் 08.11.2011 செவ்வாய்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் வள்ளிப்பிள்ளை ஆகியோரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற தம்பிநாதன் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவஞானசூரியர், ஜெயபாலகணேசன், பரிமளாதேவி, இரஞ்சினிதேவி, சிவநேசன், விமலாதேவி, நித்தியானந்தன், சுசீலாதேவி, வசந்தாதேவி, இராஜேஸ்வரன், சத்தியசீலன் காலஞ்சென்ற சச்சிதானந்தன் ஆகியோரின் அன்பு தகப்பனாரும் அம்பிகாதேவி, ஸ்ரீகாந்தா, பத்மராஜன், பாலச்சந்தர், நந்தினி, பாலேந்திரன், யசோதா, தர்மதேவி, கேதீஸ்வரி காலஞ்சென்ற ராஜ்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், சௌமியா, பிரசன்னரூபன், சுஜிதா, லஜிதா, பாவுகா, செந்தூரன், அனித்தா, ஜீவகி, சரவணன், சுகிர்தினி, நிரோஷினி, தக்ஷிணி, ஆரூரன், ஆர்த்திகன், பாவுதரன், காத்தியாயனி, கஜானன், சபேசன், புவனி, தேவுசா, சாம்பவி, காலஞ்சென்ற திவ்யசொரூபினி, காலஞ்சென்ற ராஜீ ஆகியோரின் பாட்டனாரும் அபிலாஷ், அபிஷேக், சாரங்கன், கவிஷன், மிர்தி ஆகியோரின் பூட்டனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 10.11.2011 இன்று காலை 8.00 மணிமுதல் 11.00 மணிவரை இலக்கம் 511 மஹிந்த மலர்ச்சாலை, காலி வீதி கல்கிசையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கல்கிசை பொது மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தயவாக கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள்**

## ஐ.தே.கவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாதன் இராஜினாமா செய்யவுள்ளார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த பொதுத் தேர்தலில் ஜனநாயக மக்கள் முன்னணி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், தொழிலாளர் தேசிய சங்கம் உள்ளிட்ட கட்சிகள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஐக்கிய தேசிய முன்னணி என யானைச் சின்னத்தில் போட்டியிட்டன. இத்தேர்தலில் மனோ கணேசன் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார்.

அந்தத் தேர்தலில் ஜனநாயக மக்கள் முன்னணிக்கு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி ஒன்று வழங்கப்படும் என ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருந்தார். எனினும், பின்னர் அது வழங்கப்படவில்லை. இதனால் ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து விலகி ஜனநாயக மக்கள் முன்னணி சுயாதீனமாகச் செயற்படத் தொடங்கியது.

அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாநகர சபையை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியது. ஆயினும் சபையில் நிலையான ஆட்சியை வழங்குவதற்கு ஐ.தே.க ஜனநாயக மக்கள் முன்னணியின் ஆதரவை நாடியிருந்தது.

இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க லண்டன் செல்வதற்கு முன்னர் மனோ கணேசனுக்கு கடிதம் ஒன்றை எழுதியதோடு 8 ஆம் திகதி (நேற்றுமுன்தினம்) கொழும்பு மாநகர சபைக் கூட்டத்தில் தமது கட்சிக்கு ஆதரவு அளிக்குமாறும் தான் லண்டனில் இருந்து திரும்பியதும் உடன்படிக்கைகள் செய்து கொள்ள முடியும் எனவும் கூறியிருந்தார்.

இதுவரை வெளியிடப்படாத அந்த உடன்படிக்கையின் படியே மனோ கணேசனுக்கு தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படவுள்ளது எனத் தெரிகின்றது.

இந்தச் செய்தி தொடர்பில் மனோ கணேசனுடன் தொடர்பு கொண்டுகேட்டபோது -அவ்வாறானதொரு தகவலோ அறிவித்தலோ தனக்கு உத்தியோக பூர்வமாக இதுவரை கிடைக்கப்பெறவில்லை என 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

(ஒ-சி)

### பாராட்டி வாழ்த்துகிறோம்



எமது இணுவை மைந்தனும்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபரும் ஆகிய
**திரு. ஆறு.திருமுருகன்**
அவர்கள் கௌரவ கலாநிதிப் பட்டம்
பெற்றுக் கௌரவிக்கப்பட்டமையையிட்டு
எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.
கணேசன் கருணை நிதியம் இணுவில்,
இணுவில் இந்து கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்,
இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் அடியார்கள்.

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு BMICH இல்
07.11.2011 நடைபெற்ற
8 ஆவது பட்டமளிப்பு விழாவில்
உயர் தேசிய கணக்கியல்
டிப்ளோமா (HNDA) பட்டம்பெற்ற
**செல்வி நிருபா கருணாகரன்**
அவர்களை மேலும் பல பட்டங்கள்
பெற்று உயர்வு நிலையடையப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துபவர்கள்: வ.திருஞானசம்பந்தர் குடும்பம்

### வாழ்த்துகிறோம்

யா/இணுவில் இந்துக்கல்லூரி அதிபர்
**திரு. சு.சண்முககுலகுமாரன்**
(M.Ed, B.A, Dip. in Edu, Sc. Trd, SLPS.)
ஜனாதிபதி அவர்களின் விருது
'குரு பிரதீபா பிரபா'
கிடைத்தமையையிட்டு
வாழ்த்துகின்றோம்.



இணுவில் இந்துகல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்.

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர் கந்தர் ஆறுமுகம்**

*பிறப்பு:*
*18.10.1924*

*இறப்பு:*
*11.10.2011*



கடந்த 11.10.2011 அன்று இறைபதமடைந்த எமது தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு ஆறுதல் கூறி எமது துயரில் பங்கேற்ற அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (10.11.2011) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மணல்பகுதி, புத்தூர். (10258) (2-6-25) பிள்ளைகள்

## சம்பூர்.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணவக்க ஜனாதிபதியுடன் இணைந்து இதுகுறித்தான நீண்ட விளக்கமொன்றை இந்தியப் பிரதமருக்கு வழங்குவாரெனக் கூறப்படுகிறது.

முன்னதாக, இந்த இறுதி ஒப்பந்தத்தைச் செய்வதற்கு இந்திய மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சர் இலங்கை வர ஏற்பாடாகியிருந்தது. ஆனால், சில தொழில்நுட்பக் காரணங்களுக்காக ஒப்பந்தக் கைச்சாத்திடலை உடனடியாகச் செய்யமுடியாத நிலை இலங்கை அரசுக்கு உருவானது. இறுதி ஒப்பந்தக் கைச்சாத்திடல் குறிப்பிட்டபடி நடைபெறாத காரணத்தினால் இந்தியத் தரப்பு பெரும் அதிர்ச்சிக்குள்ளானது.

எவ்வாறாயினும், சார்க் கூட்டத்திற்காக மாலைதீவு புறப்பட முன்னர் மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சருடன் விசேட ஆலோசனையொன்றை நடத்திய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஒப்பந்தக் கைச்சாத்திடலுக்குத்தடையாக இருக்கும் தொழில்நுட்பச் சிக்கல்களைத் தீர்த்து எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில் ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட நடவடிக்கை எடுக்குமாறு பணித்திருக்கிறாரென அறியமுடிகின்றது.

இந்த முடிவே மாலைதீவில் இந்தியப் பிரதமருக்கு அறிவிக்கப்படவுள்ளது. இதன்படி பெப்ரவரி மாதமளவில் இந்த ஒப்பந்தக் கைச்சாத்து இடம்பெறும்.

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## 2012 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பவற்றை 2012.01.01 தொடக்கம் 2012.12.31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன:

**அட்டவணை**

| தொ. இல. | சந்தைகள் இறைச்சிக் கடைகள் கருவாட்டுக்கடைகள் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 01. | சுன்னாகம் மத்திய சந்தை (துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் உட்பட) | 2,000 | 30,000 | 9900000 | - |
| 02. | உடுவில் கீரிச்சந்தை | 1,000 | 10,000 | 130,350 | - |
| 03. | சுன்னாகம் மாட்டிறைச்சிக்கடை இல. 1 | 1,000 | 10,000 | 1,323,100 | 250 |
| 04. | சுன்னாகம் ஆட்டிறைச்சிக்கடை இல. 2 | 1,000 | 10,000 | 193,050 | 250 |
| 05. | கருவாட்டுக்கடை இல. 3 | 750 | 7,500 | 44,550 | 250 |
| 06. | கருவாட்டுக்கடை இல. 4 | 750 | 7,500 | 44,550 | 250 |
| 07. | சுன்னாகம் மாட்டிறைச்சிக்கடை இல. 5 | 1,000 | 10,000 | 1,000,000 | 250 |
| 08. | கோழிக்கடை இல. 6 | 750 | 7,500 | 89,900 | 250 |
| 09. | கோழிக்கடை இல. 7 | 750 | 7,500 | 67,650 | 250 |
| 10. | கோழி உரித்தல் | 750 | 7,500 | 57,200 | 250 |
| 11. | பொது மலசலகூடம் (சுன்னாகம் பஸ் தரிப்பிடத்துக்கு அருகில்) | 750 | 7,500 | 29,950 | — |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 01. | மருதனார் மடம் சந்தை (துவிச்சக்கர வண்டித்தரிப்பிடம் உட்பட) | 2,000 | 30,000 | 14,410,000 | — |
| 02. | மல்வம் மாட்டிறைச்சிக்கடை (கொத்தியாலடி கொல்களத்தில் மாடுகள் வெட்டப்படல் வேண்டும்) | 1,000 | 10,000 | 66,550 | — |
| 03. | இணுவில் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை (கொத்தியாலடி கொல்களத்தில் ஆடுகள் வெட்டப்படல் வேண்டும்) | 500 | 5,000 | 66,550 | 250 |
| 04. | மல்வம் சந்தை | 500 | 5,000 | 49,500 | — |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 01. | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை (கொத்தியாலடி கொல்களத்தில் மாடுகள் வெட்டப்படல் வேண்டும்) | 500 | 5,000 | 60,500 | — |

1. கேள்விப்பத்திரம் வழங்கும் காலம்: 11.11.2011 - 24.11.2011 பி.ப. 2.00 மணிவரை.
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல்: 25.11.2011 நண்பகல் 12.00 மணிவரை.
3. கேள்விப்பத்திரம் திறக்கப்படுதல்: 25.11.2011 பி.ப. 2.00 மணிக்கு.
4. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை 'தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்' என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
5. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டுவருவதுடன் முக்கியமாக தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச்சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. உள்ளூராட்சி மன்றங்களினால் ''தவறுனராக'' கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
7. கேள்விப்படிவக்கட்டணம், கேள்வித்தொகை, மாதவாடகை என்பவற்றுக்கு 12% பெறுமதி சேர் வரியும் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும், காலத்துக்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்.
8. தெரிவுசெய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பங்குத்தொகையை 2011.12.02 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவதுடன் மிகுதி 2/3 பங்கு தொகைக்கு வங்கியில் தங்கள் பெயரில் வைப்புச் செய்தமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்து ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். ஏனைய சந்தைகள் இறைச்சி கருவாட்டுக்கடைகளுக்குரிய சித்திகரக்கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/2 பங்குத்தொகையை 2011.12.02 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ளவேண்டும்.
9. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டுவரும் பொருள்களின் விற்பனை விலையில் 4% க்கு மேல் வரி அறவிடக்கூடாது.
10. இறைச்சிக்காக கன்று ஈனக்கூடிய பசுக்களையோ மறி ஆடுகளையோ அறுப்பது தடை செய்யப்படும் எனினும் கன்று ஈனமுடியாத பிரயோசனமற்றதென மிருகவைத்தியர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் மாடு, ஆடுகளை அறுப்பதற்கு அனுமதி வழங்க முடியும்.
11. பொது மலசலகூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக்கூடாது.
12. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக்கடைக்கு கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிப்பவர் குறிப்பிட்ட இடத்தின் காணி உரிமையாளர்களின் சம்மதக்கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.
14. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
15. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
16. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.
09.11.2011

தி.பிரகாஷ்,
தவிசாளர்.

# NALRAVI
## SPOKEN ENGLISH

பயிற்சி நெறியைப் பற்றி:

- 100 மணி நேர/3 மாத கால கற்கை நெறி
- முற்றுமுழுதாக ஆங்கிலச் சூழலை ஏற்படுத்தி அதிக நேரப் பேச்சுப் பயிற்சி
- விரிவான இலக்கண விளக்கங்கள் (IELTS கற்கை நெறிக்குச் சமமான இலக்கணப் பகுதிகள்)
- வீட்டில் சுயமாக பயிற்சி பெற ஆங்கில ஆசிரியர் திரு. ஜெய நல்ரவியின் குரலில் பிரித்தானிய உச்சரிப்பு முறையில் தமிழ் விளக்கங்களுடன் கூடிய 3 AUDIO CDக்கள்
- ஒவ்வொருவரிடமும் அன்பான முறையில் தனிப்பட்ட கவனம்

**ஆங்கிலம் சற்றேனும் பேச முடியாதவர்களுக்கு விசேட வகுப்புகள்**

யாருக்காக:

- 16 வயதிற்கு மேற்பட்ட ஆங்கிலம் பேச ஆசைப்படும் அனைவருக்கும்
- பல பேச்சு ஆங்கில வகுப்புகளுக்குச் சென்று ஆங்கிலம் பேச முடியாதவர்களுக்கும்

வகுப்பு நேரங்கள்:

- BATCH 1 - சனி காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 2 - சனி மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 3 - ஞாயிறு காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 4 - ஞாயிறு மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 5 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 6 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் மாலை மட்டும் வகுப்புகள்




**NALBON**
INSTITUTE OF ENGLISH STUDIES
*We are born for your bond*

| Head Office | Jaffna Branch |
| --- | --- |
| 527 2nd Floor | 62/20 3rd Floor |
| Galle Road Colombo 6 | Stanley Road Jaffna |
| Tel 0112 363656 Fax 2360004 | Tel 021 221 9 221 |

Website www.nalravi.com E-mail nalravi@yahoo.com

(NALRAVI ENGLISH LANGUAGE CENTRE சர்வதேச வலையமைப்பில் இணைந்து கொள்ளும் நோக்கோடு NALBON INSTITUTE OF ENGLISH STUDIES எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.)


## டெங்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தராஜா முன்னிலையில் சந்தேக நபரை நேற்று ஆஜர் செய்தனர். சந்தேக நபர் பிளாஸ்ரிக் கழிவுப் பொருள்களை நீர் தேங்கி நிற்கும் வகையில் வைத்திருந்ததை ஒப்புக் கொண்டதை அடுத்து அவருக்கு நீதிவான் ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

(த-4)


**அரசியல் - K.சுகாஷ் (LLB)**

2013 - ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்
2012 - இலங்கை அரசியல், Paper Class

புதிய பிரிவுகள் ஆரம்பம் - 12.11.2011 (சனி)

**DCM**

| | |
| --- | --- |
| யாழ்.நகர் (வேம்படி மகளிர் கல்லூரி அருகில்) | மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர் (BEACON) |

**G.A.Q அரசியல்**
**K.சுகாஷ் (LLB)**
**யாழ், பேராதனை**

ஆரம்பம் - 12.11.2011 (சனி)

**DCM**

மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர் (BEACON)

**சிட்டை எழுதுநர் (பெண்) தேவை (Bill Clark)**

சிட்டை எழுதுநர் (பெண்) தேவை.
விருப்பமுள்ளவர்கள் நேரில் வரவும்.
தொடர்பு: வீனஸ் பாம்
முத்துத்தம்பி மகாவித்தியாலய வடக்கு ஒழுங்கை,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.
*அல்லது*
வீனஸ் கட்டட பொருள் விற்பனை நிலையம்,
நட்டா தெருச் சந்தி அரசடி வீதி, யாழ்ப்பாணம்.


## பரந்தன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிக்கப்பட்டுள்ளது என அரச வளங்கள் மற்றும் வர்த்தக அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்காக இந்தியா, அயர்லாந்து, டுபாய் ஆகிய நாடுகளின் முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்கு முன்வந்துள்ளனர் என்றும், அரசின் கொள்கைகளுடன் உடன்படும் முதலீட்டாளர்களை இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் நிமல் அபேசிறி தெரிவித்துள்ளார்.

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தை மீள நிர்மாணிப்பதன் மூலம் நாட்டில் பற்றாக்குறையாகவுள்ள குளோரின் மற்றும் கொஸ்ரிக் சோடா தேவையைப் பூர்த்திசெய்ய முடியுமென்றும் அதன் தலைவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## சம்பள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டன.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தங்களுக்கான சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர்.


**ஓமான் - டுபாய் - ஜோர்தான் வெளிநாட்டு வேலைகள்**
**உடனடிப் பயணம்**

**ஓமானில் வேலையாள்களாக ஆண்/பெண் இருபாலருக்கும் 200 வேலைகள்**

இலவச உணவு + தங்குமிட வசதி + மருத்துவம் முன் அனுபவம் தேவையில்லை
ஆண்கள் மற்றும் பெண்களுக்கான வேறுபல வேலைகள்.
நாங்கள் 20 வருடங்களுக்கு மேலாக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட
வெளிநாட்டு வேலை வழங்கும் சேவையில் உள்ள நிறுவனம்

**குமார இன்ரநஷனல் (தனியார்) லிமிட்டெட்**
குமாரசிங்க கட்டடம், அவெரிவத்த.
கட்டுநாயக்கா - 011 225 9314 , 0778200388
பதிவு இல . 643 யாழ்ப்பாணம் - தேவகி 0774658346
(10225) (3-19-7)

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

A/L எழுதிய மாணவர், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் நுழைவு மாணவர், பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர் கலந்துகொள்ளும்

**இலவச ஆங்கில வகுப்பு (English Workshop)**

10.11.2011 வியாழக்கிழமை (போயா விடுமுறை)
பிரிவுகள் : (ஆறு பிரிவுகளில் ஏதாவதொரு பிரிவில் சேரலாம்)
காலை : 8-9.30, 9.30-11, 11-12.30
மாலை 1-2.30, 2.30-4, 4-5.30

இலவச வகுப்பு ஊடாக வார மற்றும் வார இறுதி பயிற்சிநெறியில் சேரலாம்

**MyWay** 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

# MARSHA SYSTEMS (PVT) LTD.

*Solution to the People*

**வன்னி மண்ணில் Marsha வின் 7ம் புதிய உதயம்**

**இன்று காலை 8.05 முதல் 9.00 மணிவரையுள்ள சுப நேர வேளையில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளது.**

**யாழ் நகரில் கணனி விற்பனையில் 7 வருட முன்னோடிகளாகிய நாம் இன்று வன்னி மண்ணில் கால் பதிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.**

:: COMPUTERS
:: LAPTOPS
:: COMPUTER ACCESSORIES




**கணனி உலகின் சாம்ராஜ்யம் Marsha Systems**

நாளை கிளி.மத்திய கல்லூரி மைதானத்தில்
ராகம்ஸ் இசைக்குழுவின் இசைச் சங்கமம்
மலை 6.30 மணிக்கு நடைபெறுகின்றது. அனைவரும் வருக

**எமது காட்சியறைகள்**
:: யாழ்ப்பாணம்
:: கிளிநொச்சி
:: வல்வெட்டித்துறை

www.marshasystems.lk

74, A9 வீதி ஆனந்த புரம்,
கிளிநொச்சி
தொ.பே. 021 4923525


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.